ஜனவரி 2017
ඔලිඅරසි
OLIARAZI
மாதாந்த குடும்பச் சஞ்சிகை

# ஒளி அரசி

நல்லதொரு குடும்பம்
ஒளி 04 இதழ் 01
மங்கையரின் தோழி
பக்கங்கள் : 100 (68 + XII + 12 + VIII)

அன்பு + அறிவு + அழகு + திறன் + முயற்சி + வெற்றி + பாராட்டு

அரசியலோ பாலியலோ கலக்காத ஒரு பரிணாமப் படைப்பு

ரூபா 75





09.01.2017 அன்று
தனது 11வது பிறந்த நாளைக்
கொண்டாடவிருக்கும்
**லக்ஷனியா** வுக்கும்



18.01.2017 அன்று
தனது 9வது பிறந்த நாளைக்
கொண்டாடவிருக்கும்
**வர்ஷா** வுக்கும்

எமது இதயம் கனிந்த

## பிறந்த நாள் வாழ்த்துக்கள்

உற்றார் உறவினர்கள் நண்பர்கள்
மற்றும் United நிறுவன ஊழியர்கள்

---

29.01.2017 அன்று
தனது 5வது பிறந்த நாளைக்
கொண்டாடவிருக்கின்ற
**சபேஷ்** க்கு




எமது இதயம் கனிந்த

## பிறந்த நாள் வாழ்த்துக்கள்

உற்றார் உறவினர்கள்
மற்றும் நண்பர்கள்

# தைப்பொங்கல் படையல்கள்


56 அழகின் மகத்துவம்

56 பாசபந்தம்

36 பொங்கட்டும் தமிழ்

24 இப்படியும் ஆடை வாங்கலாம்

13 உண்மைக்காதலை அறிவது எப்படி


36 நிஜத்தில் பூத்த பொய்கள்

36 இசை-இறை-ஒற்றுமை

60 மனமே மயங்காதே

46 நிதானமாக தடம் பதியுங்கள்

36 தடை தகர்

# தை பொங்கல் வாழ்த்துக்கள்



# அத்திவாரங்கள் அழகற்றவை.

**வாசகர்களே, வணக்கம்! உங்கள் அனைவருக்கும் எமது உழவர் திருநாள் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்**

வீடு என்பது மண்ணாலும் கற்களாலும் ஆனது. அதுபோல் ஒரு குடும்பம் என்பது அன்பாலும் பாசத்தாலும் ஆனது. அந்தப்பாசப்பிணைப்பு இன்று கொஞ்சம் கொஞ்சமாக மனித மனங்களிலிருந்து கழன்றுகொண்டிருக்கிறதோ என்கின்ற ஐயப்பாடு தோன்றுகிறது. பெற்றோர் அன்பு, சகோதர பாசம், உறவுத்தொடர்புகள் எல்லாம் குறைந்து வருகிறது.

இரத்த உறவு சொந்தங்கள் கூட அந்நியமாகிவிட்டது. அருகில் இருந்தும் அண்ணன் யாரோ தம்பி யாரோ என வாழும் நிலை இன்று நம் சமுதாயத்தை வாட்டி வதைக்கின்றது. நீயும் நானும் ஒருதாய் வயிற்றில் பிறந்ததே பாவம் என்றெண்ணி காலம் காலமாக உள்ளத்தில் வஞ்சத்தையும் முகத்தில் கோபத்தையும் சுமந்து கொண்டு வாழ்கின்றனர் சிலர்.

கோவிலிற்குள் செல்லும்போது கால் செருப்பை கழற்றி விட்டுவிட்டே செல்கின்றோம். அவ்வாறே வீட்டினுள் செல்லும்போதும் செய்கின்றோம். வீடு என்பது கோயிலிற்குச் சமனான ஒன்றாக மதிக்கப்படவேண்டியதாகும். அதாவது ஒரு வீட்டை தாங்குவதில் அத்திவாரம் எந்த அளவிற்கு பங்காற்றுகின்றதோ அதேபோன்று ஒரு மனிதனைத் தாங்குவதில் அப்பா, அம்மா, ஆசிரியர் ஆகிய மூவருமே முக்கிய பங்குவகிக்கின்றனர். அவர்களை எப்போதும் நன்றியோடு நினைக்கவேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

அவர்கள் எம்மோடு இருக்கும்போது அவர்களின் தேவை பெரிதாகத் தோன்றுவதில்லை. அவர்கள் அருகில் இல்லாத வேளைகளில்தான் அவர்களின் அவசியம் புரியும். அதாவது எமது இரண்டு கைகளில் ஒன்று தன் செயற்பாட்டை இழந்துவிட்டது என்றால் அடக்கடவுளே எனது கை



கை இப்படி ஆகிவிட்டதே, என கதிகலங்கிப்போவோம். அதனை பல தடவை தூக்க முயற்சித்து தோற்றுப்போவோம். அப்போது மனதில் ஒருவித வேதனை தோன்றும். குழந்தைகள் என்ற தோற்றம் மாறி இளமைப் பருவத்தில் நாம் காலடி பதிக்கும் வேளையில் எமது பெற்றோர் நாம் எதிர்பார்க்கும் தோற்றத்தில் இருக்கமாட்டார்கள். சற்று உடல் தளர்ந்து, பார்வைத்திறன் குறைந்து, மறதி அதிகரித்து முதுமைத் தோற்றத்தை தொட்டவர்களாகவே காணப்படுவர். அவ்வேளை நாம் சற்றே எடுப்பாகத் தான் காணப்படுவோம். எமக்கேற்ற உணவு சமைக்கவில்லையென்றால் பசிக்கவில்லை, என்பதும் இதென்ன சாப்பாடு? மனுசன் சாப்பிடுவானா, இதை என்பதும் சர்வசாதாரணம். ஆனால் காலம் பறந்து அப்பா அம்மாவின் நிலைகளை நாம் எட்டுகின்றபோதுதான் அந்த தியாகத்தின் அளவு நமக்கு புரியும்.

தாத்தா பாட்டியின் தியாகம்தான் எமது அம்மா, அப்பா - அம்மா அப்பாவின் தியாகம்தான் நாம். எமது பாலர் பருவம் தொடக்கம் வாலிபம் வரை கற்பித்த ஆசான்களின் தியாகம் தான் எமது ஆளுமை. சிறு வயதில் எம்மை தாங்கிய பெற்றோரை முதுமைப்பருவத்தில் நாம் தாங்கவேண்டும். எம்மை பாலூட்டி சீராட்டி வளர்க்கும் போது எம்மீதான அவர்களின் எதிர்பார்ப்பு இதுவாகத்தான் இருக்கிறது. அவர்கள் தோள் சாயும் காலத்தில் நாம் விலகி நிற்பது முறையான செயலல்ல.

அப்பாவும் அம்மாவும் ஆசானும் தான் எமது வாழ்வை அசையாமல் நிலைநிறுத்தும் அத்திவாரங்கள். அத்திவாரத்தை யாரும் அழகுபடுத்துவதில்லை. அதன் அழகு என்பது அதன் உறுதிமட்டும் தான். தளராத அதன் உறுதியின் மூலமே கட்டடங்கள் மேலே மேலே உயர்ந்து செல்கின்றன. அந்த அத்திவாரங்களை எமது அன்பினால் மட்டுமே அழகுபடுத்தமுடியும்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பர். தை பிறந்த இனிய நன் நாளில் அன்பினால் அனைவரும் ஒன்றிணைவோம்.

பிரதம ஆசிரியர்

## அரசியின் உதவிக்கரம் :-

**உதவி (1)**

### கல்விக்கும் அறிவியலுக்கும் கரம் கொடுப்போம்


ஒளிஅரசி நான்காம் ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ள இவ் மகிழ்வான தருணத்தில் போரினால் அல்லது அசாதாரணமான விபத்துக்களால் பாதிக்கப்பட்டு கல்விப்புலமை அதிகம் இருந்தும்வறுமையின் நிமித்தம் கல்வி கற்பதற்கு முடியாமல் சிரமப்படும் மாணவர்களுக்கும், கலை வளர்க்க சிரமப்படும் கவிஞர்களுக்கும் நிதியுதவி வழங்கும் செயற்றிட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளோம்.




இந்த வகையில் ஜனவரி மாதத்திற்கான உதவி செயற்றிட்டத்தில் ஒளிஅரசியின் நிபுணத்துவ ஆசிரியரான மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைச்சேர்ந்த இ.ஜனதன் என்பவர் மன்னாரைச்சேர்ந்த பி.பெனில் என்பவருக்கு ரூ. 5000 இனை நன்கொடையாக வழங்குகின்றார். பெனில் சக்கர நாற்காலியோடு வாழும் ஒரு கவிஞன். இது வரை இரண்டு கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார். இவர் தனது சிறுவயதிலேயே விபத்தில் முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டு பதின் மூன்று வருடங்களிற்கு மேலாக பல சிரமங்களுடன் வாழ்ந்து வருகின்றார். இரக்க சிந்தை கொண்ட லீனா என்பவர் இவரைத்திருமணம் செய்துள்ளார். இவர்களின் வாழ்வாதாரம் என்பது மிகுந்த வலியுடனே நகர்கிறது. இவரது கவிப்புழமையை மேலும் சிறப்பூட்டுவதற்கு தேவையான நல்ல புத்தகங்களை வாங்குவதற் காக இந் நிதி வழங்கப்படுகின்றது.

வாசகர்களே, நீங்களும் இவர்களைப் போன்றவர்களுக்கு உதவ விரும்பினால் அல்லது உதவி தேவைப்பட்டால் எமது அசிரிய பீட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு :
E-mail : oliarazi33@gmail.com, 0114320695 - 0714 273035



# பொங்கலோ பொங்கல்

தைப்பொங்கல் என்பது தமிழர்களின் பாரம்பரிய பண்டிகைகளில் ஒன்றாகும். இதனை உழவர் திருநாள் என்றும் அழைப்பர். உழவர்கள் தம் நன்றியை செலுத்தும் நாளாகவே இந்நாள் அனுஸ்டிக்கப்படுகிறது. ஆனால் இப்பண்டிகை கொண்டாடப்படும் மரபுவழிக்கதை பெரும்பாலானவர்களுக்கு தெரிவதில்லை. அதாவது கிருஷ்ணபகவான் கோவர்த்தன மலையை குடையாக்கி ஆயர்களைக் காத்த நிகழ்வே தைப்பொங்கல் பண்டிகை ஆகும்.

இந்திரவிழா என்ற பெயரில் நல்ல மழை பொழியவும், நாடு செழிக்கவும் இந்திரனை ஆயர்கள் வழிபட்டுவந்தனர். ஆயர்கள் பக்தியோடும் பயத்தோடும் இந்திரனை வழிபட்டனர். பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் அறிவுரைப்படி ஆயர்களுக்கும் அவர் தம் ஆநிரைகளுக்கும் வளங்கள் தரும் கோவர்த்தன மலைக்கு ஆயர்கள் மரியாதை செய்தனர். இதனால் கோபமுற்ற இந்திரன் புயலாலும், மழையாலும் ஆயர்களை துன்புறுத்தினான். கோவர்த்தன மலையை குடையாய் பிடித்து இந்திரனிடமி ருந்து ஆயர்களையும் ஆநிரைகளையும் ஸ்ரீகிருஷ்ணர் காத்தருளினார். பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கோவர்த்தனமலையை குடையாய்பிடித்து இந்திரனிடமிருந்து ஆயர்களையும் அவர்தம் ஆநிரைகளையும் காத்தநாளே சூரியநாராயண பூஜையாகும். இந்திரன் தன் தவறை உணர்ந்து கண்ணனிடம் தன்னையும் மக்கள் வழிபடவேண்டும் என்று வேண்டிக் கொண்டதால் தை 1ம்நாள் முன்தினம் இந்திரவழிபாட்டை (போகிபண்டிகை) ஆயர்கள்கொண்டாடினர். தை 1ம்நாள் சூரியபகவானை சூரியநாராயணராக பாவித்துவழிபட்டனர். அதன் மறுநாள் தங்களின் ஆநிரைகளுக்குவிழா (மாட்டுப்பொங்கல்) எடுத்து தங்களின் உணவுகளை அவைகளுக்கு படைத்து விழாவைக் கொண்டாடினர்.

தைப்பொங்கல் நாளில் அதிகாலையில் எழுந்து வீட்டு முற்றத்தில் சாணம் கொண்டு மெழுகி கோலம் போட்டு வாழை இலையில் அரிசி அல்லது நெல் பரப்பி நிறைகுடம் வைப்பர். சாணத்தில் பிள்ளையார் பிடித்து அதில் அறுகம் புல் வைத்து அதனையும் நிறைகுடத்தின் அருகில் வைப்பர். உலக்கை பதித்து சதுரக் கோடிளித்து உள்ளே அழகான கோலமிட்டு அருகிலே அடுப்பு வைத்து புதுப்பானைக்கு மஞ்சள் இலைகட்டி பொங்கல் பானையை அடுப்பில் வைத்து பால் பொங்கும் வரை காத்திருந்து வீட்டுத்தலைவன் கையால் பானையிலே அரிசியிட்டு பாலுடன் சக்கரைப்பாகிட்டு விளைச்சலில் வந்த தானியங்களை அதற்குள் போட்டு பொங்கல்வைப்பர். பொங்கல் நிறைவுறும் தருணத்தில் பொங்கலோ பொங்கல் என்றபடி பானையை இறக்கி வெய்யோனுக்குப் படைத்து அயலவர்களுக்கும் பகிர்ந்தளித்து அதன் பின்னரே வீட்டினர் உண்டு மகிழ்வர். இது பண்டைய பொங்கல் மரபாக உள்ளதெனினும் இன்றைய நவீன காலத்தில் காஸ் அடுப்பில் பொங்கி உண்பதும் முகநூலில் பதிவிட்டு பொங்கல் வாழ்த்து சொல்வதும் கலாச்சாரமாக மாறிவருகின்றது.

எமது பண்டிகைகளின் மரபுகளையும் தொன்மைகளையும் அடுத்துவரும் சந்ததிக்கு பிறள்வின்றி கொடுக்கவேண்டியது எம் அனைவரினதும் கடமையாகும்.

தமிழரசி

வாய் விட்டு சிரியுங்கள்



# பில் கேட்ஸுக்கு சர்தார்ஜி எழுதிய கடிதம்



**புதிதாக கம்ப்யூட்டர் வாங்கிய சர்தார்ஜி, சிறிது நாட்களில் பில் கேட்சுக்கு ஒரு கடிதம் எழுதினார்.**

**அதில்:**

**அன்பிற்குரிய பில் கேட்ஸ்,**

சில நாட்களுக்கு முன் நான் வாங்கிய கம்ப்யூட்டரில் சில பிரச்சினைகள் உள்ளன. அவற்றை உங்கள் கவனத்துக்குக்கொண்டு வர விரும்புகிறேன்.

1. கம்ப்யூட்டரில் 'Start' பட்டன் உள்ளது. ஆனால், 'Stop' பட்டன் இல்லை. இதை சரிபார்க்கவும்.

2. 'Run' என்ற மெனு உள்ளது. எனது நண்பர் 'Run' ஐ கிளிக் செய்துவிட்டு ஓட ஆரம்பித்தார். அவர் இப்போது அமிர்தசரஸ்பக்கம் ஓடிக் கொண்டிருக்கிறார். அவரை உட்கார வைப்பதற்கு 'Sit' மெனு இருக்கிறதா என்பதைத் தெரியப்படுத்தவும்.

3. உங்க விண்டோஸில் நான் 'Recycle bin' ஐ மட்டும்தான் பார்த்தேன். 'Rescooter bin' இருக்கிறதா? ஏனென்றால் என் வீட்டில்ஸ்கூட்டர் மட்டும்தான் உள்ளது.

4. 'Find' பட்டன் கொடுத்துள்ளீர்கள். ஆனால் அது சரியாக வேலை செய்யவில்லை. என் மனைவி, வீட்டுச் சாவியைத்தொலைத்தபோது, 'Find' பட்டனை உபயோகித்தோம். ஆனால் அது தேடித் தரவில்லை. இதை சரிசெய்யவும்.

5. என்னுடைய பையன் 'Microsoft word' கற்றுக் கொண்டான். இப்போது 'Microsoft sentence' கற்றுக்கொள்ள விரும்புகிறான்.அதை எப்போது வழங்குவீர்கள்?

6. விண்டோஸில் 'My Pictures' உள்ளது. ஆனால் என் போட்டோ ஒன்று கூட அதில் இல்லை. கூடிய சீக்கிரம் என் போட்டோஒன்றை அதில் போடவும்.

7. 'Microsoft office' உள்ளது. சரி, 'Microsoft Home' எங்கே? ஏனென்றால் கம்ப்யூட்டரை நான் வீட்டில்தான் பயன்படுத்துகிறேன்.

8. 'My Network Places' கொடுத்துள்ளீர்கள். நல்லவேளை, 'My Secret Places' கொடுக்கவில்லை. அதை இனிமேலும்தரவேண்டாம். ஏனென்றால் அலுவலகம் முடிந்து நான் எங்கெல்லாம் போகிறேன் என்பதை என் மனைவி அறிந்துகொள்வதை நான் விரும்பவில்லை.

9. இறுதியாக ஒரு சந்தேகம். நீங்கள் 'Windows' விற்கிறீர்கள். ஆனால் உங்கள் பெயரில் 'Gates' உள்ளது ஏன்?

**இப்படிக்கு, சர்தார்ஜி'**

**வடிவமைப்பு :** எஸ்.மகாவிஷ்ணு, என்.ஜெகாதரன், எம்.ஜீவநீதன்


**ஆசிரிய பீடம் :** தொலைபேசி : 0114320695, துரித அழைப்பு : 0718628369,

தொலைநகல் : 0114322614, E-mail : oliarazi33@gmail.com, Viber - 0779046836

**கடித தொடர்புகளுக்கு :**

ஆசிரியர், 'ஒளிஅரசி' இல. 85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு - 14.

அல்லது இல. 55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.



வாழ்வின் அர்த்தங்கள்

வாருங்கள் பேசலாம் வாழ்க்கை பற்றி எனும் தொடரினூடாக உங்களை சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். வாழ்க்கை என்பது எங்கள் எல்லோருக்கும் கிடைத்த ஒரு வரம் என்று தான் கூற வேண்டும். இன்பம் துன்பம் இரண்டுமே வாழ்வில் வந்து வந்து போகும். இன்பமும் நிலையற்றது, துன்பமும் நிலையற்றது. நாம் ஒவ்வொருவரும் வேறு ஒருவரிலோ பலரிலோ தங்கி வாழ்கின்றோம். யாராலும் தனித்து வாழ்ந்து விட முடியாது. அதற்காகத் தான் இந்த உறவுகள் ஏற்படுகின்றன போலும், வாழ்க்கை இறைவன் கொடுத்தது என்பது போல உறவுகளும் இறைவனின் வரம் என்று தான் சொல்ல வேண்டும். எனவே உறவுகளைப் பற்றி உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

# வாருங்கள் பேசலாம் வாழ்க்கை பற்றி!

பிறந்ததில் இருந்து இறக்கும் வரை அம்மா அப்பா அக்கா அண்ணா பாட்டன் பாட்டி என இப்படியாக பல வகைப்பட்ட உறவுகள் எம் வாழ்க்கையில் வந்து போகின்றார்கள். சில உறவுகள் இரத்த சம்பந்தமானவையாக இருக்கும், சில நட்பு ரீதியில் தோன்றியவையாக இருக்கும், எப்படி இருந்தாலும் அந்த உறவுகளுக்கு நீங்கள் முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள், அப்படித்தானே, ஆனால் இந்த உறவுகள் அனைத்துமே இறுதி வரை உங்களுடன் இருக்கின்றனவா என்றால் நிச்சயம், இல்லை என்று தான் சொல்ல வேண்டும். ஏராளமான உறவுகள் பாதியிலே வந்து பாதியிலேயே எம்மை வருத்தத்திற்கு உள்ளாக்கி விட்டு பிரிந்து சென்றுவிடுகின்றன. அவ்வாறான பிரிவுகளுக்கு நாங்களோ அல்லது அவர்களோ அல்லது இரு தரப்பினருமோ காரணமாகி விடுகின்றோம்.

இவ்விடயத்தில் ஒரு உண்மையை நோக்கினால், எந்த உறவு எம்மை விட்டு இறுதிவரை பிரிந்து செல்லாது இருக்கின்றதோ அது தான் ஆழமான உறவு. உறவுகளுக்குள் அடிக்கடி சண்டைகள் சச்சரவுகள் வருவது இயல்பு தானே, சில்லறைக் காசு கூட பெறாத பிரச்சனைகளுக்காக உறவுகளை முறித்துக் கொள்வது ஒரு போதும் நியாயமாகாது. உதாரணமாக, கணவன் மனைவி உறவை எடுத்துக்





கொள்ளுங்கள் இந்த உறவில் கலகங்களும் கோபதாபங்களும் ஏற்படுவது இயல்பு. அதை யாராலும் மாற்றி விட முடியாது. சண்டையும் கோபதாபங்களும் இல்லாத கணவன் மனைவி உறவு உப்பில்லாத உணவு போன்றது. எனவே அவ் உறவில் ஏற்படுகின்ற சண்டை சச்சரவுகளை பெரிதாக நினைத்து உறவே வேண்டாம் என விவாகரத்து பெற்றுவிட்டால் உலகில் குடும்பங்களே இல்லாது அழிந்து போய் விடுமல்லவா, எனவே நாம் எல்லோரும் உறவுகளை அனுசரித்துப் போக பழகிக்கொள்ள வேண்டும். இன்றைய உலகம் நவீன போர்வை போர்த்தி நிற்கின்றது. அதற்கு உறவுகளும் தெரியாது, உண்மையும் தெரியாது, நாம் தான் அதனை உணர்ந்து, உறவுகளை மேலும் மேலும் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் வாழ்க்கையில் நின்மதியைத் தருவது உறவெனும் பந்தங்கள் தான். அதற்காக எல்லோரையும் உறவாக்கிக் கொள்ள முடியாது, உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளும் போது மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

அதாவது, உறவுகள், உண்மையானவர்களாக இருக்க வேண்டும். உங்களுடைய பழக்கவழக் கங்களோடு பொருந்திப் போகக்கூடியவர்களாகவும் இன்பத்தில் பங்கெடுக்காவிடினும் துன்பத்தில் தோள் கொடுக்கக்கூடியவர்களாகவும் இருக்கவேண்டும். சிலர் அறியாது, தீய உணர்வுள்ளவர்களுடன் நெருங்கிப் பழகி விடுவார்கள். அவர்கள் சரியில்லாதவர்கள் எனத்தெரிந்த பின்பு அவ் உறவில் இருந்து விடுபட முடியாமல் தவித்து விடுவார்கள். உறவாக்கிக் கொள்ளும் முன் சிறிது சிந்தித்தீர்களானால் இப்படியான பிரச்சனைகள் ஏற்படுவதை தவிர்த்திடலாம். உறவுகளில் பல வகைகள் உண்டு. பணத்து க்காக வருகின்ற உறவுகள், அன்புக்காக வருகின்ற உறவுகள், உடலுக்காக வருகின்ற உறவுகள், இப்படியாக பலபல தேவைகளுக்காக இணைந்து கொள்கின்ற உறவுகளை குறிப்பிடலாம். இவற்றுள் உண்மையாகவும் அன்புக்காகவும் இணைகின்ற உறவுகள் இறுதி வரை நிலைத்து நிற்கும். ஏனைய உறவுகள் தங்கள் அலுவல் முடிந்ததும் கைகாட்டி விட்டு சென்றுவிடும். இன்றும் சில உறவுகள் மற்றவர்களைச் சிக்கலில் மாட்டவைத்துவிட்டு பார்த்துச் சிரிக்கின்ற உறவுகளாக இருக்கும், இவ்வாறான உறவைத்தான் இந்தக்காலத்தில் அதிகமாக காணமுடிகிறது. இயந்திரங்களோடு பழகிப்பழகி மனிதர்களின் உணர்வுகளும் மரத்துப்போய் இயந்திரமாகி விட்டன.

வாழ்க்கையில் வெற்றி பெற்று சகலராலும் போற்றப்படுகின்றவர்களான டொக்ரர். அப்துல் கலாம், அன்னை தெரேசா போன்றவர்கள் வாழ்வில் தங்களை நோக்கி நீட்டப்பட்ட கரங்கள் யாவும் உண்மையானதாகவும் செழுமை மிக்கதாகவும் பார்த்துக் கொண்டார்கள். அதனால் தான் அவர்களால் வாழ்க்கையில் வெற்றி பெற முடிந்தது. எனவே நீங்களும் உங்களை நோக்கி நீட்டப்படுகின்ற கரங்கள் செழுமை மிக்கதாக இருக்கும் படி பார்த்துக் கொள்ளுங்கள். செழுமை என நான் குறிப்பிடுவது செல்வம் மிகுந்த கைகளை அல்ல, உங்களுக்கு உதவ வேண்டுமே, உங்களை உயர்த்த வேண்டுமே என்ற உண்மையான நோக்கில் நீட்டப்படுகின்ற கைகளைத் தான். இவை எல்லாம் சரி இவ்வாறான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளும் போது கவனிக்க வேண்டிய முக்கிய விடயமென்றால் மனவெழுச்சி உணர்வுகளை விலக்கி வைத்து விட்டு தர்க்க ரீதியாக சிந்திக்க வேண்டும் ஏனெனில் இந்த மனவெழுச்சி உணர்வுகளைக் கட்டுப்படுத்தாவிடில் அவை எம்மை தவறான பாதையில் கொண்டுசென்றுவிடும். சில உறவுகள் தவறானவை என்று தெரிந்து நாம் அவற்றுடன் வலியச் சென்று வலிமையான உறவினை ஏற்படுத்தி விடுவோம். காலம் போகப்போகத்தான் உண்மை தெரிய வரும் அது வரை யார் அறிவுரை கூறினாலும் அது நம் காதில் விழாது. இதைத் தான் கவர்ச்சி என்போம். இவை மனவெழுச்சி உணர்வுகளை கட்டுப்படுத்த முடியாத காரணங்களினால் ஏற்படுகின்றன. இந்த விடயத்தில் அவதானமாக இருக்க வேண்டியவர்கள் கட்டிளமைப்பருவத்தினர் தான் .எனவே உங்கள் குடும்பத்தில் இவ்வாறானவர்கள் இருந்தால் தனிக் கவனம் செலுத்துங்கள்.

வாசகர்களே உறவுகள் மகத்தானவை உங்களைத் தேடி வரும் உறவுகளை உதாசீனப்படுத்தி விடாதீர்கள்.

**'உறவுகள் தொடர்கதை உணர்வுகள் சிறுகதை**
**ஒரு கதை என்றும் முடியலாம் முடிவிலும் ஒன்று**
**தொடரலாம் இனி எல்லாம் சுகமே' ..................**

**தொடரும் ........**

பா .பாலாஜினி
பளை



ஸஹீட். எச். சப்றீன்,
சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர்,
மருதமுனை.




# எங்கே தாய்ப்பாசம்?



புதுவகையான சம்பவங்களைக் கேட்பதென்பது சுவாரஸ்யம்தான். ஆனாலும் அவற்றை வெறும் சம்பவங்களாகவே விட்டுவிடாமல் அதிலிருந்து ஏதாவது ஒரு படிப்பினையைப்பெற்றுக்கொண்டு தமது வாழ்வில் அவதானமாகச் செயற்பட வேண்டுமென்பதே இந்த உண்மைச் சம்பவங்கள் பகிரங்கப்படுத்தப்படுவதன் நோக்கம். பலர் இதை பல வண்ணங்களில் பார்க்கலாம், ஆனாலும் உரியவர்களின் பெயரோ, அடையாளமோ எந்தச்சந்தர்ப்பத்திலும் வெளிப்படுத்தப்படாமலே சம்பவங்கள் வெளியிடப்படுகின்றன என்ற செய்தியை அன்பான இல்லத்தரசிகளுக்கு கூறிக்கொண்டு இம்மாத சம்பவத்தைப்பார்ப்போம்.

நீதிமன்றிலுள்ள சிறைக்கூடத்தில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஆண்களுக்கும் பெண்களுக்கும் எனப்பிரிக்கப்பட்டவையாகவே அவை பயன்படுத்தப்படுகின்றன. இதிலே ஆண்கள் பகுதிதான் எப்பவுமே நிரம்பியிருக்கும். அவ்வப்போது மட்டுமே பெண்கள் பகுதியில் ஓரிரு கைதிகள் தடுத்துவைக்கப்படுவார்கள். இவ்வாறு வருகின்ற பெண்களை அனைவருமே சற்று உற்றுப்பார்க்கின்ற வழமை இருக்கின்றது. நானும் அதற்கு விதிவிலக்கல்ல. இவ்வாறு ஒரு நாள் இளம் பெண்ணொருவர் அழுதுகொண்டிருந்ததை அவதானித்த நான் ஏதாவது உதவி செய்யவேண்டுமா என வினவினேன். அதற்கு, இல்லையென பதிலளித்த அப்பெண் அழுதுகொண்டே இருந்தாள். என்ன குற்றம் எனக்கேட்டால்



**உண்மைச்சம்பவம்**

வெட்கப்படுவார் என்பதற்காக உங்களை பிணையில் எடுப்பதற்கோ சட்டத்தரணியை வைக்கவோ உறவினர்கள் யாரும் இல்லையா? தகவல் சொல்லவேண்டுமா? எனக்கேட்டேன், அதற்கவர் உறவினர்கள் யாருமே பேசுவதில்லை எனக்கூறிவிட்டு பேச்சை முடித்துக்கொண்டார்.

இதை என்னவென்று அறியவேண்டும் என்ற ஆவலுடன் அங்கிருந்து விடைபெற்று மறுநாள் காரியாலயத்தில் நுழைந்த எனக்கு கும்பிடப்போன தெய்வமே குறுக்கே வந்து நின்றது. இந்தப்பெண்ணும் இன்னும் இரண்டு ஆண்களும் சக உத்தியோகத்தரினால் விசாரிக்கப்பட்டுக்கொண்டிருந்தனர். தனது அயல் கிராமத்து ஆணை 16 வயதில் திருமணம் முடித்த இந்தப் பெண்ணிற்கு இரண்டு பிள்ளைகள். கணவன் வெளிநாட்டில். இப்பெண்ணும் சில வருடங்கள் அவருடன் வெளிநாட்டில் இருந்திருக்கிறாள். தனது நான்கு வயது மற்றும் பத்து மாதக் குழந்தை இரண்டையும் இரவில் நடுத்தெருவில் விட்டுவிட்டு சென்றதுதான் இப்பெண் செய்த குற்றம். இதற்குத்தான் சிறைவாசமும் அனுப்பப்பட்டிருந்தார்.

வெளிநாட்டிலிருந்து இப்பெண் வந்ததும் கணவனுடன் சண்டை போட்டுக்கொண்டுதானாம். அதாவது தனது கணவனுக்கு வேறு சில பெண்களுடன் தொடர்பிருப்பதாகவும் அவரே தன்னை ஊருக்கு சென்று வேறு திருமணம் முடிக்கச்சொன்னதாகவும் இப்பெண் கூறினார். அப்போதுதான் சம்பவம் முழுதாக எனக்குப்புரிந்தது. நாட்டுக்கு வந்த இப்பெண்ணுக்கு இன்னுமொருவருடன் தொடர்பு ஏற்பட்டு அவருடன் செல்வதற்காகவே தனது கணவனின் தாயின் வீட்டிற்கு முன்னால் இரவு 11 மணிக்கு அவ்விரு பிஞ்சுகளையும் விட்டுவிட்டு அவருடன் சென்றிருக்கிறார். கூட்டிக்கொண்டு சென்ற அவரோ இவளை திருமணம் முடிக்காமல் தனது நண்பனின் மனைவி இவர், இவருக்கு வீட்டில் பல பிரச்சினைகள் எனவே நமது வீட்டில் சில காலம் தங்கட்டும் என தனது மனைவியிடம் கூற மனைவியும் பரிதாபத்தோடு பார்த்து அவளை வீட்டிலேயே தங்கவைத்தாளாம்.

ஓரிரு நாட்களில் இவர்கள் இருவரின் நடவடிக்கையையும் அவதானித்த அவரின் மனைவியோ கணவருடன் சண்டைபோட இருவரும் வீட்டை விட்டு வெளியேறி திருமணமும் செய்திருக்கிறார்கள் (இருவருக்கும் தலா இரண்டு குழந்தைகள்). இதன் பின்னர்தான் போலிஸால் குறிப்பிட்ட குற்றத்திற்காக பிடிக்கப்பட்டிருந்தார். வயதுவந்த ஆண் பெண் தனக்கு விரும்பியவருடன் செல்லலாம் என்றிருந்தாலும் குழந்தையை நடுத்தெருவில் விட்டதும் அதை இப்போது பொறுப்பெடுக்க வேண்டும் என்பதுமே விசாரணை.

எவ்வளவுதான் பேசிப்பார்த்தும் மனம் மாறாத அந்தப் பெண் இறுதியில் கூட குழந்தைகள் இரண்டையும் யாரிடமாவது தத்துக்கொடுக்க முடியாதா எனக்கேட்டதுதான் எனக்கு இன்னும் வருத்தமாக இருக்கிறது. நாங்கள் இருவரும் வெளிநாடு செல்லப்போகிறோம், எங்களால் அவருடைய குழந்தைகளுக்கும் செலவுக்கு கொடுத்துக்கொண்டு இந்தக்குழந்தைகளையும் பராமரிக்க முடியாது என பல காரணங்கள் சொன்னார்களே தவிர குழந்தைகளை பொறுப்பெடுக்கும் எண்ணம் இருவருக்குமே இருக்கவில்லை. அங்கிருந்த இரண்டு ஆண்களில் மற்றையவர் இந்தப் பெண்ணின் முன்னாள் கணவரின் சகோதரர். அவருக்கு குழந்தைகளை பொறுப்பேற்க ஆசையிருந்தாலும் தனது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் பயந்து அவரும் பின்வாங்கினார். இவ்வாறு பல மணிநேரங்கள் நீடித்தது அந்த கொடுமையான விசாரணை.

பெத்த மனம் கல்லு பிள்ளை மனம் பித்து என்பது முது மொழி மட்டும்தானா? தாய்ப்பாசம் எங்கு சென்றுவிட்டது? வெளியிலே குழந்தையொன்றை தத்தெடுக்க சில தம்பதிகள் நீதிமன்றங்களிலே படுகின்ற அவஸ்தைக்குள் இப்படியும் ஒரு தாயா என எண்ணத் தோன்றியது. பிள்ளைகள் உள்ளவர்களே அனாதைக்குழந்தைகளைத் தத்தெடுக்க வரிசையில் நிற்கின்றார்கள். ஆனால், இப்பெண்ணோ கொஞ்சமும் சிந்திக்கவே இல்லையே. மனிதாபிமானத்தை தொலைத்துவிட்ட மனிதர்களெல்லாம் வெறும் மிருகங்களேயன்றி வேறில்லை என்பதற்கு இது சிறந்த உதாரணம். இளவயதுத் திருமணம், அதிக வயது வித்தியாசத் திருமணம், திருமணம் முடித்துவிட்டு வெளிநாடு செல்லுதல் போன்ற விடயங்கள் இச்சம்பவத்துடன் தொடர்புபடுத்தி சிந்திக்கவேண்டியவையே என்பதை இம்மாதம் இல்லத்தரசிகள் சற்று யோசித்துப்பாருங்கள்.

SRINIVASA TRANSPORT

# SRINIVASA TRANSPORT

கட்டடப்பொருட்கள் விநியோகிப்போர்

## யாழ் நகரில்.....!

## கட்டடப் பொருட்களுக்கான

மிகச் சிறந்த தெரிவு

- $\frac{3}{4}$" சல்லி கற்கள் (36,500/-)
- 1" சல்லி கற்கள் (32,500/-)
- $1\frac{1}{2}$" சல்லி கற்கள் (31,500/-)
- "ABC" வகைகள் (31,000/-)
- "4X4" அத்திவாரக் கற்கள் (30,000/-)
- கருங்கல் சிப்ஸ் வகைகள் (29,000/-)
- கருங்கல் டஸ்ட் வகைகள் (24,000/-)

மேற்குறிப்பிட்ட விலைகள் யாழ் நகரிலிருந்து 7KM க்கு உற்பட்டவை

தொடர்பு எண்களை பதிவேற்றிக்கொள்ளுங்கள்

**0777 279179 | 075 9779179**

facebook.com/transportsrinivasa

www.transportsrinivasa.com

**89/A, Soosaipillayarkulam Road, Vavuniya.**

புனிதக்காதல்



# உண்மையான காதலை அறிவது எப்படி?

காதல் என்பது ஆசை, அன்பு, நட்பு, காமம் ஆகிய உணர்வுகளில் ஒன்று அல்லது இவைகள் அனைத்தும் கலந்த ஒரு உணர்வு என்று பெரியார் கூறியுள்ளார். தற்போது காதல் செய்து சந்தோஷமாக இருப்பவர்களை விட, காதல் தோல்வியில் கஷ்டப்படுபவர்களின் எண்ணிக்கைதான் அதிகம். இதற்கு காதலிக்கும் நபர் நம்மை உண்மையாக காதலிக்கிறாரா என்று தெரியாமல், கண்மூடித்தனமாக காதலில் விழுவது, காதலித்த பின்னர் அதை மறக்க முடியாமல் தவிப்பது ஆகியவற்றை முக்கியக் காரணமாக சொல்லலாம். உங்களுடையது உண்மையான காதலா என்பதை கண்டறிய டிப்ஸ்கள் இங்கு கொடுக்கப்பட்டுள்ளன.

- உண்மையாக காதலின் முதல் அறிகுறியே தியாகம் தான், காதலன் / காதலியின் சந்தோஷத்திற்காக எதையும் தியாகம் செய்வது.
- உங்களை மகிழ்ச்சியாக வைத்துக்கொள்வதுடன், ஒவ்வொரு நாளும் ஸ்பெஷலாக உணரச் செய்து, எந்த ஒரு சூழ்நிலையிலும் உங்களை விட்டுக்கொடுக்காமல் இருப்பார்கள்.
- உண்மையான காதலாக இருப்பின், நீங்கள் கஷ்டப்படுவதை அவர்களால் நினைத்துக் கூட பார்க்க முடியாது, நீங்களே எதிர்பாராதவிதமாக கஷ்டப்படுத்தினால் கூட அவர்கள் பதிலுக்கு உங்களை சந்தோஷப்படுத்தவே செய்வர்.
- உங்கள் காதலன் / காதலி சத்தியம் செய்து கொடுத்து எந்த ஒரு சூழ்நிலையிலும் அதனை மீறாமல் இருந்தால் உங்கள் மீது உயிரையே வைத்துள்ளார்கள் என்று அர்த்தம்.
- கஷ்டகாலத்திலும் உங்களை விட்டு விலகிவிடாமல், ஆறுதலாக இருப்பதுடன், உங்களை சந்தோஷமாக வைத்துக் கொள்ள நிறைய கஷ்டத்தை தாங்கிக்கொள்வார்கள்.
- உங்கள் காதலன் / காதலி உங்களுக்கு பலவற்றை செய்தும், உங்களிடம் எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாமல் பழகி வந்தால், அந்த காதலை மிஸ் பண்ணிடாதீங்க!

மேற்தரப்பட்ட கருத்துக்கள் உண்மையானவை எனினும் பாடசாலைக் காலத்தில் வருகின்ற காதல் என்பது பள்ளிப் படிப்பை சீர்குலைப்பதுடன் பெற்றோரையும் புண்படுத்தி அவரவரின் எதிர்காலத்தினையும் சீரழித்து விடும் என்பது நிஜமாகும்.



ஆதாம் ஏவாள்



## இல்லறம் இனித்திட

இதயம் முரளி போல விழுந்து விழுந்து காதல் கொள்பவர்களாக இருந்தாலும் சரி, ஓகே கண்மணி துல்கர் போல ஜஸ்ட் லைக் தட் ரொமான்ஸ் செய்பவர்களாக இருந்தாலும் சரி, ரிலேஷன்ஷிப்பை பேணிக் காப்பது கத்தி மேல் நடக்கும் வித்தைதான். கொஞ்சம் பிசகினாலும், 'எல்லாக் கோட்டையும் அழிங்க' என முதலில் இருந்து தொடங்கவேண்டும். ஸோ, ஒரு நல்ல ரிலேஷன்ஷிப்பின் தொடக்கமும் முடிவும், நீங்கள் உங்கள் துணையிடம் நடந்துகொள்ளும் முறையில்தான் இருக்கிறது. சில வகை குணாதிசயங்கள், எவ்வளவு ஆழமான உறவையும் பாதிக்கும் சக்தி கொண்டவை.




திருமண பந்தம் என்பது வாழ்வை முழுமைப்படுத்தும் ஓர் உறவு என்பது மட்டுமன்றி வாழ்வின் நெளிவு சுழிவுகளை கற்றுத்தரும் பந்தமாகவும் அமைகின்றது. இனிப்பும் கசப்பும் இணைந்ததே இல்லறம். கடைசிக்காலத்தில் கூட இருப்பது நம்மை பெற்றவர்களோ நாம் பெற்றவர்களோ அன்றி வாழ்க்கை துணையென இடையில் வந்தவர்கள்தான். மனம் அதிகமாக தேடுவதும் இவர்களைத்தான். அதாவது, இளமைக்காலத்தில் தனக்கான பாதுகாப்பு என எண்ணி கணவனின் கரம் பற்றும் மனைவியர் அவர்களின் முதுமைக்காலத்தில் ஊன்றுகோலாகவும் உயிர்நாடியாகவும் இருந்து காத்துக் கொள்கின்றனர்.

வாழ்கின்ற காலம் என்பது மிகக் குறைவானதே. அக்காலத்தில் அன்பும் பொறுமையும் இனிமையும் சாந்தமும் கொண்டவர்களாக வாழ்வதே இனிய இல்லறத்தின் அடிநாதமாக இருக்கமுடியும்.

விக்ரம், வனஜா இருவரும் பெற்றோர் பார்த்து நிச்சயித்த பின்னர் திருமண பந்தத்தில் இணைந்துகொண்டவர்கள். அடுத்தடுத்து மூன்று குழந்தைகள். முப்பது வயதிலேயே இல்லற வாழ்வில் சலிப்பு தட்டத்தொடங்கிவிட்டது வனஜாவிற்கு.



வேலைச்சுமையும் மன அழுத்தமும் ஒன்றாய் சேர்ந்து வனஜாவிற்குள் பிரளயமே உருவாகிவிட்டிருந்தது. நாளுக்கு நாள் அவளது போக்கு எரிச்சலை தந்தது விக்ரமிற்கு. அந்தந்த நேரத்திற்கு சாப்பாடு தயார் செய்துவிடுவாள், அதில் எந்தக் குறையும் விடுவதில்லை, அது மட்டுமே கணவனின் எதிர்பார்ப்பு என்பது அவளது நோக்கம். சிறிது நேரம் அருகில் அமர்ந்து பேசுவதற்கு கூட நேரமில்லாதவள் போன்று நடந்துகொண்டாள். எப்போதும் குழந்தைகளை இடுப்பில் சுமந்தபடி அழுக்கான சட்டையுடன் பார்ப்பதற்கே அருவருப்பாகத் தோன்றினாள்.

அதுவும், மாலை வேளைகளில் அவன் வீடு திரும்பும்போது அவளது அட்டகாசத்திற்கு அளவே இருக்காது. விக்ரம் எவ்வளவோ எடுத்துக்கூறியும் அவள் கேட்பதாகவே இல்லை, அவ்வேளைகளில் தான் குழந்தைகள் மீது விசமான வார்த்தைகளைக்கொட்டுவாள். இந்தக் குடும்பத்தினால் தன் ஆசைகள், கனவுகள் எல்லாம் சிதைந்துவிட்டது போல ஆர்ப்பரிப்பாள். தன் கோபத்தை பிள்ளைகள் மீது தீர்த்துமுடிப்பாள். எப்போதும் சிடுசிடுப்பாகத்தோன்றும் அவளை, பார்ப்பதற்கோ பேசுவதற்கோ கூட விருப்பமில்லாமல் போனது விக்ரமிற்கு.

விடுமுறை நாட்களில் வெளியே சென்று வரலாம் என அழைத்தால் ஆயிரம் காரணம் கூறி பயணத்தை நிறுத்திவிடுவாள். கேட்டுக்கேட்டுப் பார்த்துவிட்டு தான் மட்டும் சென்றுவிடுவான் விக்ரம். வனஜாவின் போக்கினால் வாழ்க்கையின் மீது சலிப்பு ஏற்படத்தொடங்கியது விக்ரமிற்கு பல தடவைகள் அன்பாக எடுத்துக்கூற முயன்றபோது மூன்று பிள்ளைகள் ஆச்சு, இனி என்ன வாழ்க்கை என்பாள். அத்தோடு பேச்சு முடிந்தது என்பதுபோல எழுந்து சென்றுவிடுவாள். பொறுக்கமுடியாது அவன் கோபமாக பேசமுற்பட்டால் குடம் கணக்கில் கண்ணீரை வரவைத்து ஆர்ப்பாட்டம் செய்யும் அவளை பார்க்கும்போது ஒருபுறம் கோபமாகவும் ஒருபுறம் பாவமாகவும் தோன்றும் அவனுக்கு.

ஒரு கணவனாக தன்னுடைய ஆசைகளை அவளிடம் சொல்லநினைத்தபோதும் அவளது முற்கோபகுணங்களை எண்ணியபோது சொல்லமுடியவில்லை. அதனை அவள் எப்படி எடுத்துக் கொள்வாளோ அதற்காக என்னென்ன கதைகளைச் சொல்வாளோ என நினைத்து மௌனமாகவே இருந்துவிட்டான். தன் வாழ்க்கை இப்படித்தான் எனவும், கடவுள் விதித்த விதி இவ்வளவுதான் எனவும் எண்ணியவன் அலுவலக வேலைகளை இழுத்துப்போட்டுச் செய்தான். அம்மா வீட்டிற்குச் சென்றான். நண்பர்களுடன் பொழுதைப் போக்கினான். அதற்கும் அதிகமான நேரங்களை சமூக சேவைக்காரியங்களில் ஈடுபட்டு நிறைவாக்கினான். வீட்டில் நிற்கும் பொழுதுகளை பிள்ளைகளுடன் கழித்தவன் மனைவி மீதான கவனத்தை குறைத்துக்கொண்டான்.


நாட்கள் உருண்டோடின. பிள்ளைகள் ஓரளவு வளர்ந்துவிட்டனர். அனைவரும் பள்ளிக்குச் செல்லத்தொடங்கிவிட்டனர். பிள்ளைகள் பாடசாலைக்கும், கணவன் அலுவலகமும் சென்ற பின்னர் தான் வனஜாவிற்கு தனிமையின் கொடுமையும் கணவனிடம் தான் இழந்தவைகளும் மெல்ல மெல்ல புரிந்தது. தாமதமாக வீடு வரும் விக்ரம் அதிகாலையிலேயே புறப்பட்டுவிடுவான், முன்னர் அவனுக்கு உணவு தயாரிக்கும் வேலை இல்லை என மகிழ்ச்சி அடைந்தவள் இப்போது அவனுக்கு உணவு தயாரிப்பதற்காக ஏங்கத்தொடங்கினாள்.

பல சமூகசேவைகளில் தன்னை இணைத்துக்கொண்ட விகரம் நிற்பதற்கே நேரமில்லாமல் ஓடிக்கொண்டிருந்தான். கணவனின் அருகாமைக்காய் வெகுவாக ஏங்கியவள் அதனை வெளியே சொல்லமுடியாது தவியாய் தவித்தாள். ஆனால், காலம், கணவனை அவளிடம் இருந்து அதிக தூரம் பிரித்துவிட்டிருந்தது.

அன்பு என்பது நெருக்கமான உள்ளப் பிணைப்பு தொடர்பான ஓர் உணர்வும் அநுபவமும் ஆகும். பக்தி, பாசம், நட்பு, காதல் என இவ்வுலகில் அன்பு பல பரிமாணங்களில் உள்ளது. அன்பு என்ற சொல்லை எந்த எல்லைக்குள்ளும் வரையறை செய்துவிடமுடியாது.

உயரப் பொருத்தமோ, நிறப் பொருத்தமோ வாழ்க்கையை வசந்தமாக்குவதில்லை. மனப் பொருத்தமும், இருவரிடையே ஏற்படும் இணக்கத்தால் இழைந்தோடும் அன்புமே அவர்கள் வாழ்வில் வளம் சேர்க்கும். ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் அன்பிற்கு முதலிடம் கொடுத்து மற்ற விஷயங்களை பின்னுக்கு தள்ளவேண்டும். அப்போதுதான் வாழ்க்கை முன்னுக்கு வரும். அன்பாய் பார்த்துக்கொண்டவரை இழந்து, நிர்க்கதியாய் நிற்கும் நிலையில்தான் பலர் அன்பின் அருமையை உணர்ந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலை உங்கள் வாழ்விலும் வரவேண்டாம். அன்பை உங்களுக்குள் மலரச் செய்யுங்கள். வாழ்வை மறுமலர்ச்சி அடைய செய்திடுங்கள்.

**திருமதி சந்தியா சந்தோஷ்**



கடிதம்

# மண்ணிலிருக்கும் எம் அன்பிற்கினிய தோழர்களுக்கு!

விண்ணிலிருந்து பேசுகின்றோம். தமிழினி அக்கா முதல் இங்கு வந்த அனைவரும் ஒன்றாகவே உள்ளோம். நீங்கள் அனைவரும் நலமாக இருக்கவேண்டும் என ஆவல்தான், ஆனாலும் தடுப்பு முகாம்களில் எமக்கு தரப்பட்ட சித்திரவதைகளும் விசஊசியின் தாக்கங்களும் மெதுவாக உங்கள் உடலைத் தாக்கி மெல்ல தமது வேலையை ஆரம்பித் திருக்கும் என நம்புகிறோம்.


மண்ணுக்காக களமாடிய எம் அனைவரையும் வேரோடு சாய்க்கும் எண்ணத்தில் எமக்கு நடந்த சித்திரவதைகளும் நாம் அனுபவித்த வேதனைகளும் நினைக்கும்போதே இரத்தம் கொதிக்கிறது வலி நிவாரணிகள் என எமக்கு ஏற்றப்பட்ட ஊசிகள் வலிநிவாரணிகள் அல்ல, எம் மீது வன்மம் கொண்டு ஏற்றப்பட்ட நச்சூசிகள் என்பதை இப்பொழுதுதான் புரிந்து கொண்டோம்.

எங்கள் அனைவருக்காகவும் போராட்டங்கள் நடாத்துவதாலோ அல்லது வழக்குகள் தொடர்வதாலோ எமக்கு எந்த பலனும் கிடைக்கப்போவதில்லை என்பது நாம் அறிந்ததே. செந்தணலில் நின்றுகொண்டு தகிக்கும் வெம்மைக்குள் படும்பாடு தாங்கமுடியவில்லை. இத்தனை துன்பப்பட்டு வாழ நாம் செய்த தவறுதான் என்ன? இந்த மண்ணை நேசித்தது தவறா? எங்கள் உயிர்களை விட எம் மக்களின் சுதந்திரமே பெரிதென நினைத்தது தவறா? சாவுக்கு அஞ்சாது களமதில் நின்றாடியது தவறா? எம் போன்ற இளைய வயதினர் எத்தனையோ இன்பத்தினை அனுபவித்தபோது நாங்கள் மட்டும் கனவுகளை சந்தோசத்தை புதைத்துவிட்டு மண் மீது தீராப்பற்றுக்கொண்டு வாழ்ந்ததுதான் தவறா?


கால ஓட்டத்தில் இன்னுமொரு ஐந்தாண்டுகளில், எம் தலைவனால் வழி நடத்தப்பட்ட முகாம்களில் அடைத்து வைக்கப்பட்ட தோழர்கள் அனைவரும் ஒவ்வொருவர் ஒவ்வொருவராக எம்மிடமே வந்து சேர்வீர்கள் என நடப்பவை உணர்த்துகிறது. எங்கள் பிள்ளைகளும் உறவுகளும் எம்மையிழந்ததும் தனித்தீவுகளாய் வாழ்ப்போகின்றார்கள் என்பதை எண்ணும்போதுதான் உள்ளம் கருகி மனம் வலிக்கிறது. வாழும்போதே சாவின் நாட்களை எண்ணும் நிர்ப்பந்தம் எங்களின் தலைவிதியோ. விடிவெள்ளிகள் வானில் பூக்கும் என்று மண்ணில் வாழும் காலம் வரை காத்திருந்தோம். விடிவெள்ளிகள் பூக்கப் போவதில்லை, மீண்டும் ஒரு பிறவிகொண்டு அடைவோம் எம் கனவுகளை.

இப்படிக்கு
அவலச்சாவடைந்த
உங்கள் தோழர்கள்.
தமிழரசி






கதை மூலம் ஆங்கிலம் கற்போம்



# THE WOLF IN SHEEP SKIN


A wolf was walking in the countryside. He found a sheespskin spread on the ground. he thought," I wear this skin and get mixed up in a flock .The shepherd will not suspect me . at night, I will kill a stout sheep and then take him away with me"

The wolf covered himself with the sheepskin and get mixed up with a flock of sheep. as he had expected, the shepherd took him for a sheep and shut him also in The pen. the wolf was waiting for night.

the shepherd had a feast that night. He sent a servant to fetch a fat sheep. The servant saw the sheepskin covered wolf by chance. That night, the wolf for supper.

**EVIL THOUGHTS HAVE EVIL ENDS**

தமிழ் மொழிபெயர்ப்பு - 22 ஆம் பக்கத்தில்



வரலாற்று ஆளுமை

சென்ற மாத தொடர்ச்சி

# குலை நடுங்கவைத்த குள்ளப்பெண்

பல கொலை, கொள்ளைகளில் ஈடுபட்ட பூலான்தேவி, அப்போதைய முதல் மந்திரி அர்ஜூன்சிங் முன்னிலையில் சரண் அடைந்தாள். 11 ஆண்டுகளுக்கு மேலாக ஜெயில் தண்டனை அனுபவித்ததும் வழக்கு விசாரணையில் தாமதம் ஏற்பட்டு வந்ததால் தன்னை விடுதலை செய்யவேண்டும் என்று பூலான்தேவி சுப்ரீம் கோர்ட்டில் முறையீடு செய்திருந்தாள். இதற்கிடையில் உத்தரபிரதேசத்தில் பதவி ஏற்ற முலாயம்சிங் யாதவ் தலைமையிலான கூட்டணி அரசு, பூலான்தேவிக்கு எதிரான வழக்குகளைத் திரும்பப் பெற்றது. மத்தியபிரதேச மாநிலத்திலும் அவள் சம்பந்தப்பட்ட வழக்குகள் எதுவும் நிலுவையில் இல்லை. இந்த சூழ்நிலையில் பூலான் தேவியை பிணையில் விடுதலை செய்ய உச்ச நீதிமன்ற கோர்ட்டு நீதிபதிகள் உத்தரவிட்டனர். விடுதலையாகும் பூலான் தேவிக்கு பலத்த பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்றும் நீதிபதிகள் குறிப்பிட் டிருந்தனர்.

உமத்சிங் என்பவரைத் திருமணம் செய்து இல்லற வாழ்வில் நுழைந்தார். சமூக சேவையில் அவருக்கு அதிக ஆர்வம் உண்டாகியது. இதனல் பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனுக்காக ஒரு சேவை அமைப்பை தொடங்கினார். பின்னர் முலாயம்சிங் யாதவ் தலைமையிலான சமாஜ்வாடி கட்சியில் சேர்ந்தார். 1996 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் உத்தரபிரதேசத்தில் உள்ள மிர்சா பூர் தொகுதியில் சமாஜ்வாடி கட்சி வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பாராளுமன்றத்தில் குரல் கொடுத்தார். பழைய வழக்குகள் பூலான் தேவிக்கு தொல்லை கொடுத்துக் கொண்டே இருந்தன. கோர்ட்டு படிக்கட்டுகளில் ஏறி இறங்க வேண்டி இருந்தது. இதற்காக பாராளுமன்றம் முன்பு தர்ணா நடத்தினார். பிறகு 1999 ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்ற தேர்தலிலும் அதே மிர்சாபூர் தொகுதியில் 2ஆவது முறையாக நின்று அபார வெற்றி பெற்றார்.

பூலான்தேவிக்கு 2,90,849 ஓட்டுகளும், அவரை எதிர்த்த பா.ஜனதா வேட்பாளருக்கு 84,476 ஓட்டுகளும் கிடைத்தன. அதாவது, பூலான்தேவி சுமார் 2 லட்சம் ஓட்டுகள் வித்தியாச த்தில் ஜெயித்தார். ''நான் பூலான்தேவி'' என்ற தலைப்பில் தனது வாழ்க்கை வரலாறு பற்றிய சுய சரிதையை பூலான்தேவி எழுதினார்.

''பாண்டிட் குயின்'' சினிமா படம் வெளிவந்தபிறகு சர்வதேச அளவில் பேசப்பட்டார்.

2001 ஜூலை 25 இல், பூலான் தேவி புதுடில்லியில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து மகிழுந்தில் ஏறிப் புறப்படும் போது முகமூடி அணிந்த மூவரால் சுடப்பட்டு இறந்தார். அவரது தலையில் மூன்று தடவைகளும், உடம்பில் இரண்டு தடவைகளும் சுடப்பட் டன. பூலான்தேவியின் வாழ்க்கைப்பயணம் அன்றுடன் முடிவிற்கு வந்தது.

(முற்றும்)

**நன்றி இணையம்**





தனது இரண்டு வயதிலேயே தந்தையை இழந்தார். அதன் பிறகு ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்ட அவருடைய குடும்பம், தாய்வழி தாத்தா-பாட்டி வாழ்ந்த பெங்களூருக்குச் சென்றது. பெங்களூரில் தங்கியிருந்த அந்த குறுகிய காலத்தில், சில ஆண்டுகள் பிஷப் காட்டன் பெண்கள் உயர்நிலை பள்ளியில் கல்வி பயின்றார். அவரது தாயாருக்கு வெள்ளித் திரையில் நடிக்க வாய்ப்புக் கிடைத்ததால், அவருடைய குடும்பம் சென்னைக்கு வந்தது. சென்னையிலுள்ள சர்ச் பார்க் ப்ரேசெண்டேஷன் கொன்வென்ட்டில் தனது கல்வியைத் தொடர்ந்த இவர் 1964 இல் அவர் பத்தாம் வகுப்பை முடித்தார். அப்போது மேல்படிப்பை மேற்கொள்ள அரசிடமிருந்து கல்வி உதவித் தொகை கிடைத்தபோதும், அதை ஏற்காமல் தனது சிறு வயதிலேயே திரைப்படத்துறையில் கால்பதித்தார்.

தனது 4 வயது முதலே கர்நாடக இசையையும், பரத நாட்டியத்தையும் கற்றுத் தேர்ந்தார். அதோடு மோகினி ஆட்டம், கதக்களி, மணிப்புரி போன்ற நடனங்களிலும் தேர்ந்தவராகத் திகழ்ந்தார். நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் தனது பரதநாட்டியத்தை அரங்கேற்றியுள்ளார். திரைப்படங்களில் ஏராளமான பாடல்களையும் அவர் பாடியிருக்கிறார். கல்வியில் சிறந்து விளங்கிய ஜெயலலிதா சட்டம் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்டார். ஆனால், விதி அவருக்கென்று வேறு திட்டங்கள் வைத்திருந்தது. குடும்ப நிதி தட்டுப்பாட்டின் காரணமாக, அவரது தாயார் அவரை திரையுலகில் நடிக்க வலியுறுத்தினார். 15 வயதில், அவர் ஒரு முன்னணி கதாநாயகனுடன் அறிமுகமானார். அதுவே அவருடைய புகழ்பெற்ற திரைப்படத் தொழிலுக்கு ஆரம்பமாக இருந்தது.

எபிஸில் என்ற ஆங்கில படம் மூலமே தனது திரையுலக வாழ்க்கையைத் தொடங்கினார். ஆனால், அப்படம் அவருக்கு எந்த பாராட்டும் பெற்றுத் தரவில்லை. 1964 இல், திரையுலகில் தன்கென்று ஒரு தனி வழியையும், ரசிகர்களின் மனதில் நீங்கா இடத்தையும் பிடித்தார். ஜெயலலிதாவின் முதல் இந்திய படம், 1964 இல் வெளியான சின்னடா கொம்பே என்ற கன்னட படம். இப்படம் அவருக்கு பெரும் விமர்சனங்களையும், பார்வையாளர்களின் கைத்தட்டலையும் பெற்றுத் தந்தது. ஒரு வருடம் கழித்து, அவர் வெண்ணிற ஆடை என்ற படம் மூலமாக தமிழ் திரையுலகில் தனது நடிப்பைத் தொடங்கினார். அதன் பிறகு, தெலுங்கு சினிமாவில் தோற்றமளித்தார். அடுத்தடுத்த ஆண்டுகளில், அவர் பல தமிழ் படங்களில் நடித்து தனது நடிப்பு திறமையை வெளிக்கொண்டு வந்தார். அவர் நடித்த பல படங்கள் நன்றாக ஓடி பாக்ஸ் ஆபிஸில் இடம் பெற்றது. நடிகர் எம்.ஜி.ஆருடனான அவரது ஜோடி பெரும் வெற்றி பெற்றுத் தந்தது மற்றும் அவரது ரசிகர்களையும் மிகவும் கவர்ந்தது. திரையுலகின் பிற்பகுதியில் ஜெய்ஷங்கர், ரவிச்சந்திரன் மற்றும் சிவாஜி கணேசன் போன்ற கதாநாயகர்களுடன் இணைந்து நடித்துள்ளார். 1968 இல், அவர் தர்மேந்திரா நடித்த இஜத் என்ற இந்தி படத்தில் நடித்துள்ளார். மோஷன் பிக்சர் படமான 1980 இல் வெளியான நதியை தேடி வந்த கடல் என்பது அரசியலில் நுழையும் முன் அவரது திரை வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்த படமாகவுள்ளது.

ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி என ஐந்து மொழிகளில் புலமைபெற்ற அவர், மலையாளத்தைப் புரிந்துகொள்ளும் திறனையும் பெற்றிருந்தார். பல்திறன் ஆளுமை கொண்ட பெண்ணாக விளங்கிய இவர் தனது வாழ்வில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டு அனைத்தையும் துணிச்சலாக வெற்றிகண்டவர். தான் வாழ்ந்த காலத்தில் ஒரு இரும்பு பெண்மணியாக வாழ்ந்து சாதனை படைத்த இவர் தமிழக ஏழை மக்களின் மனதில் என்றும் பிரியமான அம்மாவாகவே வாழ்ந்து கொண்டிருப்பார்.

# ஒரு ஆளுமையின் சரிவு

தொகுப்பு : கோபிகை






# 4 ஆவது ஆண்டில் 2013

## எமது வாசகர்கள் அனைவருக்கும்

# நிஜத்தில் பூத்த

வாழ்க்கைப் பயணத்தில் நானும்
வட்டங்கள் போட்டே
வளையாமல் நெடுங்கோடாய்
வாழ்ந்திருந்தேன்,
சலனங்கள் கொண்டதில்லை,
சஞ்சலங்கள் வந்ததில்லை
இப்படித்தான் வாழ்ந்திருந்தேன்
அன்று வரை

தொழில் நுட்பக்கோளாறு
என்னையும் தொட்டுக்கொண்டது.
வரனாய்தான் நீ வந்தாய்,
வார்த்தையால் வசப்படுத்தினாய்,
இனிமையாய் நலம் கேட்டாய்,
என் உறவுகள் அத்தனையையும்.
திறக்காத என் மனக்கதவை
மெல்லனவே அசைத்துவிட்டாய்

நம்பிக்கை என்றாய்,
நாணயம் என்றாய்,
கௌரவம் என்றாய்
ஆண்மைக்கு வரைவிலக்கணமாய்
அத்தனை குணங்களையும்
உன்மீது சூடிக்கொண்டாய்
வாழ்வின் கடைசிவரை
உன்னோடு வருவேன் என்று
நம்பிக்கை நீ தந்தாய்,
அன்புக்கு அகராதி
அத்தனையும் நீ வகுத்தாய்
கிறங்கித்தான் போனது
சற்றே என் மனதும்.

காலங்கள் கரைந்து போக
வேதம் என்றும் சாஸ்திரம் என்றும்
பாசம் என்றும் பந்தம் என்றும்
பல வேள்விகள் நீ வளர்த்தாய்,
ஆகுதியாய் போனது
உன் வார்த்தைகள் அத்தனையும்.

ஏதேதோ காரணங்களால்
மீண்டும் வந்தாய்,
உன் காயங்கள் சொன்னாய்,
வாழ்வின் முறை சொன்னாய்,
சோகங்கள் சொன்னாய்,
சொந்தங்கள் சொன்னாய்
உன் உணர்வுகள் புரிந்தவளாய்
என் கொள்கைகள் அத்தனையும்
உதறி எறிந்தேன் -உனக்காக

# உங்கள் ஒளிஅரசி

# 2017

நன்றிகள் உரித்தாகட்டும்




# பொய்கள்

அன்பால் கண்கள் ஒளி கொண்டது
உனக்காக அழுகின்ற சுகம் தந்தாய்
அன்பினால் என்னை சிலிர்க்கவைத்தாய்
என் இதயச் சிலுவையில்
இறுக்கமாய் உன்னை
அறைந்து கொண்டேன்.
உனக்காய் மாறினேன்
உன்னை நானறிந்தேன்
பெற்றோர் என்றாய்
ஊர் என்றாய், சுற்றம் என்றாய்
உன் அத்தனை நினைவுகளையும்
என் மனதில் சுமக்கவைத்தாய்.
உனக்குள்ளே புதைத்தவற்றை
என்றோ நான் அறிந்திருந்தேன்.
குறுகிப்போய் நிற்பாய் என
மௌனித்து நான் இருந்தேன்.
இன்றுவரை சொன்னதில்லை
இவை எதையும் நான் உனக்கு.

காதல் என்றாய் ஏமாற்றம் என்றாய்
கண்ணியத்தின் காவலன் என்றாய்
எத்தனையோ நீளப்பொய் சொன்னாய்
அத்தனையும் மறந்தேன் மன்னித்தேன்.

பிரிவு என்றாய் வேற்றுமை என்றாய்
திருமணத்திற்கு வாழ்த்தும் நீ சொன்னாய்
சந்தோஷம் எனக்கு, கூடிவாழ் என்றாய்
நெகிழ்ந்தே போயிருந்தேன்.

பெண்ணும் பிடிக்கவில்லை
வாழ்வும் ருசிக்கவில்லை
சூழ்நிலைக் கைதியென்ற
ஏதேதோ வார்த்தைகளை
நம்பித்தான் நானிருந்தேன்.

இடியாய் வந்தது வார்த்தைகள்
என் மனச்சுமைகளை
உன் இதயக்கோப்பையில் சுமந்தது
ஆறுதலுக்காக மட்டுமேயென்றாய்.
உன் வாழ்வின் நான்
வழிப்போக்கன் தான் என்றாய்
உன் மனவீட்டில் எனக்கு
இடமில்லை எப்போதும் என்றாய்
திருமணம் என்றாய்
மன்னிக்கச் சொன்னாய்
மறக்கச் சொன்னாய்
முடியாமல் நான் தவித்தபோது
வார்த்தைகளை வாளாக்கி
இதயத்தை அறுத்தெறிந்தாய்
பயந்துதான் போயிருந்தாய்
ஏதேதோ எண்ணங்களால்.

முத்தான அத்தனையும்கொண்டு
சொத்தாக என் வாழ்வில்
எதற்காக நீ வந்தாய்
மொத்தமாய் இத்தனை பேரிடியை
சத்தமில்லாமல் ஏன் தந்தாய்?
வாழவும் முடியாமல் சாகவும் முடியாமல்
ஏன் என்னை தவிக்கவிட்டாய்?
அத்தனை பாவங்களும் நீ செய்தாய்
ஆனாலும் பரிதவிக்கின்றேன்
நான் இன்று உன்னாலே.

அபர்ணா

## இம் மாத போட்டிப்பரீட்சைக் கையேட்டுக்கான விடைக் குறிப்புக்கள்

### பொது விவேகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. k | 2. N | 3. C | 4. o | 5. D |
| 6. E | 7. 55% | 8. 20000 | 09. 58% | 10. 25 |
| 11. 40 | 12. 63 | 13. 09 | 14. 20 | |

### பொது அறிவு

1. நடா
2. புயல் எச்சரிக்கையை புரிந்து கொண்டு செயற்படு வதற்கும், ஞாபகத்தில் வைத்துக்கொள்வதற்கும் வசதியாக புயலுக்கு பெயர் சூட்டப்பட்டுள்ளது.
3. டொனால்ட் டிரம்ப்
4. 100 m
5. கியூபா
6. கோமளவள்ளி
7. ரவிராஜ் கொலை வழக்கு
8. சபறிணா கணேஸபவன்
9. பேராசிரியர் அமரதேவ்
10. 15%
11. 685 மில்லியன்
12. இலங்கை பொலிஸ்
13. அன்டோனியா கியூரிஸ், போர்த்துக்கல்
14. 19 தடவைகள்
15. கருண் நாயர்

(17 ஆம் பக்க ஆங்கிலக்கதைக்கான கருத்து)

# ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாய்

### இக் கதையில் உள்ள சில ஆங்கிலச் சொற்களும் தமிழ் கருத்துக்களும்

| | |
|---|---|
| wolf - ஓநாய் | covered - போர்த்திக்கொண்டது |
| countryside - கிராமமொன்றின் பக்கமாக | servant - வேலையாள் |
| sheepspskin - செம்மறி ஆட்டின் தோல் | that night - அன்றிரவு |
| he thought - அது நினைத்தது | saw - பார்த்தான் |

ஓநாய் ஒன்று கிராமமொன்றின் பக்கமாக சென்றுகொண்டிருந்தது, அவ்வேளை அது செம்மறியா டொன்றின் தோலை கண்டது, உடனே அந்த ஓநாய்க்கு ஒரு யோசனை வந்தது, செம்மறியாட்டின் தோலை போர்த்திக்கொண்டால் ஆடுகள் மத்தியில் நடமாடலாம், இடையன் என்னை சந்தேகிக்க மாட்டான், இரவில் நான் நன்கு கொழுத்த ஆடொன்றை இழுத்துக்கொண்டு வந்து சாப்பிடலாம் என அது திட்டமிட்டது.

அதன்படி அது செம்மறியாட்டின் தோலை போர்த்திக்கொண்டது.இடையனும் அதை தன்னுடைய செம்மறி ஆடுகளுடன் சேர்த்துக்கொண்டான், பட்டியில் அடைத்தான் ஓநாய் இரவிற்காக காத்திருந்தது இடையன் அன்றிரவு விருந்து வைக்க எண்ணினான், அவன் தனது வேலையாலை அனுப்பி கொழுத்த ஆடொன்றை கொண்டுவரச் சொன்னான், இடையனும் ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாயை கொண்டுசென்றான்.

**போதனை: தீய எண்ணங்கள் தீமையைக் கொண்டுவரும்**

# ES Printers








யாழ். நகரப் பகுதியில் குறைந்த செலவில் சகல அச்சிடல் வேலைகளையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

**Be Happy to with us by sending your presents for your relations through our website**

www.esgiftz.com
info@esgiftz.com



ES GiftZ

Poster / Notice / Lable / Wedding Card/ Bag Print Award / Frame Item / Batch / Vehicle Brand / T-Shirt / Cap / ID Card / Key Tag / Book Mark / Pen Print / Book Printing / Woodent Print



Bill book, Carbon copy & non carbon copy, for all institutes with Colour or B/W print as your favourable sizes with lower price in required time.







021 4927 471 / 021 4927 472

esprintersjaffna@gmail.com

# 357, Kasthuriyar Road, Jaffna.

# டிசம்பர் மாத புது வரவுகள்




உங்களுக்குப் பிடித்த உடைகளை உங்கள் விருப்பிற்கேற்ப வீட்டிலிருந்தவாறே தெரிவுசெய்து வீட்டிற்கே வரவழைத்துப் பெற்று உங்கள் பண, நேர விரயத்தினைக் தவிர்த்துக்கொள்ள மேலுள்ள இணையத்தளங்களைப் பார்வையிடுங்கள்.

# நிலா

நீல வான ஆடைக்குள்
உடல் மறைத்து
இரவில் ஊர்கோலம் போகிறாள்
நிலவெனும் தேவதை
ஆனால் மாதம் ஒரு முறை
எங்கேயடி தொலைகிறாய்
யார் மீது கோபம்
ஏன்இந்த கண்ணாமூச்சி ஆட்டம்
உனை நிதம் தேடுகிறது
வானவெளியில் என் விழிகள்
இயற்கை நியதியை மறந்து

கயூரி புவிராசா.

# வக்கிர பூமி

இது வக்கிர பூமி
ஆசை என்ற வானில் விழும்
பல்லாயிரம் எரிகற்களை
ரசிக்கும் காலம்

அழகிய நிலவுக்கும்
வழியும் ஒளியுக்கும்
இங்கில்லை ரசிப்பு

எல்லையில்லா ஆக்கிரமிப்பு
பூதங்கள் நடுவே அறம்
அசிங்கப்பட்டு கிழித்தெறியப்படுகின்றது

அரச பூதத்தின் இருதயம்
ரத்த தாகம் கொள்வதை
சாமானியம் புரிவதில்லை

அநாகபீகத்தின் கரங்களில்
துடிக்கிறது மனித ஆன்மாவின் பெறுமதி
அடங்கா ஆசையின் இருப்புக்காய்
அழகு பார்க்கப்படுகிறது
மனித இறப்புக்கள்
தர்மம் குருதியாய் சிதறி ஓடுகின்றது

த.செல்வா கிளிநொச்சி

கவிதை

# கண்ணீரில் கரைந்த நட்பு

தாயின்றி தவித்தவளுக்கு தாய்மடி நீயும் தந்தாயடி
தந்தையை இழந்து நின்றவளுக்கு தோள் கொடுக்கும்
தோழியாய் நீயும் நின்றாயடி
தவமின்றி என் வாழ்வில் நீயும் கிடைத்தாயடி
எனை தாங்கும் வரமாய் நீயும் இருந்தாயடி....

துவண்டு போய் கிடந்தவளை அன்பு எனும்
அஸ்திரத்தால் தலை நிமிர்ந்து நிற்கவே செய்தாயடி
வலிகள் நிறைந்த என் வாழ்க்கையிலே
என் வழிகள் மறந்தே நானும் நிற்கையிலே
புது பாதை எனக்காய் அமைத்தே கொடுத்தாயடி...

கவலைகளால் என் கண்ணீர் கரைகையிலே
அள்ளி அணைத்தே என் விழி வெள்ளத்திற்கு
அணையாய் நீயே நின்றாயடி
திசை மாறிய என் வாழ்க்கை பக்கங்களுக்கே
திசையமைத்தே நீயும் தந்தாயடி....

அனைத்தையும் என் ஒருத்திக்காய் இழந்தாயடி
இறுதியில் என் வாழ்க்கை செழிப்புறவே
உன் காதலை நீயும் தியாகம் செய்தாயடி
உன் இதயம் எனக்களித்தே விண்ணகம்
நீயே சென்றாயடி....

இரத்த பந்தமற்ற என் ஒருத்திக்காய்
உன் உதிரம் நீயே கொடுத்தாயடி
இனியொரு ஜென்மம் நான் பிறந்தால்
எனக்கொரு மகளாய் நீயும் பிறந்திட வேண்டுமடி
உனை சுமந்திடும் தாயாகவே
நானும் மாறிட வேண்டுமடி.....

உதயசகி



திகிலூட்டும் மர்மத்தொடர்

# ஆளற்ற வீட்டிலிருந்து அழுகுரல்

மனச்சந்தோசத்துடன் டோர்ச்சின் பட்டனை அழுத்தினான். அது எரியவில்லை. கையால் வழுகி கீழே விழுந்தது. பற்றிகள் கழன்று உருண்டு போயின. ''எல்லாம் அபசகுனம்'' என குழம் பியபடிதனது போன்லைட்டை அடிப்பதற்காக போனை எடுத்தான். போன் பற்றி லோ லோ எனக்கத்தியது, பயத்துடன்கதிரையில் மீண்டும் அமர்ந்து யோசிக்கத்தொடங்கினான். சில நாட்களுக்கு முன்பு தான் அவனது மனைவி இறந்து போனாள். சாதாரண சாவு அல்ல, அவலச் சாவு. ஆம் தற்கொலை. காப்பாற்றும் முயற்சிகள் பயனளிக்காது பிணமாகிப்போன மனைவியின் மரணம் நினைவிற்கு வந்தது. அவன் மனைவி இப்படிச்செய்வாள் என்று அவன் கனவில் கூட நினைக்கவில்லை.

உயிர் பிரிவதற்கு முன்பாக அவனிடம் ஏதோ கூறுவதற்காகவாயைத்திறந்துகையை அசைத் தாள் அவள் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. உங்களுடன்வாழ முடியவில்லை, நான் போய் வருகின்றேன்என்பது போல கண்கள் யாசித்து நிற்கும் போதே அவளது உயிர் பிரிந்துவிட்டது. அந்த நினைவுகள் அவன் மனதில்திடீரென படம் போல வந்துகொண்டிருந்தது. மனைவிஏன் இப் படிச் செய்தாள்? அவளது இறப்பின் பின் எப்போதும் ஞாபகத்தில் வரும் கேள்வி இப்போதும் வந்தது. மனைவி சாவதற்கு முந்தைய நாள்ஒட்டிய கடிதம் ஒன்றை அவனிடம் தந்தாள். அதைப் பிரித்துப் பார்க்காது புத்தகம் ஒன்றினுள் வைத்தது இப்போதுதான்ஞாபகம் வந்தது. அவள் மரணத்திற்கும் அதற்கும் ஏதாவதுதொடர்பு உண்டா?

கண்களில் இருந்து கண்ணீர் மெல்ல உருண்டது. கரண்ட் வந்ததும் கட்டாயம் அந்தக் கடிதத்தைப் பார்த்துவிட வேண்டும் என எண்ணியபோது போனறெயின் திரும்பவும் உரத்த சத்தத்துடன் திரும்பியது. ஆனால், லைட் இல்லாமல் எப்ப டிப்போனது? எப்படிவிரைவாகத் திரும்பியது, யோசிக்கையில் மீண்டும் துர் நாற்றம் மூக்கைப் பிளந்தது. மீண்டும் நாய் அலறியது. பயம் கலந்த துணிவுடன் உறுதியெடுத்தான். அப்போதேகரண்ட் வந்துவிட்டது. கதிரையில் இருந்தவன் அதிர்ந்துபோய் ''ஐயோ'' என்ற சத்தத்துடன் மயங்கி விழுந்தான். வீட்டின்



நடுஹோலில் மேலே கட்டியிருந்த சோபல்ப் (அழகிய பெரிய மின்குமிழ்) திடீரென அறுந்துவிழுந்து சிதறிப்போனது. அவன் மனைவி ஆசையுடன் பல நாள் கேட்டு அடம்பிடித்துவாங்கிய அழகிய பல்ப்செற் அது. அந்த பல்ப் ஹோலில் இருக்கும் போதுவீடு முழுவதையும் மூடி அலங்கரித்திருப்பது போன்று ஓர் உணர்வு ஏற்படும், அந்தலைட்டைப் பார்த்து பிரமித்தவர்கள் பலர் உண்டு. இப்போதெல்லாம் அந்த சோலைட்டு மனைவி சிரிப்பது போன்றஉணர்வை அவனுக்கு கொடுக்கும்.

அவன் வீட்டிற்கு வரும் போது அவனை வரவேற்பதற்கு அங்கு எவரும் இல்லை. அந்தலைட்டே தன்னை வரவேற்பதாக நினைத்து மனதைத்திடப்படுத்திக்கொள்ளுவான், மனைவி ஆவலுடன் அடம்பிடித்துவாங்கிய பல்ப் என்பதனால் அதைப்பார்க்கும் போதெல்லாம் இறந்து போன மனைவி தனது வீட்டில் இருப்பது போன்ற எண்ணமும் மனச் சந்தோசமும் அவனுக்கு உண்டாகும். கரண்ட் வந்த போது ஏதோ ஒன்றைக்கண்டு அதிர்ச்சியுற்று மயங்கியவன், இந்த சோ பல்ப்பின் கோலத்தைப் பார்த்துஎன்ன செய்வான்? அவன்ஏன் மயங்கி விழுந்தான்என்பதையும் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். ஒரு புறம் சோ பல்ப் சிதறிக் கிடக்கிறது. மறு புறம் மயக்கமுற்றுச் சரிந்தவன் பிணம் போல கிடக்கிறான், பாவம் தண்ணீர் தெளித்து எழுப்பவோஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லவோ ஒருவரும் இல்லை. அப்போது பலத்தகாற்று வீசியது. திடீரென்று வீசியகாற்றினால் அவன் வீட்டில் யன்னல்கள் படார் படார் என அடித்தது. கண்ணாடி யன்னல்கள் என்பதால் சில கண்ணாடிகள் விழுந்துநொருங்கின. வீட்டுக்குவெளியே அலறிக் குரைத்துக்கொண்டிருந்த நாய் ஆவேசமாக பாய்ந்து கட்டியிருந்த இரும்புச்சங்கிலியை அறுத்துக்கொண்டுதெரியாத ஒருவரைத்துரத்துவது போல துரத்திக்கொண்டுவீட்டிற்குள்ளே ஓடி வநத்து. வீட்டிலிருந்த சோபா செற்றி மற்றும் மேசைகள் மீது பாய்ந்து பாய்ந்து யாரையோ துரத்துவது போல துரத்தியது. ஹோலின் ஒரு மூலையைப் பார்த்து நாய் விடாமல் குரைத்துக்கொண்டிருந்தது.

அப்படியாயின் அந்தவீட்டின் மூலையில் ஏதோ ஒன்று பதுங்கியிருக்கின்றது என்பது நிச்சயம். ஆனால் நாய்க்கு மட்டும் தெரிகின்றதாயின் அதில்ஏதோ மர்மம் இருக்கின்றதுஎன்பது தான்உண்மை. வீட்டு மூலையில் அப்படிஎன்ன இருக்க வேண்டும்? சற்று யோசிக்கத்தூண்டுகிறதல்லவா? ஆவேசமாககுரைத்த நாய் பின்னோக்கி அடியெடுத்துவைத்தது, தடியால்கலைப்பவருக்குப் பயந்து ஓடுவது போல அடியெடுத்துவைத்தபடி மயங்கிச் சரிந்து விழுந்துகிடந்தஎஜமானுக்குப் பக்கத்தில் முடங்கிக் கொண்டது. வீட்டுக் கோல் எல்லாம் ஆங்காங்கே இரத்தம் தெளிக்கப்பட்டது போலிருந்தது.


வீட்டுக் கோலில் எப்படிஇரத்தம் சிந்தப்பட்டிருக்கிறது? நாய் மீண்டும் யாரையோ பிடிப்பதற்குஎட்டிப் பாய்ந்தபோது கம்பி ஒன்றினால் நாய்க்கு அடிப்பது போன்று சத்தம் கேட்டது, நாய் பாய்ந்து சுதாகரித்துக்கொண்டது. மீளவும் நாய் ஆவேசமாகப் பாய்ந்தது, சடார் என யாரோ நாய்க்குஅடித்தாற் போல இருந்தது. நாய் எஜமானுக்கு மேலே பொத்தென்று. விழுந்து காலையும் கையையும் அடித்துக்கொண்டது. வாயிலிருந்து இரத்தம் வெளியேற நாய் துடித்துக்கொண்டிருந்தது. நாய் தன்மீது விழுந்ததால் மயக்கத்திலிருந்த அவன் கண்விழித்தான். மிரட்சியுடன் சுற்றுமுற்றும் பார்த்தவன் நாயின் கோலத்தைக் கண்டதும் தனக்கிருந்த ஒரே துணையை இழந்துவிட்ட துக்கத்திலும் அதன் சாவுக்கோரத்தைக்கண்ட பயத்திலும் ''ஐயோ என்னைக்காப்பாற்றுங்கோ, ஐயோ என்னைக்காப்பாற்றுங்கோ, இங்க ஏதோ நடக்குது'' என்று அலறினான். திடீரென ஏதோ ஒன்றை உணர்ந்தவனாய் ''எனக்கு ஒண்டும் செய்யாத, என்னவிடு, என்னை அமத்தாத, எனக்கு மூச்சு எடுக்கேலாம இருக்கு'' என மூச்சுத் திணறிக் கத்தினான். நடந்ததுஎன்ன?

**திகில் தொடரும்...**

**வடமுனையிலிருந்து**
**அபூர்வன்**







# பேச்சுக்கலை

முன்னைய காலத்தை காட்டிலும் இன்று நாட்டில் வாழ்க்கை பிரச்சினை சிக்கலுடையதாகிவிட்டது என்பதை கண்கூடாகப் பார்க்கிறோம். ஓர் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு நாட்டில் மக்கயிடமிருந்த அமைதியும் இன்பமும் திருப்தியும் நிறைந்த வாழ்க்கை இன்று கனவாய் பழங்கதையாய் மாறிவிட்டது. எதிர்காலத்தில் இன்னும் மோசமாகும் என்பதற்கான அறிகுறிகள்தான் தென்படுகின்றனவே தவிர, பிரச்சினைகள் தீர்ந்துவிடுவதற்கான அறிகுறி எதுவுமே இல்லை.

இன்று மனித வாழ்க்கை நிம்மதியற்றதாகிவிட்டது. திருப்தியில்லாத - சோர்ந்த முகங்களைத்தான் எங்கும் காண்கிறோம். வறுமை தீர்ப்பதற்கான வாய்ப்பு சமீபத்தில் இருப்பதாகத் தெரியவில்லை.

சமூக நிலையில் நாணயமும் நம்பிக்கையும் இல்லை. யோக்கியமாக வாழ்பவன் பிழைக்க தெரியாதவன் என பரிகசிக்கப்படுகிறான். அயோக்கியனால் ஆனந்தமாக வாழமுடிகிறது. உண்மைக்கு மதிப்பில்லை. பொய் போற்றப்படுகிறது. உண்மையில் மனித வாழ்க்கை இன்று ஒரு தீராத பிரச்சினைக்கு உள்ளாகிக்கிடக்கிறது.

ஆனால், நாம் முன்னேறிவிட்டதாக கூறிக்கொள்கிறோம். மனித வாழ்க்கையில் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிட்டதாகவும் மக்களிடையே விழிப்பு தோன்றிவிட்டதாகவும் பேசப்படுகிறது. நூற்றுக்கணக்கான பத்திரிகைகள் நாட்டு நலனுக்காக காரசாரமாக எழுதுகின்றன. மனிதனின் பிரச்சினைகளைப் பற்றி பக்கம் பக்கமாக விளாசித் தள்ளுகின்றன. மேடையில் என்னவென்றால் சொற்பொழிவாளர்கள் மக்களின் பரிதாபம் பற்றி குடம் குடமாக கண்ணீர் வடிக்கின்றனர். திரைப்பட நாடக பரிதவிப்பு காட்சிகளுக்கு நடிகர்கள் எப்படி நடிக்கிறார்களோ அதேபோன்று இவர்களும் நடிக்கின்றனர். ஆனால், அவர்கள் தோற்றத்திலும் உருவத்திலும் உயிர் இருக்கிறதா? உணர்ச்சியிருக்கிறதா? கிடையவே கிடையாது. வெறும் பொய்த் தோற்றம்.

சோளக்கொல்லையிலே கம்பீரமாக நிற்கிறதே ஒரு திருஷ்டி பொம்மை. துணிக்கடையிலே அழகான உடைகள் அணிவிக்கப்பட்டு நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறதே ஒரு விளம்பர பதுமை. அவற்றுக்கு என்ன மதிப்பிருக்கிதோ, என்ன சக்தி இருக்கிறதோ அதே நிலைதான் இவர்களுக்கும். காரணம், இன்று உண்மைக்கு மதிப்பில்லை.

எந்தவொரு விடயமும் ஓர் அளவை மீறும்பொழுது அது சக்தியிழந்து விடுவது மட்டுமல்லாது எதிரிடையான



பலனையும் உண்டாக்கி விடுகிறது. நாட்டிலும் பேச்சுக்கலை இந்த நிலையைத்தான் அடைந்துவிட்டது. பொதுநல சேவைக்கு பேச்சுக்கலை ஓர் அருமையான சாதனம். பண்புள்ளோரின் பேச்சு, பயனுள்ள பேச்சுகளுக்கு செய்யும் நன்மைகள் அளவிடமுடியாது. கலையைக்கொண்டு எவ்வளவோ பிரதானமான நன்மைகளை மக்களின் வாழ்விலே மலர வைக்கலாம். ஆனால், இங்கே பேச்சுக் கலை என்ன பாடுபடுகிறது?

'பேசுவது' என்றால் இங்கு பலர் 'உபதேசம்' செய்வது என்று எண்ணுகிறார்கள். தங்களுக்கு தகுதியிருக்கிறதா இல்லையா என்பது பற்றி கவலைப்படுவதில்லை. கண்ணை மூடிக்கொண்டு உபதேசம் செய்ய எல்லோரும் கிளம்பிவிடுகிறார்கள்.

நாட்டிய அரங்கில் பத்து வயதுச் சிறுமியும் காதல் பாட்டுக்கு அபிநயம் பிடிப்பது, ஆடுவது அவ்வளவு சாதாரணமாகிவிட்டது. அதேபோன்று இன்று அரசியல் என்றால் என்னவென்று அறியாதவர்களும் உலகத்துக்கு உபதேசம் செய்ய முற்பட்டுவிட்டார்கள்.

இன்று ஒரு அரசியல்வாதியாக உலாவ வேண்டுமென்றால் அரசியல் அறிவு இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. பேசத்தெரிந்த புன்னகையர்கள் என்ற பெயரிருந்தாலே போதும். வேறு எந்த தகைமையும் தேவையில்லை. சீர்திருத்தக்காரனாக இருப்பவன் எந்தவித சீர்திருத்தமும் செய்யவேண்டியதில்லை. தேச சேவகனாக மாற எந்த சேவையும் செய்யத் தேவையில்லை.

மேடையிலே நின்று நான்கு மணி நேரம் பேசத்தெரிந்தால் போதுமானது. அந்தப் பேச்சில் கருத்து இருக்கவேண்டுமென்பதில்லை. நகைச்சுவையும் கலாட்டா செய்யும் பண்பும் இருந்தால் போதும். இத்தகையவர்களே சிறந்த அரசியல்வாதி.

வானம் பொய்த்துவிட்ட காரணத்தால் விளைச்சல் குன்றி அதனால் பஞ்சத்துக்கு இலக்காகி பரிதவித்த மக்களை பற்றி எல்லோருக்கும் தெரியும். பஞ்சத்தின் கொடுமை காரணமாக தற்கொலை செய்துகொண்ட மனிதர்களின் பரிதாபச் செய்திகள் பல. பத்து மாதம் சுமந்த குழந்தையை விற்கத் துணியும் தாய்மார்களை பற்றிய செய்திகளையும் படித்திருக்கிறோம்.

வீதியோரத்தில் செத்துக் கிடக்கும் ஜென்மங்கள் முச்சந்தியில் எலும்பும் தோலுமாக கையேற்தி நிற்கும் குழந்தைகள் என இவை அன்றாட காட்சிகளில் சில.

இத்தகைய துயர் நிலை யாருக்குப் புரியும்? இவ்வளவு விடயங்களும் மக்களுக்குப் புரியும். ஆனால், எவ்விதமான உணர்ச்சி பிரதிபலிக்கிறது? பத்திரிகைகளிலோ புத்தகங்களிலோ சினிமாவிலோ பார்த்து ரசிக்கவேண்டிய சாதாரண விடயமாகிவிட்டது.

இப்படி மக்களின் உணர்ச்சியையே மங்க அடித்தவை செயற்றிட்டமற்ற - பொறுப்பற்ற - ஆடம்பர பேச்சுகள்தான் என்பதை மறுக்கமுடியாது.

பொது கூட்டங்களுக்கு வரும் மக்களின் மன நிலையும் பாட்டு கச்சேரி சினிமா பார்க்கப் போகும் மக்களின் எண்ணத்திலும் இன்று மாறுபாடே இல்லை. இரண்டும் ஒன்றுதான்.

சினிமாவில் நடிகன் எப்படி நடித்தான், பாட்டு கச்சேரியில் பாடகி அல்லது பாடகன் நயம் எப்படி இருந்தது என்று விமர்சனம் செய்வதுபோல பொது கூட்டங்களில் பேசும் பேச்சாளனை இன்று மக்கள் அளவெடுக்கிறார்கள்.

பேச்சாளனின் தோற்றம் எப்படி இருந்தது. பேச்சில் எத்தனை இடத்தில் அடுக்கு மொழிகள் சிதறின? எப்படி எதிர்க்கட்சிகளைத் திட்டினான்? என்றுதான் மக்கள் கவனிக்கிறார்களே தவிர, அவன் என்ன பேசினான். அதனால் நமக்கு ஏற்படக்கூடிய பயன் என்ன? என்று எவரும் சிந்திப்பதில்லை.


இந்த மட்டரக மனப்பான்மை வளர்ந்ததன் காரணமாகத்தான் பேச்சாளர்கள் கேவலம் தங்களை ஒரு காட்சிப்பொருளாக மட்டும் மாற்றிக்கொண்டு விட்டனர்.

புகழடைவதற்காக பேச்சாளன் பேசினாலும் மக்கள் அதைக் கேட்கவேண்டிய நிலை.

இந்நிலையில் வாழ்க்கையின் உண்மையான பிரச்சினைகள் உணரப்பட்டு பரிகாரம் தேடும் நிலை உடனே ஏற்படும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?



யோகா



# பொங்கினார் பொன்னுச்சாமி

பொங்கலின் முதல் நாளே ஊரெல்லாம் ஒரே ஆரவாரம். பட்டாசுகள், ''படார் படார்'' என வெடித்துக்கொண்டிருந்தது. பட்டங்களுடன் பல சிறுசுகளும் பெரிசுகளும் அங்குமிங்குமாக ஓடிக்கொண்டிருந்தனர். பட்டாசுச் சத்தம் ஒருபுறம் பட்டத்தின் விண் மறுபுறம். விண்ணின் இதமான நாதமும் ''படீர் படீர்'' என வெடிக்கும் வெடியும் ஊரையே கலகலப்பாக்கியது. துலைஞ்சு போகுது களில்ல சனியனுகள் திட்டிக் கொட்டுகின்ற பழசுகள். மறுபுறம் பட்டாசுப் பைத்தியமாக இளசுகள் திரிய ஒவ்வொரு வெடியும் பழசுகளுக்கு இதயத்தை இறுக்கிப் பிழிவது போல் இருந்தது. இளசுகள் பழசுகளோட செய்யும் சேட்டைகள் கொஞ்சநஞ்சமல்ல. கிண்டல் செய்யும் இளசுகளை ஊன்று கோல் கொண்டு கலைத்துத் திரியும் பழசுகளின் ஓடிப்பிடிக்கும் விளையாட்டு பிரமாதம்.

வீதிவீதியாக பொங்கல் பானை விற்பனை களைகட்டியது. பேசில் காசில்லாமல் பத்துக் கடை ஏறி இறங்கி பையன்கள் தங்களை பார்க்கமாட்டாங்களா! என ஏங்கும் பெண்கள், புடைவைக் கடையில் அடுக்கியிருந்த உடுப்புக்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கிளறிவிட்டு அடுத்த கடையில பாத்திட்டு வாறம் என பொய்களை பொங்கல் வாழ்த்தாக அள்ளி வீசும் பொண்ணுகள். பொங்கல் நாளாச்சே என ஆத்திரத்தை அடக்கிக்கொள்ளும் புடைவைக் கடைக்காரர். இறுக்கமான உடுப்புத்தான் இப்ப பாஸனாம், புது உடுப்பை உள்ளால பிடிச்சு ஒரு அடி அடிக்க ரெய்லர் கடைக்கு முன்னுக்கு கியூவில நிக்கும் நம்ம பையன்கள், அளவு பார்ப்பதற்கு இறுக்கமாக அடித்து போட்டுக் கொண்ட ஜீன்சை கழட்ட முடியாது கெந்தும் தம்பிமார்.

கண்ணுக்கு குளிர்ச்சியா நாலு பெட்டைக்குட்டிகளை பெத்து ஜொலி ஜொலிப்பாக வளர்த்து வரும் ரெயிலர் பொன்னுச்சாமிக்கு மாமா மாமா என நூல் விடும் தம்பிமார். ''பாவம் மீசை கூட அரும்பேல்ல அதுக்கிடையில கலியாணப் பைத்தியமா அலையுதுகள்'' கொஞ்சம் திட்டிக்கொள்ளும் பொன்னுச்சாமி.

காதலனை அழைப்பதற்காய் பல தடவை வந்துசேரும் மிஸ்கோல்கள். மிஸ்



## பொங்கல் சிறப்புச் சிறுகதை

கோலை மிஸ் பண்ணலாம். எதிர்காலத்தில மிஸ்ஸிஸ்சா வரப்போகும் மிஸ்சின் மிஸ் கோலை மிஸ் பண்ணவே கூடாது எனப்பயந்து 'இந்தா வந்திட்டன்' 'வெளிக்கிட்டன்' 'பக்கத்தில வந்திட்டன்.' என பந்தா காட்டும் பையன்கள். இப்படித்தான் காத்திருந்தான் கோகுலன். இவனுக்கு 22 வயது. ஆனால், அப்பான்ர பேசில ஆட்டையைப் போடுவதிலும் அம்மாவுக்கு விலையைக் கூட்டி சொல்லி அம்மாவிடம் கொள்ளையடிப்பதிலும் அவன் மாஸ்ரர் டிகிறி முடிச்சிருக்கிறான்.

கோகுலனின் அப்பா அவசரமாக ஓடிவந்து வயித்தை தடவிக்கொண்டு ஓடினார் பின்பக்கம். அம்மா உன்ர கோழிப்பிரட்டல் கறி அப்பாவுக்கு கலக்குது. அப்பா பின்னால ஓடுறார் பாவம் எமெஜென்சி போல கிண்டல் பண்ணினான் கோகுலன், வந்து நடக்கப்போகுது, பக்கத்துக் கடைக்கு மா வாங்கப்போவது போல பாசாங்கு செய்துகொண்டு நழுவினாள் கற்பூரம். தன்னில பிழை என்று உணர்ந்துகொண்டமையால் பற்றி எரியேல்ல கற்பூரம். அணைந்து போனாள். சில வேளைகளில் கற்பூரம் அனல் கொண்டு பற்றினால் கை கூப்பி அடங்கிப்போன கணவனின் சம்பவங்களும் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கவோர் விடயமாகும். அவர் பின்பக்கம் ஓடியதும் இவள் கடைக்கு போவது போல் ஓடியதும் பாசமிகு பிள்ளையான கோகுலனுக்கு அப்பாவின் பேசில் ஆட்டையைப் போட வசதியாக இருந்தது. பணத்தைக் களவாடிக் கொண்டு பல்சரில் புறப்பட்டான் கோகுலன். கொஞ்சத்தூரத்தில் காத்திருந்தாள் பொன்னுச்சாமியின் பெண், முகத்தை முழுவதும் மூடிய கெல்மெற்றுடன் பல்சர் சிட்டாக பறந்தது, அன்று தான் சம்பள நாள், களவாடிய பணம் இரண்டு 5000 ரூபா தாள்களே.

ஒரே கடையில எல்லாம் வாங்கலாம். அப்படிப்பட்ட கடையிலதான் சொப்பிங் நடந்தது. அம்மாவுக்கு சட்டைத்துணி எடுத்துக் கொடுத்த நிகழ்வு கோகுலனின் வரலாற்றில் எங்கும் பதிவாகவில்லை. ஆனால், வருங்கால மனைவிக்கோ அள்ளி ஊற்றுகிறான் அப்பாவின் பணத்தில். இடம் கண்ட இடத்தில் மடம் கட்ட நம்ம பெண்களுக்கு நல்லாத் தெரியும். பணம் கறக்கப்படுவது கோகுலனுக்கு தெரியவில்லை. சொப்பிங் பண்ணிக் களைத்தவர்கள் கூலாக குடிப்பதற்கு அமர்ந்தனர். ஒரு கப், இரண்டு ஸ்ரோ, என்ன கொடுமை, திரைப்படம் தோற்று விடும். ஒருவரை ஒருவர் பார்த்து மெய் மறந்து போயினர். இது அனைவரும் பார்க்கும் வெற்றிப்படமாக ஓடிக்கொண்டிருந்தது. ''கொடுமை கொடுமை'' முதலாளி தலையில் அடித்துக் கொண்டார்.

அப்போது மனைவியுடன் உள்ளே நுழைந்து கொண்ட ரெயிலர் பொன்னுச்சாமி ''ஏம்பா கூல்ரிங் கொண்டு வா'' என்றார். ''உங்களுக்கும் ஒரு கப்பில இரண்டு ஸ்ரோவே'' நறுக்கெனக் கேட்டான் பேரர். ''என்ன ராஸ்கல்?'' பொங்கி எழுந்தவர் மனைவியின் பார்வையில் தண்ணீர் ஊற்றிய அடுப்பு போல அடங்கிப் போனார். இதைக்கண்ட மகளும் வருங்கால மருமகனும் திணறிப்போய் பின்னே ஓடி மறைந்தனர். ஒருவாறு ரெய்லரும் மனைவியும் வெளியேற கோகுலனும் கவுண்டருக்கு வந்தான். வருங்கால மனைவி கடையை விட்டு வெளியேறி பஸ்சில் ஏறிப் போய்விட்டாள்.

பயத்தில் உடுப்பை எடுக்காது போய்விட்டாள். பில் எமவுண்ட் 15000 ரூபாவைக் காட்டியது. ''கொடியவள், இப்படி ஆண்டியாக்கிட்டாளே'' முழுச ஆரம்பித்தான். இதற்கிடையில் மேசையில் விட்டுப்போன துணிகளை எடுக்க மறுபடியும் ரெயிலர் மாமா உள்ளே வந்தார். அவர் விட்டுப்போனதை எடுத்துக் கொண்டு கிளம்பினார். கோகுலன் நாளை வந்து உடுப்பை எடுப்பதாக கூறி 10000 ரூபாவை கட்டிவிட்டு திட்டித்திட்டி வீட்டிற்கு கிளம்பினான். வீட்டிலே பணம் தொலைந்த விடயம் அரங்கேறியது. குற்றவாளியாக கற்பூரத்தை நிறுத்தினார் கணவன். கற்பூரத்திற்கு மகன் மீதுதான் சந்தேகம். அவள் காட்டிக் கொடுக்கவில்லை.

மறுநாள் ரெயிலரின் வீட்டில் பொங்கல் ஆரம்பமானது.

பானை பொங்கும் தறுவாயில் வாசலைத்தட்டினார் ஒருவர். அவர் வேறு யாரும் இல்லை உடுப்பு கடை முதலாளி. அவருக்கு ரெய்லர் பழக்கமானவர் ''வாங்கோ முதலாளி'' பொன்னுச்சாமி அழைத்தார். ''இல்லை, நான் கோயிலுக்குப் போறன் நேற்று உன்ர மகளும் மருமகனும் வந்து கடையில சாமான் வாங்கிட்டு காசு காணாமல் விட்டு ட்டுப் போயிட்டாங்கள். நீ இவங்கட கலியாணத்துக் கும் சொல்லேல்ல. இப்படி உயிருக்கு உயிரான ஒரே கப்பில இரண்டு ஸ்ரோ போட்டு கூல்றிங் குடிக்கிற தம்பதியை நான் காணேல்ல'' கூறிவிட்டுப்புறப்பட்டார். பானை பொங்கேல்ல, பொங்கி எழுந்தார் பொன்னுச்சாமி. பொங்கல் பானை சில்லுச் சில்லாக உடைந்தது. கையில் பாலுடன் வந்த மூத்த மகள் சிலைபோல நின்றாள்.



## பொங்கல் சிறப்புச் சிறுகதை

மாட்டிவிட்டிது புது உடுப்பு, பொங்கி எழுந்த பொன்னுச்சாமி மண்வெட்டிப் பிடியுடன் புறப்பட பின்னால அவர் பையன்கள் புறப்பட ரகளை ஆரம்பமாகியது. பொங்கி எழுந்த பொன்னுச்சாமி கற்பூரத்துடன் சத்தமிட்டுக் கொண்டிருக்க கோயிலுக்குப் போன கோகுலனும் அப்பாவும் வீட்டிற்கு வந்தனர். கற்பூரம் பற்றி எரிகிறது. பொன்னுச்சாமி பொங்குகிறார். நடுவில மாட்டிய அப்பாவும் கோகுலனும் முழிக்கின்றனர்.


பொன்னுச்சாமி மகளுக்கு உடுப்பு வாங்கிக் கொடுத்த விடயத்தைப் போட்டுடைத்துவிட்டார். பலநாள் திருடன் ஒருநாள் மாட்டிக்கொண்டான். இதைக் கேட்ட கோகுலனின் அப்பாவின் தலை சிதறுவது போல் இருந்தது. அவர் சாதுவானவர் என்பதனால் எரிந்த கற்பூரத்தையும் பொங்கின பொன்னுச்சாமியையும் அடக்கினார். பொன்னுச்சாமியின் மகளோ அப்பா என்ன செய்யப் போகிறாரோ என நெஞ்சு படபடக்க காத்திருந்தாள். அவர்களுக்கு பொங்கலும் இல்லை பொங்கல் பானையும் இல்லை. பொங்கிக் கொண்டுபோனவர் கையில் பொங்கலுடன் வந்தார். நல்ல செய்தியும் கூடவே வந்தது. பல்சர் கோன், கூடவே மாமா எனக் கூப்பிடும் சத்தம், சம்மந்தி வீட்டுப் பொங்கல் இதமாகவே இருந்தது.

**முற்றும்**

**வடமுனையிலிருந்து, அபூர்வன்**

## "ஒளிஅரசி" சொல்லறிவுப்போட்டி

போட்டி முடிவு திகதி
**20.01.2017**



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தா | ம | ரை | ■ | 2 க | ல | க | ம் | 3 தா |
| 4 க | ■ | ■ | 5 ப | ரி | கா | ர | ம் | லா |
| ம் | 6 ம் | ன் | ங் | கா | ■ | ■ | ■ | ட் |
| 7 ப | 8 தி | ■ | 9 க | ல | க் | 10 க | ம் | டு |
| ம் | ல் | 4 அ | ய | ன் | ■ | ழ | ■ | ■ |
| ■ | லா | ன் | ம் | ■ | 12 வி | த | வை | 13 மெ |
| 4 வி | னா | ன | ■ | 15 கோ | ப | ம் | ■ | ட் |
| டி | ■ | ம் | 16 கா | ப் | பி | ய | ம் | டி |
| வு | ■ | ■ | 17 சி | பி | ■ | 13 அ | ன் | பு |

'ஒளி அரசி' குறுக்கெழுத்துப் போட்டி இல. 33

**இடமிருந்து வலம்**

1.குழந்தை
2.கருணை
3.போர் என்பதை இப்படியும் கூறலாம்
4.ஐவகை நிலங்களில் ஒன்று
5.ஊரும் உயிரினம்(திரும்பியுள்ளது)
6.வானம்
7.விடுகதை
8.சட்டத்திற்கு அப்பாற்பட்டது
9.மானியம் என்பது
12. பந்துடன் ஆடு
13. முன்னிருந்தும் பின்னிருந்தும் ஒரே மாதிரி வருவது

**மேலிருந்து கீழ்**

1.வாசம் நிறைந்த மலர்
2. ஆடு மேய்ப்பவன்
3. சஞ்சலம் என்பது
4. ஒரு வகை ராகம்
6. ஏதேன் தோட்டத்தின் முதலாவது மனிதப் படைப்பு
7. மண்ணுக்குள் இருப்பது
8. இது தான் பின்னர் மரமாகிறது
10. சலுகை
11. வேலை என்பது (திரும்பியுள்ளது)

| இல. 28 இல் ரூ. 250/= பரிசு பெறும் அதிஷ்டசாலிகள் | 1 ஆம் இடம் | 2 ஆம் இடம் | 3 ஆம் இடம் |
|---|---|---|---|
| | மா.தேவா, ஹட்டன் | த. ஜெயந்தி, அல்வாய் | மா. ஐஸ்வர்யா, நெல்லியடி |



நல்ல சினிமாக்களை விமர்சனமாக தந்து வாசகர்களுக்கு துணைபுரிந்த ஒளிஅரசி சிறந்த பாடல் வரிகளைத்தந்து உங்கள் நினைவுகளை மீட்டவுள்ளாள். இம்மாதம் காமராசு திரைப்படத்தில் இடம்பெற்ற தாயின் பெருமையைச் சொல்லும் ஒரு பாடல் எம் வாசகர்களுக்காக....

ஆலயங்கள் தேவையில்லை
ஆகமங்கள் தேவையில்லை
தாயின் இதயம் போதும் மனிதா
சஞ்சலம் ஏதும் இல்லை(2)

தாய் போன்ற தெய்வமும் இல்லை
தாயின்றி ஜீவனுமில்லை
தாயின் அன்புக் கடனைத் திருப்பித்
தந்தவர் யாருமில்லை

(ஆலயங்கள்....)

ஆ ஆரீரோ கண்ணான
கண்மணியே காணுறங்கு

தூங்கும் வேளையில் பிள்ளை இருமினால்
துள்ளி எழுந்த என் அம்மா
ஆவி பதறி நான் அழுது புலம்பினேன்
இருக்கின்றாள் சும்மா
எங்கு சென்ற போதும் என்னைத்
துணையாக அழைப்பாயே
சொர்க்க வாசல் போகும் போது
தனியாகச் சென்றாயே
தலையாட்டும் விதியின் கையில்
விளையாட்டு பொம்மை ஆனேன்
தாயின் ஞாபக அலைகள் வீசும்
தனிமைத் தீவானேன்

(ஆலயங்கள்....)

வெள்ளி நிலவு தான் தொலைவில்
இருப்பினும் வெளிச்சம் பூமியில் வீசும்
உலக உறவு தான் அறுந்த போதிலும்
தொடரும் தாய்ப்பாசம்
ஆவியாகும் தண்ணீர் மீண்டும்
மழையாய்ப் பூமியைத் தீண்டும்
சோர்ந்த நேரம் மகனின் கனவில்
துணையாய்த் தாய் முகம் தோன்றும்
ஊராரை ஊட்டி வளர்த்தேன்
ஊரே உன் உறவாய் மாறும்
உன்னைத் தேடும் அன்னை வடிவில்
என்னை நீ காண்பாய்

(ஆலயங்கள்....)

தாய் போன்ற தெய்வமும் இல்லை
தாயின்றி ஜீவனுமில்லை
தாயின் அன்புக் கடனைத்
திருப்பி தந்தவர் யாருமில்லை
தாயின் அன்புக் கடனைத்
திருப்பி தந்தவர் யாருமில்லை
தாயின் அன்புக் கடனைத்
திருப்பி தந்தவர் யாருமில்லை....

**இசையமைப்பு : எஸ். ஏ. ராஜ்குமார்**
**பாடியவர் : எஸ்.பி.பாலசுப்ரமணியம்**

# European Language C

சர்வதேச

நிகழ்வு





வவுனியாவில் இயங்கிவரும் **European Languages** தனியார் சர்வதேச கற்கைமொழி பயிற்சி நிலையத்தின் மூன்றாம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கிறிஸ்மஸ் சிறப்பு நிகழ்வும் கடந்த மாதம் 20 ஆம் திகதி இறம்பைக்குளம் விருந்தினர் விடுதியில் நிர்வாக இயக்குநர் திரு. கே. வின்சட் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அந்நிறுவனத்தில் சர்வதேச மொழியினை பயின்ற 28 மாணவர்களுக்கு சர்வதேச தர சான்றிதழ் வழங்கிவைக்கப்பட்டதுடன் கிறிஸ்மஸ் சிறப்பு நிகழ்வும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை அதிபர் திருமதி. ஜி. நடராசா, போதகர் ஜெயசீலன், போதகர் றோலன்ஸ், போதகர் சரத்குமார், நிறுவனத்தின் பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கிவைத்தனர். சர்வதேச மொழியினை பயின்ற மாணவர்களின் அனுபவப்பகிர்வுகள், மாணவர்களின் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன.







இல.07, பழைய கச்சேரி வீதி, கிளிநொச்சி

TP : 0768304043

*Managing Diretor*

*TP : 024 5616556*

Email.europeanlanguag



Centre Vavuniya
தேச கற்கைமொழி சான்றிதழ் வழங்கும்
கிறிஸ்மஸ் சிறப்பு நிகழ்வும்
இல. 105, சூசைப்பிள்ளையார் குளம் வீதி ,
நெல்லி ஸ்ரார் அருகில், வவுனியா.
TP : 0769639447, 024 5616556
retor G. K. Vincent
16556 075 5202317
anguage2015@gmail.com
(அருள்மதி வவுனியா.)



தை பொங்கல் சிறப்பு நேர்காணல்

# பொங்கட்டும் தமிழ்



மனிதர்களின் தடங்கள் பல்வேறு பட்டடவை, சிலரின் சுவடுகளே நெஞ் சத்தில் நிலைக்கிறது, அந்த வகையில் அறிவிப்பு துறையில் இருபது வருட அனுபவத்தினை கொண்டவரும் தமிழ் எப்.எம் வானொலியின் அறிவிப்பாளரும் பொக்கிசத்தின் நாயகன் என பலராலும் வர்ணிக்கப்படுபவரும் இளைய தலைமுறையின் சிரேஸ்ட அறிவிப்பாளருமான சுந்தரலிங்கம் முகுந்தன், இன்றைய இலக்கிய உலகில் பலராலும் நேசிக்கப் படும் ஒருவராகத் திகழ்ந்து வருகின்றார். எமது ஒளிஅரசியின் நான்காம் ஆண்டின் முதலாவது வெளியீட்டின் பொங்கல் சிறப்பு நேர்காணல்பகுதியை அலங்கரிப்பதற்காக அவரையும் அவரது குடும்பத்தினரையும் ஒரு பொன்மாலைப் பொழுதில் சந்தித்தபோது வழங்கிய சிறப்புச் செவ்வி எம் வாசகர்களுக்காக



முகுந்தனுடன் மனைவி டிவனியா நிலூசினி மான்ன் மகள் ஆரணி

நேர்காணல் : அபர்ணா



**அறிவிப்பாளராக எம் வாசகர்கள் அனைவருக்கும் பரிச்சயமானவர் என்ற போதிலும் அறிவிப்பாளர் கடந்த முகுந்தன் சுந்தரலிங்கம் பற்றி எம் வாசகர்களுக்காக?**

அழகான ஒரு புன்னகையுடன் அருகில் இருந்த மகளின் பிஞ்சுக்கரங்களைப் பற்றிய படி, தன்னைப்பற்றி கூறத்தொடங்கினார், சொந்த ஊர்- வடமராட்சி நெல்லியடி. ஆரம்பக்கல்விநெல்லியடி மெதடிஸ்ற் மிஷன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. யுத்தம் காரணமாக கொழும்பிற்கு இடம்பெயர்ந்து (1989) உயர்தரம் வரை பம்பலப்பிட்டி இந்துகல்லூரி. அம்மா அப்பா தம்பி தங்கை என அளவான குடும்பம். கடவுள் தந்த இல்லறவாழ்க்கை, அதன் பயனாக அழகிய மகள் ஆரணி, இவர்களுடன் இனிதான வாழ்க்கை. என் மனைவி ஒரு கவிதாயினி, வானலை தேடிதந்த பல்லாயிரம் உறவுகளின் அன்பு, ஆதரவு ஆசிர்வாதம் இப்படியே நகர்கிறது வாழ்க்கை.

**ஒரு அறிவிப்பாளாராக வரவேண்டும் என நினைத்து ஒலிபரப்புத் துறையை தெரிவுசெய்தீர்களா, உங்கள் அறிவிப்பாளர் பிரவேசம் பற்றி கூறுங்கள்?**

பாடசாலைக் காலத்தில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் கல்வி ஒலிபரப்பு மற்றும் தேசியசேவை நிகழ்ச்சிகளினூடான பரிச்சயத்தோடு 1996 ஆம் ஆண்டின் பிற்பகுதிகளில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுதாபனத்தின் வானம்பாடி ஒலிபரப்பினூடாக அறிமுகமானேன். அறிவிப்பாளர் ஆகவேண்டும் என்ற எண்ணம் வெளிப்படையாக இல்லாத போதிலும் உயர்தர பரீட்சை பெறுபேறுகளிற்கு பிறகு சூழ்நிலை இத்துறையை தேர்வு செய்யவைத்தது.

பாடசாலைக்கால புறக்கிருத்திய அனுபவங்கள் ஒலிபரப்பு அனுபவங்கள் எமது தாய் வானொலியில் உரிமையுடன் சேரவழிவகுத்தது, அறிவிப்பாளரானேன்.

வானம்பாடி ஒலிபரப்பினூடாக வடக்கு கிழக்கிற்கென மட்டுப்படுத்தப்பட்டிருந்த என் பரிச்சயம் சூரியன் பண்பலை தோற்றத்தோடு அவ்வானொலியில் ஆரம்பகால குழாமில் என்னை இணையசெய்து நாடறியவைத்தது.

வி.என்.மதியழகன், ஜீவரட்ணம், பிரதீப் விரசிங்க, நடராஜசிவம் போன்றவர்கள் இன்றைய என் வாழ்வுக்கான அத்திவாரத் தூண்களாகினர்.

**நம் நாட்டில் எத்தனையோ வானொலி நிகழ்வுகள் இருந்தாலும் தமிழை வளர்க்கும் நோக்கோடு பண்பலையில் போற்றப்பட வேண்டிய ஒரு சிறந்த நிகழ்ச்சியாக பொக்கிஷம் இருக்கின்றது. இவ்வாறான ஒரு நிகழ்ச்சியை பலபரிணாமங்களோடு நீங்கள் தொகுத்து வழங்குகின்றீர்கள். இந் நிகழ்ச்சி பற்றி?**

தமிழை வளர்க்க வேண்டும் என்பதல்ல, தமிழ் வளர்ந்து தான் இருக்கின்றது. ஆயினும் தமிழை எமக்குள் பத்திரப்படுத்த வேண்டிய ஒரு கட்டாய உணர்வே இந்நிகழ்ச்சிக்கு படிமங்களை வரையறை செய்வதற்கு என்னுள் வழிவகுத்தது.

வாரநாட்களில் வானொலி கேட்கும் உறவுகளின், நாணாவித திறமைகளை எப்படியாவது வெளிகொணரச்செய்து படைப்பாளிகளின் திறமைகளை எம் பண்பலைவழியாக பலர் அறியச்செய்ய வேண்டும் என்ற உத்வேகம், தமிழ் எப்.எம். பண்பலை தலைமை அதிகாரி மற்றும் நிறுவனத்தின் அதிகார குழுமத்தின் அர்த்த புஷ்டியான சிந்தனை மற்றும் என் மீது அவர்கள் வைத்திருந்த நம்பிக்கை, ஒரு வானொலி நிலையத்தின் உள்ளக கோட்பாடுகளுக்கு அப்பால் சிறிது சுதந்திரமான செயற்படுதன்மையை எனக்கு வழங்கி இந்நிகழ்ச்சியினுடைய அடைவு மட்டத்தை விரைவாகச் சென்றடைய உறுதுணையாக இருக்கின்றது. இரவு 10 மணி தொடக்கம் 12 மணிவரையான நேரப்பகுதி என்பது அடுத்த நாளுக்கான சிந்தனை உருவாக்கத்தின் முக்கிய தருணமாக நான் உணர்கின்றேன்.

ஓய்வின்றி களைத்து போன உறவுகளுக்கும் பல்வேறு மன உளைச்சல்களோடு மனம் சலித்துப் போன உறவுகளுக்கும் தமிழால் நல்ல இதம் சேர்க்கும் எண்ணமே பொக்கிஷத்தின் தோற்றமாகும்.

காதல் தவிர்ந்த அனைத்து வாழ்வியல் அம்சங்களை கவிதையாக வரையும் கவிஞர்களின் படைப்புக்களை வாரியணைத்து வானலை சொந்தங்களிடம் சேர்க்கும் பொருட்டு திங்கள் இரவில் **கவித்தமிழாகவும்**, நம் மத்தியில் நல்ல யோசனைகளை உருவாக்கும் நோக்கிலும் பிரச்சினைகளை இனங்கண்டு தெளிவு பெறும் தர்க்கவியல் நோக்குடனான ஆற்றலை மேம்படுத்தவும் அடையாளப் படுத்தபடவேண்டிய அவசியமானவற்றை அன்றன்றே அலசி ஆராயும் பொது நோக்குடையவர்களாக எமது பண்பலை உறவுகளை வளப்படுத்தும் நோக்கிலும்



## தை பொங்கல் சிறப்பு நேர்காணல்

செவ்வாய் இரவு **சொல்வேருழாவாகவும்** வாழும் வாழ்க்கையின் அவசியத்தையும் வினைத்திறனையும் உணர்த்தி சிறப்புற வாழ்ந்தவர்களின் வாழ்வை அவர் வாழ்வின் ரகசியத்தை வெளிப்படுத்தி வாழும் வழி வகைகளைச் சொல்லிக் கொடுக்கும் வகையில் புதன் இரவில் **வாழ நினைத்தால் வாழலாம்** எனவும் வானொலிக்கான சிறுகதை எழுத்தாளர்களை மீளுருவாக்கம் செய்து அவர் படைப்புக்களை வெளிக்கொணரவைத்து கதை கேட்டு வளரும் சமூக உருவாக்கத்தையும் கதை சொல்லுவோரின் பங்களிப்புக்களையும் ஊக்குவிக்கும் பொருட்டு வியாழன் இரவில் **கதை சொல்லப்போறம்** எனும் படியாகவும் நிகழ்ச்சியை கேட்டு கொண்டிருக்கும் உறவுகள் மத்தியில் இலக்கியங்கள் தொடர்பான ஆர்வத்தையும் அறிவையும் அதிகரிக்க எம் துணை கொண்டு பொக்கிஷம் எடுக்கும் பிரயத்தனமாய் வெள்ளி இரவில் **சாகித்தியசாகரம்** எனும் மகுடத்திலும் வார நாட்களில் இரவு 10 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை எனது தொகுப்பில் தமிழ் எப்.எம். இன் பொக்கிஷம் நிகழ்ச்சி ஒலிபரப்பாகி வருகிறது.

**தற்போது பேச்சு வழக்குடன் பிறமொழி கலந்து அறிவிப்புகள் செய்வது நாகரீமாக இருக்கும் போது அதனைக் கடந்து தமிழை எதுகை மோனைகளுடனும் உவமைகளுடனும் எடுத்தியம்பி அனைவரையும் மெய்மறக்கச் செய்யும் உங்கள் அறிவிப்புப் பாணியின் இரகசியம் என்ன?**

எங்களுடைய இக்கேள்விக்கு முதலில் அவரது சிரிப்பே பதிலாக வந்தது. ஒருவருடைய இரகசியத்தை கேட்பது அவ்வளவு நாகரீகமான செயல் அல்ல, எனகுறும்பாக கூறியவர், எனக்குள் இரகசியம் என எதுவுமே மனதில் இல்லை. உங்கள் கேள்வியின் நோக்கத்தினை புரிந்து கொண்டவனாய் சொல்வதென்றால் மருவி வருதல் என்பது தொடர்பில் நான் அதிகம் கவலையாக கதைத்திருக்கிறேன்.

காலத்தின் தொன்மை என்றும் தேவையென்றும் சொல்லிச்சொல்லி இனத்தினதும் மொழியினதும் தூய்மையான அடையாளங்கள் சிதைவுறுகின்றன என நான் கருதுகின்றேன். தமிழை பேசும் முறையாகவும் எழுதும் முறையாகவும் வகைப்படுத்தியதாலோ என்னவோ இரண்டிலும் தேய்மானங்கள் இன்று உணரப்பட்டு வருகின்றது. நான் பணியாற்றும் வானொலியின் பெயருக்கேற்ப நான் பேசும் மொழி விசுவாசமாக இருக்க வேண்டும் என்பதில் கவனமாக இருக்கின்றேன். தமிழை தமிழாக ரசனையுடன் பேசும்பொழுது நீங்கள் அவதானித்த விடயங்கள் இயல்பாகவே எனக்குள் வந்து சேர்ந்துவிடுகின்றன.


என்னுடைய கடமை என்ன, எனது வகிபாகம் என்ன, என்பதை நன்கு புரிந்து கொண்டு என்னை இத்துறைக்குள் வளர்த்தெடுத்த ஜாம்பவான்களின் கீர்த்திக்கு என்னால் பங்கம் வந்துவிடக்கூடாது என்ற சிந்தனையுடனே நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குகின்றேன், அவ்வளவுதான், வன்தமிழ், கடினத்தமிழ், இலகுதமிழ், பேச்சுத்தமிழ் என்ற வரையறாக்களில் எனக்கு உடன்பாடில்லை, தமிழ் ஒன்றே, என்றார்.

**எழுத்துலகத்தில் உங்கள் பேனா பிரவேசித்திருக்கின்றதா, அதனைப்பற்றி எம் வாசகர்களுக்காக?**

எழுத வேண்டியவற்றையெல்லாம் பேசி முடித்து விடுகின்றேன். அதனால் இனிமேல் பேசமுடியாது என்ற நிலை ஏற்படும் போது வேறு வழியின்றி எழுதலாம் என எண்ணுகின்றேன்.

**உங்கள் நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் நேயர்களின் ஆற்றல் வெளிப்பாடுகளில் சரி பிழைகளை நேரலைகளிலேயே வெளிக்கொண்டு வருகின்றீர்கள். அதற்கு எவ்வாறான வரவேற்பு உள்ளது?**

என்னுடைய நிகழ்ச்சிகள் ஒரு குருகுலம் போன்றவை. ஆமோதிக்க வேண்டியவற்றை ஆமோதிப்பதற்கும் விமர்சிக்க வேண்டியவற்றை விமர்சிப்பதற்கும் தட்டிக்கொடுக்க வேண்டியவற்றை தட்டிக்கொடுப்பதற்கும் என் அறிவுக்கு எட்டியவரை திருத்தம் செய்யலாம் எனும் பொழுதில் அதற்கான பரிந்துரை செய்யவும் உரிமையுள்ளவன் உரித்துள்ளவன் என்ற அந்தஸ்தை அவர்கள் எனக்கு தந்திருக்கின்றார்கள். நேரலையிலே அந்தந்த தருணங்களில் அதனைப் பரிசீலிப்பதால் பலருக்கு அறிவூட்டலாக சென்றடைவதால் ஏககாலத்தில் பரந்துபட்ட முறையில் எமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முடிகிறது என்பதால் அதனை எல்லோருமே தமக்கான செம்மைப்படுத்தலாகவும் ஊக்கமாகவுமே கருதுகின்றனர்.



**மனிதனுக்கு புகழைக் கொடுப்பவை அறிவு, பணம் இரண்டுமே. இன்றைய போட்டி மிக்க விளம்பர உலகில் அறிவியல் விடயத்தை தவிர்த்து வெறுமனே காசு எனக்கூறி பணத்தினால் மனிதனை விலைக்கு வாங்குவது போன்ற செயற்பாட்டை ஒரு அறிவிப்பாளர் என்பதற்கு அப்பால் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

எதற்காக விலை பேசப்படுகிறது. விலை பேசுபவர்கள் யார் என்பது பற்றிய விழிப்புணர்வு இன்னமும் பரிபூரணமாக விலை பேசுபவர்களின் அறிவிற்கு எட்டாதது வேதனை தான், ஆயினும் காலப்போக்கில் இந்நிலை மாறுமென நம்புகிறேன். அத்தகைய விழிப்பூட்டலை உங்களைப்போன்ற அச்சு ஊடகங்கள் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வீர்களாயின் மிக நன்று என பணிவாக பரிந்துரை செய்கின்றேன்.

**தமிழ் மொழியில் எழுத்தாற்றலை வளர்க்கத் துடிக்கும் இன்றைய இளைஞர்களுக்கு நீங்கள் கூறவிரும்புவது?**

பானையில் இருந்தால் தான் அகப்பையில் வரும் என்ற மூத்தோர் கருத்தினைப் போல் அனுபவங்களின் சேகரிப்பு, பரந்துபட்ட வாசிப்பு, சிந்தனை, இனம், மொழி, சார்ந்த பொறுப்பு ணர்வும் பற்றுறுதியும் கொஞ்சம் திட்டமிடலும் தீர்க்கதரிசனமும் எம் தலைமுறை எழுத்தாளர்க ளுக்கு அவசியம் என்பதே என் பணிவான கருத்து.

அத்துடன் எம்மொழியின் செழுமையை சேதப்படுத்த மொழிக்குள் திணிக்கப்படும் அல்லது மொழிக்குள் ஊடறுக்கும் பல்வகை மாயைகளை இனங்கண்டு அவற்றிலிருந்து சாதுரியமாக விலகி நின்று எமக்குள் தொன்மையை, தமிழர்கள் வளர்த்த தமிழை பத்திரப்படுத்துங்கள் எனவும் ஆண்டுதோறும் வரும் பொங்கலைப்போல தமிழையும் தமிழர் கலாசாரத்தையும் பேணி காத்து, வரும் சந்ததியினரிடம் கையளிக்க வேண்டும் எனவும் விநயமாக வேண்டி நிற்கின்றேன்.

**நீங்கள் அதிகம் நேசிக்கும் கவிதை எது?**

ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் எண்ணற்ற கவிதைகள் இருக்கின்றன. எங்கள் வாழ்க்கை தான் மிகச்சிறந்த கவிதை, நான் கவிஞர்களின் நண்பன். கவிதைகளின் ரசிகன். (கணவனின் பதில் கண்டு முகம் மலர்ந்தார் துணைவியார்.)

**இலங்கையில் தற்போதுள்ள இலத்திரனியல் முதன்மை வானொலி என தங்களை தாங்களே மார்தட்டிக் கொள்ளும் சில்லறைத்தனத்தை பற்றியதங்கள் கருத்துஎன்ன?**

அது அவரவர் தன்னம்பிக்கை, இத்தகைய மந்திரம் மாயம் எல்லாம் இப்பொழுது மக்களிற்கு பரிச்சயம். அவர்கள் மிகத்தெளிவாகவே இருக்கின்றார்கள். வானொலி என்பது ஒரு பொழுது போக்கு சாதனம் என்பதற்கப்பால் அறிவூட்டல், அறிவுறுத்தல், திறன்வளர்த்தல், மகிழ்வூட்டல், ஒன்றுபடுத்தல் எனும்படியாக பல்வகைத் தன்மையுடைய கடமைகளை பொறுப்புணர்வுடனும் சரிவரவும் செய்யவேண்டிய ஊடகமாக இப்போது பரிமாணம் பெற்றுவருகின்றது.

இதனை உணர்ந்து விளம்பரதாரர்களும் திட்டமிடலாளர்களும் வானொலியைச் சார்ந்த அனைத்து பணியாளர்களும் சமகால, மற்றும் எதிர்கால சந்ததியினரின் சமூக விழுமிய கோட்பா டுகளை கருத்திற்கொண்டு தத்தமது பங்கை அர்ப்பணிப்புடன் சரிவரச்செய்ய வேண்டும். வானொ லியைக் கேட்கும் உறவுகளும் வானொலியுடனான தமது தொடர்பாடலை பிரயோசனமாகவும் அர்த்தமுள்ளதாகவும் உருவாக்கிக் கொள்ளவேண்டும் என்பதை இச்சந்தர்ப்பத்தில் தெரியப்படுத்த விரும்புகின்றேன். ஏனெனில் பாட்டுகள் கேட்பதற்கு இப்போது பல சாதனங்கள் இருக்கின்றன. வானொலி என்பது பாட்டுப்பெட்டி அல்ல என்ற மனநிலை இருதரப்பிலும் வரவேண்டும்.

**எப்போதும் உங்களை தாடியுடனே பார்க்கமுடிகிறது, அதன் காரணம் என்ன?**

நான் எதையும் திட்டமிட்டு செய்வதில்லை. தானாகவே அவ்வாறு நடந்து அது எனது அடையாளமாகிவிடுகிறது, நான் என்ன செய்யமுடியும். (மீண்டும் சிரிக்கிறார்.)

அழகான அந்த மாலைப்பொழுதில் அவர்களின் எதிர்காலத்திற்காய் ஒளிஅரசி யின் சார்பில் வாழ்த்தி விடைபெற்றோம்.



சிறுகதை

# பூந்தென்றல் காற்றே..!

வாசல் கதவு படபட என தட்டும் சத்தம் விடாமல் கேட்டது. நேரத்தைப் பார்த்தால் இரவு 10 மணி இருக்கும். 'இந்த நேரத்தில் யாராக இருக்கும்' என மனம் ''திக்திக்'' என்றது மதுவந்திக்கும் அவளது தாய்க்கும். இருவரும் ஹால் லைட்டை போட்டு விட்டு ஜன்னல் ஓரமாக நின்று பார்த்தனர்.

''யார்?'' என தாய் கேட்க, ''மது நான் தான் ஆரூரன்'' என்று மறுகுரல் வந்தது. அதன் பின்பு தான் தாய் கதவைத் திறந்தாள். வாசலில் நின்றவனைப் பார்த்ததும் பின்னாடி கால்கள் நகர அவனோ முன்னாடி ஓர் அடி வைத்து உள்ளே வந்தான்.

''என்ன விசயமப்பா, இந்த நேரம் வந்திருக்கிறாய்'' என தாய் மாலா கேட்க, ''ஒன்றும் புரியாத மாதிரி பேசுறீங்களே அத்தை, எனக்கு நடந்தது எல்லாம் தெரியும், நீங்கள் மறைக்க நினைக்காதீர்கள்.'' என்றவனை வழிமறித்து ''இல்லையப்பா, உங்கள் வீட்டில்தான் பிரச்சினை அதனால் தான் இந்த முடிவு எடுக்க வேண்டியதாகப் போச்சு தம்பி'' என்றார். ''அதுசரி அத்தை எனக்கு ஒரு போன் கூட பண்ணாமல் நீங்களே எப்படி முடிவு எடுப்பீர்கள். பயணத்தால் நேராக உங்கள் வீட்டுக்குத்தான் வாறன் அத்தை'' என்றவன், 'மதுவுக்கு கூட என்னை பிடிக்கவில்லை போல, பழைய நாட்கள் நினைவு போய்விட்டது என நினைக்கிறேன்.' அதுதான் மௌனமாக இருக்கிறாள் என்றவனை மறித்து ''இனி சொல்வதற்கு என்ன இருக்கிறது. உங்கள் வீட்டில் முடிவே எடுத்துவிட்டார்கள், என்னை மருமகளாக ஏற்க முடியாது என்று, அதுதான் மௌனமாக இருக்கிறோம் போதுமா'' என்றாள் மதுவந்தி. ''நான் வந்துவிட்டேனே, இனி எல்லாவற்றையும் சரி பண்ணிடுவேன் என்பதை சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன் மது,'' என்றவன் மேலே பேசாமல் அங்கிருந்து கிளம்பிவிட்டான். ஆரூரன் வீட்டில் ஒரே அமர்க்களம் தான், அவன், தாய் தந்தைக்கு ஒரே பிள்ளை பெற்றோர் இவர்களின் காதலை ஏற்க மறுத்தனர். அதிலும் 'மதுவின் குடும்பம் வசதி வாய்ப்பில் நமக்கு ஏணி வைத்தால் கூட எட்டவும் மாட்டார்கள். உன்னை அவள் வளைத்துப் போடத்தான் வந்தவள்' என ஒரே ஏச்சு வேற. 'உனக்கும் நமக்கும் ஏற்றது போல ஒரு பொண்ணு பார்த்து வைத்து இருக்கிறோம் அவளைத்தான் நீ கட்டிக்கணும்'' என்றனர்.

அதோடு மட்டும் விடவில்லை மது வீட்டுக்கும் போய் எவ்வளவு கேவலமாக பேச முடியுமோ அப்படி பல வார்த்தைகளை விட்டுதான் வந்தார்கள். அவர்களும் பெண்ணைப் பெற்றவர்கள் ஆச்சே மௌனமாக அவற்றை எல்லாம் கேட்டுக்கொண்டு இருக்கத்தான் முடிந்தது

மதுவுக்கு தந்தை இருந்தும் இல்லாதது போலத்தான். கால் ஊனமுற்றதால் அவரால் நடக்கவும் இயலாது, மற்றவர்களை எதிர்க்கும் திறனும் கிடையாது. அதனால் எல்லாமே தாய் தான் மது இப்போது வேலைக்குப் போய் சொந்தமாக உழைப்பதால் வீட்டுக்கஷ்டம் கொஞ்சம் குறைவு என்றே சொல்லலாம். தாய் சீட்டு கட்டுவதால் மேலதிகமாகவும் சிறு சேமிப்பு செய்தாள்.

ஆரூரன் வந்து போனதில் இருந்து மதுவந்திக்கு போன நினைவுகள் மீள ஆரம்பித்தன.

இரண்டு வருடங்களுக்கு முன்பு குடும்பத்துடன் வெளியூருக்கு சுற்றுலா சென்றிருந்த சமயமே இவர்களின் அந்த சந்திப்பு நிகழ்ந்தது.

ஒரு ஹோட்டலில் மதிய உணவிற்காக மது குடும்பத்தோடு அமர்ந்திருந்தாள். அதே வேளையில் மறுபுறத்தில் ஆரூரனின் குடும்பமும் அமர்ந்திருந்தனர். உணவு முடித்து ஆரூரன் பணம் கட்ட வெளியே வந்தபோது தான் பார்த்தால் பேர்சை



காணவில்லை. எங்கோ தவறிவிட்டது அப்போதுதான் தெரிந்தது.
இதை ஹோட்டல்காரரிடம் அவன் எடுத்துச் சொல்ல, ''இப்படி எத்தனை பேர் கிளம்பி வாரீங்கள், உங்களை முதல்ல பொலிஸில கொடுக்கணும்.'' என்றவரிடம். ''அவர்கள் கொடுக்க வேண்டிய முழுப் பணத்தையும் நான் கொடுக்கிறேன்'' என்றாள் மதுவந்தி

''உங்கள் உதவிக்கு என்ன கைமாறு செய்யப்போகிறேன் என்று தெரியாது. ஆனால், உங்கள் பணத்தை நிச்சயம் நாளை தருகிறேன். விலாசத்தை மறுக்காமல் தாங்கோ'' என்றவனை பார்த்தவள் ஏதும் சொல்லாமல் கொடுத்தனுப்பினாள். மறுநாள் சொல்லி வைத்ததுபோல் வாசலில் வந்து நின்றிருந்தான். ''பணத்தைக் கொடுத்துவிட்டுப் போகலாம், என்று வந்தேன்'' என்றவனை உள்ளே அழைத்து சென்று ஹாலில் அமர வைத்தவள் தாய் தந்தைக்கு அறிமுகப்படுத்தி சிறிது நேரம் உரையாடிய பின்னர், விடைபெற்று செல்லும்போது மதுவிடம் தனது விசிட்டிங் காட்டில் ஒன்றை கொடுத்து ஏதாவது உதவி வேண்டுமானால் தொடர்புகொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து



புறப்பட்டு விட்டான்.

எப்படியோ காலங்கள் கடந்து ஆறு மாதங்கள் ஆயின. அவளது படிப்பும் முடிந்து வேலை தேடும் படலம் நடந்துகொண்டிருந்தது. ஒரு வழியாக கம்பனி ஒன்றில் வேலை தருவதாக ஒப்புக்கொண்டனர். உயர் அதிகாரி யாரிடமாவது சிபார்சு கடிதம் ஒன்றும் கேட்டு இருந்தனர். எங்கு தான், அவள் அதைக் கேட்பாள் இந்த ஏழைக்கு உதவுவது யார் என்ற கேள்வியோடு படுக்கையில் சாய்ந்தாள். யோசனைகள் கண்முன்னே திரையென ஓடின. ஏதோ நினைத்தவள் திடீரென எழுந்து வந்து பழைய டயறிகளை கிளறினாள். கிளறிய சத்தத்தில் தாய் எட்டிப்பார்த்து ''என்ன மது சத்தம்'' என்றபோது, ''ஒன்றும் இல்லை அம்மா நீங்கள் போய் படுங்கள்'' என்றாள்.

தேடிய பொக்கிஷம் கிடைத்த புன்முறுவலோடு அந்த காட்டை எடுத்து அதில் உள்ள நம்பருக்கு டயல் செய்தாள். மறுமுனையில், ''ஹலோ ஆருரன் பேசுறன் நீங்க யாரு'' என்றான். உடனே அவளும் ''நான் மது, அதுதான் ஹோட்டலில் சந்தித்தோமே நினைவிருக்கிறதா,'' என்றதும் அவன் ''உங்களை எப்படி மறப்பது உயிர் உள்ளவரை மறக்க இயலாதே''

## சிறுகதை

''சரி என்ன விசேஷம், என்னை மறக்காமல் ஞாபகம் வைத்து எடுத்து இருக்கிறீங்கள்'' என்றவனை மறித்து, ''உங்களிடம் ஒரு உதவி கேட்பதற்காக த்தான்'' என்றவள் குரலை தாழ்த்தவும் ''உங்களுக்கு இல்லாத உதவியா, செ ால்லுங்கோ'' என்றான்.

''ஒரு கம்பனியில் வேலை கிடைத்திருக்கு, ஆனால், அவர்கள் சிபார்சு கடிதம் கேட்டு இருக்கினம், எங்களுக்கு அப்படி பெரிய இடத்து நிர்வாகிகள் ஒருவரையும் அவ்வளவாகத் தெரியாது அதனால் தான் இந்த உதவியை உங்களிடம் கேட்கிறேன்'' என்றாள். உடனே மறுப்பேதும் தெரிவிக்காது ''நீங்கள் உங்கள், கம்பனி விபரங்களை எனக்கு போனில் அனுப்பி வையுங்கள். நாளை காலையில் கடிதம் உங்கள் கைக்கு வரும்'' என்றவன் குட்நைட் சொல்லி வைத்து விட்டான்.

மறு நாள் கடிதம் கைக்கு வந்ததும், அவனுக்கு போனில் நன்றி தெரிவித்திருந்தாள். அவனும் உங்கள் முதலாளியுடன் கதைத்துவிட்டேன், பயப்படாமல் செல்லுங்கள் மது என்றான். வேலையும் நல்லதாகவே அமைந்தது. அன்று முதல் இருவரின் சந்திப்புகளும் தொடர்ந்தன. அதுவே காதலாகவும் மலரத்தொடங்கியது. தொழில் காரணமாக ஆரூரன் வெளிநாடு செல்ல வேண்டி இருந்தது. இதை கேட்டதிலிருந்து மதுவுக்கு மனமே சரியில்லை. ஏக்கத்துடன் நீங்கள் போய்த்தான் ஆகவேண்டுமா என்றவளை மறித்து, நம்முடைய பிற்காலம் நல்லதாக அமைய வேண்டுமானால் இந்த இரு வருட வெளியூர் பயணம் அவசியம் மது என்றான். ஒருவாறு அவளும் சம்மதித்தாள்.

அவன் பயணம் சென்றதும், இருவர் காதல் விவரமும் வெளியில் தெரிந்து ஆரூரன் குடும்பத் தினர் மது வீட்டாருடன் ஒரே வாக்குவாதப்பட்டதை அந்த வீதியே வேடிக்கை பார்த்தது. அவர்கள் போன பின்பு பெற்றோரை சமாதானம் செய்துவிட்டு, ''இந்த பேச்சை இதோட விடுங்க'' என்று போய்விட்டாள்.

கண்களில் வந்த நீரை விரலால் தட்டிவிட்டு காலம் கடந்த யோசனையில் இருந்து மீள வந்தாள் மது. அன்றைய தினம் விடுப்பு போட்டுவிட்டு மூவருமாக வெளியில் போய் வந்தது மனதுக்கு ஆறுதலாக இருந்தது அவளுக்கு. அடுத்த நாள் ஆரூரன் தாய் தந்தையுடன் மது வீட் டுக்கு வந்தான் வந்தவர்களை மாலா உள்ளே அழைத்து சென்றார். ''மதுவை கூப்பிடுங்கள்'' என்றதும், அவளும் வந்தாள். சங்கடமாய் பார்த்த ஆரூரனின் தயாரிடம் ''நீங்கள் மகன் மேல் உள்ள அக்கறையில் தான் அப்படி பேசியிருப்பிர்கள் அன்ரி'' என்றவளை மறித்து, இனி ''அத்தை என்று சொல்லம்மா'' என்றார்.

ஆரூரனின் தாய் அப்படி சொல்லவும் எல்லோரும் ஒருகணம் ஆளை ஆள் மாறிமாறி பார்த்தார்கள், போதும் போதும் என்றான் ஆரூரன். நாங்கள் முழுமனதாக மதுவைப் பெண் கேட்டு வந்திருக்கிறோம் அத்தை என்றான். என்ன செய்வதென்று புரியாமல் ஒருவாறு சம்மதமும் தெரிவித்தனர். ஓரிரு நாட்களில் நிச்சயம் வைக்கலாம் என்று சொல்லி விட்டு சென்றிருந்தார்கள்.

சொன்னபடி நிச்சயமும் நடந்தது. அடுத்த வாரம் திருமண நாளும் குறித்து இருந்தனர். எல்லாம் நல்லபடியாக அமைந்ததை எண்ணி கடவுளுக்கு நன்றி சொல்லிக்கொண்டு மகளின் புன்னகை பூத்த முகத்தைப் பார்த்தவர்களின் முகமும் பூரிப்பால் நிறைந்தது.

----சுபம்----

அனுப்பிரியா

**கணவன் : ஏண்டி எப்போ பார்த்தாலும் கோபமா எரிஞ்சு விழுற ?**

**மனைவி : நீங்க தானே சொன்னீங்க, கோபப்படுறப்ப நான் ரொம்ப அழகா இருக்கேன்னு.**



விழிப்புணர்வு கட்டுரை

# போதை உள்ளம் நரகம் செல்லும்...

## போதைப் பொருள் பாவனை: ஓர் இஸ்லாமிய நோக்கு!

அல்லாஹ்வின் இந்தக் கட்டளையை செவிமடுத்தவுடன் இருக்கின்ற மதுவை குடித்துவிட்டு அதன்பின்பு குடிக்காமலிருப்போம் என்று அவர்கள் நினைக்கவில்லை மாறாக மதுக் கிண்ணங்களை கையில் வைத்துக் கொண்டிருந்தோர் அப்படியே அவைகளை தரையில் தூக்கி எறிந்தார்கள். வீதிகளில் இருந்த மதுபானப் பீப்பாக்களை உடன் கொட்டி வீதிகளில் ஓடவிட்டார்கள்.

மதுபானம் அருந்தினால் விளையும் தீங்குகளைக் கவனத்திற் கொண்டு பல நாடுகள் பெருந் தொகையான செலவுகளைச் செய்து மதுப்பழக்கத்தை ஒழிக்க கடந்த காலங்களில் மேற்கொண்ட நடவடிக்கைகள் எதிர்பார்த்த வெற்றியை அளிக்கத் தவறியமையை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும்.

இஸ்லாம் மதுபானத்தை ஹராமாக்கியுள்ளமைக்கான காரணம் அது போதையை ஏற்படுத்துகின்றது என்பதாகும். எனவே, ஒரு பானம் எந்தப் பொருளில் தயாரிக்கப்பட்டிருந்தாலும் சேர்மானங்கள் எதுவாக இருந்தாலும் அது போதையை ஏற்படுத்தும் என்றிருந்தால் அது ஹராமாகக் கொள்ளப்படும்.

ஒரு முறை நபியவர்களிடம் தேன், அல்லது பார்லி அல்லது கோதுமை முதலானவற்றில் தயாரிக்கப்படும் ஒருவகை மதுபானம் பற்றி வினவப்பட்டது. அதற்கு நபியவர்கள், சொற் சுருக்கத்து டனும் பொருட் செறிவுடனும் பின்வருமாறு கூறினார்கள்:

போதையை ஏற்படுத்தும் அனைத்தும் கம்ர் எனும் மதுபானமாகும். அனைத்து கம்ரும் ஹராமாகும். (முஸ்லிம்)

மேலும் அதிக போதை ஏற்படுத்தக்கூடிய மதுபானங்கள் மட்டுமன்றி குறைவாகப் போதையைக் கொடுப்பவையும் ( mawa, beeda, paan barack, nijam parck, போயிலை ) ஹராமானவையாகும்.

இது பற்றி நபி மொழி ஒன்று பின்வருமாறு கூறுகின்றது.

போதையை ஏற்படுத்தக் கூடிய ஒவ்வொன்றும் ஹறாமாகும்.

அதிக போதை ஏற்படுத்தக் கூடியதை குறைவாக உட்கொள்வதும் ஹராமாகும்

(அஹ்மத், அபூதாவுத், திர்மிதி).

இந்த வகையில் மதுபானம் போன்றவற்றில் ஓரிரு மிடர்கள் அருந்துவதும் ஹராமானதாகவே கொள்ளப்படும்.



மதுபானம் அருந்துவது மட்டுமன்றி அதை விற்பனை செய்வதும் ஹராமானதாகும். ஒரு முஸ்லிம் மதுபானம் வடிக்கவோ, விற்கவோ, விற்கும் இடத் தில் வேலை செய்யவோ முடியாது.

மதுபானம் தொடர்பாக நபி (ஸல்) அவர்கள் பத்துப் பேரை சபித்தார்கள். **(தொடரும்)**

ஷிஃபா இப்றாஹிம்
மருதமுனை



இந்த தலைமுறையினர் வெளிப்புற அழகிற்கு அதிக முக்கியத்துவம் தருகிறார்கள். ஒருவரின் வெளிதோற்றத்தை வைத்து அவர்களின் திறமையை கணக்கிடக்கூடாது என்றாலும், பெருன்பான்மையானவர்கள் பிறரின் முக அழகு, சரும நிறம் ஆகியவற்றை வைத்துதான் மக்களை எடை போடுகிறார்கள்.

# சிவந்த முகம் வேண்டுமா

பெண்களுக்கான அழகு பொருட்களை பொறுத்தவரை அதிகமாக விற்பனையாவது சரும நிறத்தை சிகப்பாக்கும் முக பூச்சுகள் தான். இப்போது பெண்களோடு போட்டி போட்டுக் கொண்டு ஆண்களும் சரும நிறத்தை மாற்ற இவ்வகையான கிரீம்களை உபயோகிப்பதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

இப்படி சிகப்பு நிறத்தின் மீது தீராத மோகம் கொண்டுள்ளவர்களுக்காக சில எளிய டிப்ஸ்....



★ சுத்தமான சந்தனத்தை பாதாம் எண்ணெய்யில் குழைத்து முகத்தில் பூசி, இந்த கலவை காய்ந்ததும் முகத்தை கழுவலாம் .

★ தக்காளியை நன்றாக பிசைந்து அதனோடு 4 5 துளிகள் எலுமிச்சை சாறு கலந்து முகம், கழுத்து பகுதி, கைகளில் பூசிக்கொள்ளலாம்.

★ முகத்தை கழுவியபிறகு சிறிதளவு பாலை உள்ளங்கையில் எடுத்து முகத்தில் பூசவும். இவ்வாறு தொடர்ந்து 2 3 வாரங்கள் வரை செய்துவந்தால் உங்கள் சருமம் பொலிவடைந்திருப்பது கண்கூடாக தெரியும்.

★ சிறிதளவு இளநீரை முகம், கழுத்து பகுதி, கைகளில் பூசிவந்தால் சரும நிறம் மாறும்.

★ சீரகம் மற்றும் முள்ளங்கியை ஆகியவற்றை தனித்தனியே தண்ணீரில் கொதிக்கவைத்து, அந்த தண்ணீரில் முகத்தை கழுவினால் மாசுகள் அகற்றப்பட்டு முகம் பிரகாசமாக தோன்றும்.

★ புதினா மற்றும் எலுமிச்சை சாறுகளை கலந்து முகத்தில் தடவலாம்

★ முட்டையின் வெள்ளை கருவை வாரம் இருமுறை முகத்தில் பூசிவந்தால் சரும நிறம் சிகப்பாக மாறுவதோடு மிருதுவாகவும் மாறும்.

★ அன்னாசி பழத்தின் சாறு, தர்பூசிணி மற்றும் பப்பாளி பழ சாறுகளும் சரும நிறத்தை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

பார்ப்போம் பழகுவோம்



# தையற்கலை


அடிப்படை தையல்களின் தொடர்ச்சி

சென்ற மாத தொடர்ச்சி

திருமதி சுமித்ரமலர் ராகவன்
(0212261145)


## பொருத்துக்கள், பைப்பிங்ஸ்

### 11. சாதாரண பொருத்து.




அநேகமாக எல்லா உடைகளுக்கும் இத் தையல் பாவிக்கப்படுகிறது. இரு துணிகளை எடுத்து ஒன்றன் மேல் ஒன்றாக வைத்து நேர்த்தையல் (விஸ்பம்) தைத்தல் வேண்டும்.

### 12. நேர்த் துணி வைத்துப் பொருத்துதல்.




சட்டையின் தேவையான நீளம் காணாதவிடத்து இத் தையல் பாவிக்கப்படும். விளிம்புக்குத் துணியை வைத்துத் தைக்கும்போது ¼" கீழ் நோக்கி விஸ்பம் தைத்தல் வேண்டும். பின் மறுபக்கம் திருப்பி உடையின் விளிம்பு 1/8 அங்குலம் உள்ளிருக்கத்தக்கதாக மடிப்பை மடித்து சோம் தைத்தல் வேண்டும்

### 13. குறுக்குத் துணி வைத்துத் தைத்தல்.



இதுவும் தேவையான நீளம் காணாதவிடத்துப் பாவிக்கப்படும். இது வளைவான பகுதிகளுக்கும் நேரான பகுதிகளுக்கும் பாவிக்கப்படுகிறது. தேவையானளவு குறுக்குவெட்டுத் துணியினை எடுத்து நேர்த் துணியைத் தைத்தது போன்றே தைத்தல் வேண்டும்.

### 14. பைப்பிங்



இத் தையலை சட்டையின் கழுத்து விளிம்பு, கை விளிம்பு ஆகியவற்றிற்குப் பாவிக்கலாம். குறுக்கு வெட்டுத் துணியை எடுத்து துணியின் வெளிப்பக்கம் வைத்து ¼" கீழாக விஸ்பம் தைக்கவேண்டும். பின்பு மறுபக்கம் திருப்பி உருட்டி மடித்து முதல் தைத்த விஸ்பத்தினுள் கொழுவி சோம் தைக்கவேண்டும்.

### 15. துணி வைத்துப் பொருத்துதல். (கோடட் பைப்பிங்)



இரு துணிகளை எடுத்துக்கொண்டு குறுக்குத் துணியை மடித்து இரு துணிகளுக்குமிடையில் வைத்து கால் அங்குலம் கீழ் நோக்கி விஸ்பம் தைக்கவேண்டும். தைத்த விஸ்பத்திற்கு மேல் இரு துணிகளையும் சேர்த்து கம்பளித் தையல் தைக்கவேண்டும்.



பெண் ஆளுமை








நேர்காணல் :
வே. முல்லைத்தீபன்

# நிதானமாக தடம் பதியுங்கள்

ஆளுமையான பெண்களை வெளி உலகிற்கு அடையாளம் காட்டும் முகமாகவும் அவர்களின் ஆற்றல்களை ஆவணப்படுத்தும் முகமாகவும் நட்சத்திர இல்லத்தரசி, என்னும் பகுதியைப் பிரசுரித்துவருகின்றோம். இம்மாத நட்சத்திர இல்லத்தரசியாக எம்மால் அடையாளப்படுத்தப்படுபவர் சுமைரா அன்வர். அவர் எம்மோடு பகிர்ந்துகொண்ட கருத்துக்கள் வாசகர்களுக்காக.

**1. உங்களைப் பற்றி**

குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள மல்லவப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வாழிடமாகவும் கொண்டுள்ளேன். எனது தந்தை ஜனாப் ஏ.எம். அன்வர். எனது தாய் ஜனாபா சுஹூதா அன்வர். இருவரும் ஆசிரியர்கள். நான் ஆரம்ப கல்வி முதல் உயர் தரம் வரை கு/ ஹிஸ்புள்ளா ம.க. விலேயே கல்வி கற்றேன். பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வியைத் தொடர்ந்து கலைப் பட்டதாரியானேன். அதனைத் தொடர்ந்து நான் கல்வி பயின்ற எனது கல்லூரியிலேயே ஆசிரியையாக சேவையாற்றும் பேறு பெற்றேன்.

**2. உங்கள் இலக்கியப் பிரவேசத்தின் ஊக்கிகளாக நீங்கள் கருதுபவை எவை?**

என்னுள் படைப்பாற்றலை விதைத்தது இறை சித்தம். அதற்கேற்றாற் போல் ஆசிரியப் பெற்றோர் வாய்த்ததும் எனக்குள் படைப்பாற்றல் துளிர்க்க காரணமானது. மேலும் எனது சகோதரர்கள், ஆசிரியப் பெருந்தகைகள், நண்பிகள், பேராதனை வளாகப் பேராசான்கள், சங்கப் பலகை , ஊடகங்கள் இவை எல்லாமே என் படைப்பாற்றலுக்கு வாய்ப்பளித்தன. விசேடமாக ஒன்றைக் கட்டாயம் குறிப்பிட வேண்டும். மண வாழ்வினூடு அதிகமான பெண்களின் படைப்பாக்கப் பணி முற்றுப்பெறுவதே கண்கூடு. ஆனால், என் கணவர்தான் இன்றெனது எழுத்துப் பணிக்கு பக்கபலமாக இருக்கிறார். எனது கணவர் ஏ.ஜே.எம் ரமீம், எனது அருமை மகன் எம்.ஆர்.எம்.உஸ்மான் உதவியுமுண்டு.



**3. இதுவரையிலான உங்கள் படைப்புக்கள் யாவை?**

1986 ஆம் ஆண்டு தினகரன் பத்திரிகையின் ''சிறுவருலகம்'' பகுதியில் ''யார் ஏழைகள்?'' என்ற தலைப்பில் எழுதிய கவிதையே எனது முதல்



படைப்பு. பின்னர் க.பொ.த உ.த. மாணவியாக இருக்கும்போது ''அரும்பு கள்'' கவிதைத் தொகுப்பின் பங்காளியாகவும்;

பேராதனை வளாக மாணவியாக இருக்கும்போது ''பாலங்கள்'' கவிதைத் தொகுப்பின் பங்காளியாகவும் இருக்கும் பேறு கிடைத்தது. ''எண்ணச் சிதறல் கள்'' (கவிதைத் தொகுப்பு) ; .''விடியலில் ஓர் அஸ்தமனம்''(நாவல்); ''வசந்தங்கள் வாழ்த்துச் சொல்ல''(நாவல்) என்ற எனது மூன்று புத்தகங்கள் வெளிவந்துள்ளன.

**4. முதலில் கவிதையை தெரிவுசெய்யக்காரணம்?**

எழுத்துத்துறையுள் பிரவேசிப்பவர்கள் தமது முதற்தெரிவாக கவிதையை தெரிவுசெய்வது எனது அனுபவப்படி களம் கிடைப்பது விரைவு. நீண்ட ஆக்கங்கள் பல சந்தர்ப்பங்களில் நிராகரிக்கப்படுகின்றன.

**5. ஈழத்து இலக்கியத்தடத்தில் இஸ்லாமிய எழுத்தாளரின் பங்கு எவ்வாறுள்ளது?**

ஈழத்து தமிழ் இலக்கியத்தடத்தில் இஸ்லாமியக் கவிஞர்களின் பங்களிப்பும் தனித்து வமானது. விசேடமாக சிங்கள மக்களும் மொழியும் ஓங்கும் சூழலில் இவர்கள் பணி தனித்து வமானது. இஸ்லாமியக் கவிஞர்கள் இஸ்லாமிய வரையறைக்குள்ளிருந்து உலகியலை படைப் பாக்கமாக்கிடவே பெரிதும் விரும்புகின்றனர்.

**6. பெண்களால் பெண்ணியம் சார் கருத்துக்களை அழுத்தமாகப் பதிய முடிகிறதா..?**

பெண்ணின் மனதை பெண்ணாலேயே இலகுவில் புரிந்து கொள்ள முடியும். மேலும் சமூகத் தில் பெண்கள் முகங்கொடுக்கும் அனுபவங்களும் மிக அதிகம். குடும்பத்தில் சமூகத்தில் அவர்களது வகிபாகமும் அதிகம். எனவே, பெண்மை பற்றி பெண்ணே பேசும் (படைப்பாக்கம் செய்யும்) போது யதார்த்தமாகவும் அழுத்தமாகவும் இருக்கும். அப் படைப்புக்கு தனிப் பரிமா ணமும் கிடைக்கும். இன்றைய எமது சகோதரிகள் (படைப்பாளிகள்) இப் பணியை அமைதி யாக அதேவேளை ஆழமாகவும் அழுத்தமாகவும் பேசுகின்றனர் என்பதே எனது கருத்து.

**7. இன்றைய காலத்தில் கணக்கின்றி வழங்கப்படும் விருதுகள் பற்றி யாது கருதுகிறீர்கள்..?**

படைப்பாளர்கள் பாராட்டப்பட வேண்டியது மிக மிக அவசியம். ஆனால் எதற்குமே அழ கான வழிமுறைகளும் வரண்முறைகளுமுண்டு. அவை மீறப்படும் போது மனக்கிலேசங்களும் அதிருப்திகளும் ஏற்பட்டு ஆரோக்கியமற்ற சூழல் ஏற்படலாம். தரமான படைப்பாளர் சிலரையா வது படைப்புலகம் இழக்கவேண்டியும் வரலாம். ''சில்லறைத்தனமான.'' பட்டங்கள் விருதுகள் வேண்டாமே.

**8. பாடப்புத்தகங்களைக் கடந்து இன்றைய மாணவர்களால் வாசிக்க முடிகிறதா..?**

நீண்டகால ஆசிரியச் சேவை, முப்பது வருட படைப்பாக்கப் பணி ஆகியவற்றால் பெற்ற அனுபவத்தின்படி நான் கண்ட உண்மை இன்றைய இளவயதினர் வாசிப்பு, இலக்கியம், ரசனை என்பவற்றில் ஆர்வம் குறைந்து ''இயந்திரத்தனமாக'' வருகின்றனர். செல்பேசிகளும் இணையமும் அவர்களை ஓர் மாயை உலகின் தனித்தனி தீவுகளாக்கி விட்டன. எனது கவி வரியில் சொல்வதானால் இவர்கள் ''சோலைக்குள்ளிருக்கும் தனி மரங்கள்''. வாசிப்பிலுள்ள உயிரோட்டத்தையும் அதனால் கிடைக்கும் ''புத்துயிர்ப்பையும்'' இன்றைய எமது இளம் சமூகம் பெற சோம்பல்படுகின்றது. எமது பால்ய வயது வாசிப்பு வெறி அவர்களிடமில்லை.

**9. இறுதியாக.. எமது இளவல்களுக்கு யாது கூற முற்படுகிறீர்கள்..?**

இளம் படைப்பாளர்களே எழுதமுன் நிறைய வாசியுங்கள். சமூகத்தில் வெறும் பார்வையாளனாக மட்டுமிருக்காது அதன் பங்காளியாயிருங்கள். அவசரத்தில் எழுதிக் குவிக்காது அனுபவங்களை உள்வாங்கிக்கொள்ளுங்கள். உங்களுக்கான வாய்ப்புக்கள் விசாலித்துள்ளன. நிதானமாக தடம் பதியுங்கள்.



மனசே ரிலாக்ஸ்

இரவு பெய்த மழை பூமியை நனைத்திருந்து. சில்லென்ற காற்றோடு காலைப்பொழுது விடிந்தது. பொற்கிரணங்களால் சூரியன் பூமியை ஒளியூட்டினான். பறவைகளின் சிறகடிப்பும் கூச்சலும் அவைகளுடைய பாடலும் காற்றில் சங்கீதமாய் தவழ்ந்தன. இந்த சங்கீதத்திற்குப் பொருத்தமாக வண்ணத்துப்பூச்சிகள் சரியான தாளகதிக்கு ஏற்ப வட்டமிட்டுப் பறந்தன. அந்த நடனம் ஒரு கண்கொள்ளாக்காட்சி. ஒரு பறவை என்னை அவர்களின் வியக்கத்தகு உலகத்திற்கு வரவேற்று மௌனத்தின் மொழியில் நல்லுரை வழங்கியது.

நேசம் என்பது நம் வாழ்க்கையில் ஒரு முன்பின் தெரியாத புதிய விஷயம். காதலித்து பிரிந்தால் அதைத் தாண்டி வெளியே வரவேண்டும் என்று நம்முள் ஒரு உத்வேகம் வருகின்றதல்லவா? ஏன் மக்கள் இணைகோடுகள் போல் வாழ்கின்றார்கள்? மனிதர்களுக்கிடையே உள்ள வேறுபாடுகள் ஈர்க்கும் விஷயமா, இல்லை பிரிக்கும் விஷயமா? மனதிற்குப் பிடித்தவர்களை பிரிய நேர்ந்தால் அவர்கள் வெகுதூரம் சென்றுவிட்டதாக உணர்கிறோம். உடலளவில் நாம் மிக அருகில் இருந்தாலும் இரு உடல்களும் ஒன்றாக முடியாது. ஆனால், ஆன்மீகரீதியாக, நாம் ஒன்றாகத் தேவையில்லை. ஏனென்றால் நாமெல்லாம் ஒன்றே! இப்படிப்பட்ட ஆன்மீக நிலைக்கு நம்மை உயர்த்திக் கொண்டால் ஆத்மா என்ற அளவில் உணர்ந்தால் மட்டுமே, நம்மால் ஒன்றாக வேண்டும் என்ற ஆசையை பூர்த்தி செய்யமுடியும், இப்படி ஒன்றாக வேண்டும் என்று எண்ணுவதும் வாழ்க்கையில் மகிழ்ச்சியை குறைக்கும் ஒரு காரணமாகும். ஒரு இளைஞன் என்னை கேட்டது நினைவுக்கு வருகிறது. போட்டிகள் நிறைந்த இந்த உலகத்தில் மகிழ்ச்சியோடு இருப்பது சாத்தியமா? மற்றவர்களை ஏமாற்றினால் மட்டுமே நாம் சந்தோசமாக இருக்க முடியும் என்று தோன்றுகிறது. அவநம்பிக்கை உடைய ஒருவர் மகிழ்ச்சியாக இருக்கமுடியுமா?

''எத்தனை தான் தேடினாலும் காக்கைக்கு வாயில் பற்கள் இல்லை'' என ஒரு இந்திய பழமொழி சொல்கிறது. நம்மில் பலர் சந்தோஷத்தை அது இல்லாத இடத்தில் தேடுகிறார்கள். சொர்க்கத்தின் சாம்ராஜ்ஜியம் உங்களுக்கு உள்ளே இருக்கிறது என்று பைபிள் சொல்கிறது. சந்தோசம் இருப்பது உங்களுக்குள்ளே என்று கீதையும் சொல்கிறது. நாம் நமக்குள் இருக்கும் சந்தோஷத்தை தேடாமல் வெளியே இருப்பதாகத் தேடுகிறோம். வேண்டாதவைகளைப் பற்றிய கவனத்தில் வேண்டியவற்றின் மீது, நம்மீது கவனம் வைக்கத் தவறுகிறோம்.


தருவது



சுவாமி - சுகபோதானந்தா

# மகிழ்ச்சியை நோக்கிய பயணம்





**இந்த கதையை படியுங்கள்**

ஒரு மருத்துவர் ஒரு பெண் நோயாளியை பார்க்க வருகிறார். கணவன் மிகுந்த கவலையுடன் வெளியே காத்துநிற்கிறான். மருத்துவர் ஒரு சுத்தியல் கேட்கிறார், கணவன் எடுத்துக்கொடுக்கிறான். சற்று நேரம் கழித்து மீண்டும் வந்து ஸ்குருடிரைவர் கேட்கிறார்; கணவன் அதையும் கொடுக்கிறான், இன்னும் சிறிது நேரம் ஆன பின் மருத்துவர் வெளியே வந்து ஒரு உளி கேட்கிறார். கணவனுக்கு ஒரே கவலையாகிவிட்டது. டாக்டர் என் மனைவி எப்படி இருக்கிறாள்? என்றான். மருத்துவரோ நான் அவரை பரீட்சை செய்து பார்க்கவில்லை, என் மருத்துவ பெட்டியை திறக்க முடியாமல் கஷ்டப்படுகிறேன் என்றார்.

வாழ்க்கையில் தேவையில்லாத விஷயங்களில் நாம் மிகுந்த கவனம் செலுத்துவதால் தேவையான விஷயங்களை கோட்டை விடுகிறோம்; வாழ்வில் சந்தோஷமின்றி இருப்பதற்கு காரணம் நம்முடைய எதிர்பார்ப்புகளிற்கு நாமே பலியாகிவிடுவதுதான். நம்முடைய எதிர்பார்ப்புக்களை தாண்டி வாழ்க்கையை அமைத்துக்கொள்ள நாம் முயற்சி செய்யவேண்டும். நம்மில் பலர் கேட்பது எதிர்பார்புக்களே இல்லாமல் வாழ்வது எப்படி?

நான் கேட்கிறேன் இந்த எதிர்பார்ப்புகள் உங்கள் வாழ்க்கையை எளிதாக்கியுள்ளதா இல்லை கடினமாக்கி உள்ளதா? நம்முடைய பிரச்சினைகளுக்கு காரணம் நமது எதிர்பார்ப்புகள் தான். நமது புத்திசாலித்தனத்தை நாம் நம்புவதில்லை. நமது எதிர்பார்ப்புகளை நம்புகிறோம். உதாரணமாக, கணவன் மனைவிக்கிடையே உள்ள உறவை எடுத்துக்கொள்ளுங்கள். ஒருவர், மற்றவர் இருக்க வேண்டிய விதம் பற்றிய எதிர்பார்ப்புகளுக்கேற்ப மற்றவர் இல்லையென்றால் ஏமாற்றமடைகிறார். என்னுடைய அறிவுரை இதுதான். எதிர்பார்ப்புகள் இருக்கலாம் தவறில்லை. ஆனால் சந்தோஷத்திற்கு இதனை அடிப்படையாகக் கருதக்கூடாது. அன்புதான் அடிப்படை, எதிர்பார்ப்புகளில்லை. அன்பு மற்றவர்கள் நலனைப் பேணும் சக்தியை உருவாக்கும். இந்த சக்தி உங்களை சிறப்பானவராக - மகிழ்ச்சியுடையவராக மாற்றும்.


**உதாரணத்திற்கு ஒரு கதை**

சைனாவைச் சேர்ந்த ஒரு தச்சுத் தொழிலாளி பிரத்தியேகமான மரப்பொருள் ஒன்றை வடிவமைத்தார். கலைப்பொருள் போல தோன்றிய அதை எல்லோரும் விரும்பினார்கள். எப்படி செய்தீர்கள்? எனக் கேட்டனர். காட்டில் மரத்தை வெட்டுமுன் மரத்திடம் பேசி அனுமதி பெற்றுக்கொண்டேன், எந்த மரம் வீழ்வதற்கு தயாராக உள்ளது என்பதை என் உள்ளுணர்வு சொல்லும், அந்த மரத்தை மட்டும் தான் நான் வெட்டுவேன், அப்படிப்பட்ட மரத்திலிருந்து தயாரித்த பொருள் என்பதால் அது கலைப்பொருள் போல தோன்றுகிறது என்று தச்சன் பதில் சொன்னான். அன்புக்கு சக்தி உண்டு, அது உருவாக்கக்கூடிய சக்தி. இந்த சக்தியை உபயோகிப்பது எப்படி என்பதனை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். நமது எதிர்பார்ப்புகள் அன்பின் அடித்தளத்தின் மீது உருவானால் எதிர்பார்ப்புக்களிற்கு நாம் எஜமானன். இல்லாமல் போனால் நாம் அதற்கு அடிமை. துயரம் என்பது, போட்டிகள் நிறைந்த இந்த உலகம் உருவாக்கியது அல்ல, அன்பே இல்லாத உலகத்தில் எழும் எதிர்பார்ப்புக்களின் பலன்தான் அது.





## குருதியுறைவதை தடுக்கும் மருந்துகள் மற்றும் குருதி சிறுதட்டுக்களின் தொழிற்பாட்டிற்கு எதிரான மருந்துகள்.




# குருதியுறைவு

இம்மருந்துகள் இதயம் நாளம், நாடி போன்றவற்றினுள் குருதியுறைதலை குறைப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றது. இம்மருந்துகள் குருதியுறைவை ஏற்படுத்தும் காரணிகளின் அளவினை குறைப்பதனால் குருதியுறைவதனை தாமதப்படுத்துகின்றன.

குருதியுறைவதை தடுக்கும் மருந்துகள் (வோபரின், கெபாரின்) (Heparin&warfarn) குருதி கட்டிபடுவதனை தடுப்பதுடன் ஏற்கனவே குருதிக்கட்டி உருவாகியிருப்பின் அது மேலும் பெரிதாவதயும் தடுக்கிறது. ஆனால் இவ்வாறான மருந்துகள் மருத்துவரால் மட்டுமே பரிந்துரை செய்யப்பட வேண்டும். என்பதுடன் அவை பாவிக்கும் முறைகள், நிபந்தனைகள் கட்டாயமாக பின்பற்றப்படுதல் அவசியம்.

**இம்மருந்துகளைப் பாவிக்கும் ஒருவர் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.**
வைத்தியரால் பரிந்துரைக்கப்படுவதன்படி ஒழுங்காக இரத்தம் பரிசோதிக்கப்பட வேண்டும். இதன் மூலம் மருந்துகளின் செயற்பாடு சரியான அளவில் இருக்கிறதா என அறியலாம். அளவுக்கதிகமாக குருதியுறைதல் தடுக்கப்பட்டால் இரத்தப் பெருக்கு ஏற்படலாம் அதே போல மருந்தின் அளவு குறைவடைவதனால் அளவுக்கதிகமாக குருதியுறைதல் ஏற்படலாம்.

★ Warfarin மருந்தின் அளவு சரியானதா என பரிசோதிக்க PT (Prothrombin Time ) அல்லது INR (International Normalized Ratio ) எனப்படும் பரிசோதனைகள் பயன்படுத்தப்படுகின்றன.

★ Heparin இன் தொழிற்பாட்டை அவதானிப்பதற்கு APTT(Acti-vated Partial Thromboplastin Time) பயன்படுகின்றது.

★ நீங்கள் வேறு யாராவது வைத்தியரிடம் செல்வீர்களாயின் கண்டிப்பாக நீங்கள் இந்த மருந்துகள் பாவிப்பது பற்றி அவர்களிடம் கூற வேண்டும்.

★ உங்களுக்குத் தரப்படும் வேறு மருந்துகள் (அஸ்பிரின் விற்றமின் மாத்திரைகள், நோவைக் குறைக்கும் மருந்துகள் நித்திரையை தூண்டக்கூடிய மாத்திரைகள் மற்றும் நுண்ணுயிர்க் கொல்லிகள் (Antibiotic)) மற்றைய வைத்தியர்களால் பரிந்துரைக்கப்படின் அவற்றை நீங்கள் பாவிக்கலாமா உள்ளெடுக்கலாமா என்பதை மீள உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

★ விற்றமின் K யை அதிகளவு கொண்ட பச்சை இலை, மரக்கறிவகை, மீன், ஈரல், சோயா, சில வகை மரக்கறி எண்ணெய்கள், மற்றும் அவரை போன்ற



உணவுகள் மருந்தின் தொழிற்பாட்டை குறைவடையச் செய்கின்றன.

★ உங்களுடைய குடும்ப உறுப்பினர்களுக்கு நீங்கள் மருந்து பாவிப்பது பற்றி தெரியப் படுத்தவும் அத்துடன் எப்பொழுதும் மருந்து பாவிப்பதற்கான அடையாள அட்டையை உங்களுடன் வைத்திருக்க வேண்டும்.

★ உங்களுக்கு முதலுதவி சிகிச்சை மூலம் கட்டுப்படுத்த முடியாமல் காயத் தினாலோ, அல்லது தன்னிச்சையாகவோ குருதி வெளியேறினால் உடனடியாக அருகிலுள்ள வைத்தியசாலைக்குச் செல்லவும்.

**பின்வரும் பிரச்சனைகள் காணப்படின் உடனடியாக வைத்திய ஆலோசனையை பெற்றுக் கொள்ளவும்**

★ சிறுநீர் இளஞ்சிவப்பு நிறமாகவோ அல்லது சிவப்பு நிறமாகவோ காணப்பட்டால் அது சிறு நீர் வழியில் இரத்தம் கசிவதை குறிக்கும்.

★ மலம் சிவப்பு நிறமாகவோ அல்லது கறுப்பு நிறமாகவே காணப்படின் அது உணவுப்பாதையில் இரத்தம் கசிவதைக் குறிக்கும்.

★ வழமைக்கு அதிகமாக மாதவிடாய்ப் பெருக்கு ஏற்படல்.

★ முரசினால் இரத்தம் கசிதல்.

★ தாங்க முடியாத தலைவலி அல்லது வயிற்று நோ தொடர்ச்சியாக இருத்தல்.

★ தலைச்சுற்று மயக்கம் வருவது போல உணர்தல். மற்றும் உடல் நலம் குறைதல் போன்ற அறிகுறிகள் காணப்படுதல்.

★ கர்ப்பம் தரித்தல்

★ தோலில் இரத்தக்கண்டல்கள் தாமாகவே

குருதிச்சிறு தட்டுக்களின் தொழிற்பாட்டிற்கு எதிரான மருந்துகளும் குருதியுறைதலை தடுக்கின்றன.

**Dr.அஜினிஅரசலிங்கம்**
**விசேடநரம்பியல் வைத்தியநிபுணர்**
**யாழ் போதனாவைத்தியசாலை**

---

## உடம்பு முழுவதும் அடிக்கடி கடித்து, தடித்து பின் தானாக மறைகின்றது???



எனக்கு உடம்பு முழுவதும் அடிக்கடி கடித்து, தடித்து பின் தானாக மறைகின்றது. தோலில் நிரந்தரமான எந்த மாற்றமும் இல்லை. இந்த நிலைமை ஆறு மாதங்களுக்கு மேலாக நீடித்து வருகின்றது. இந்த நிலைமைக்கு காரணம் என்ன? நான் என்ன செய்யவேண்டும்?

இந் நிலைமையானது ஒவ்வாமை காரணமாக ஏற்படுகின்றது. இவ் ஒவ்வாமை நிலைமையானது சில வகை உணவுகள், சுற்றாடலில் காணப்படுகின்ற ஒவ்வாமையை ஏற்படுத்து கின்ற சில பதார்த்தங்களைத் தொடுவதன் மூலமும், சுவாசிப்பதன் மூலமும் இந்நிலைமை ஏற்படலாம். எனவே, இந் நிலைமையைத் தோற்றுவிக்கும் காரணிளைக் கண்டறிந்து அவற்றை தவிர்க்கவேண்டும். குறிப்பிட்ட சிலரில் இந்நிலைமையானது எந்த விதமான காரணங்களும் கண்டறியப்படாமலும் ஏற்படலாம். இதனை நிவர்த்தி செய்வதற்காக ஒவ்வாமையைத் தடுக்கும் சில மாத்திரைகள் பாவிக்கவேண்டி ஏற்படலாம். சில வேளைகளில் சில நோய்களின் அறிகுறிகளாகக்கூட மேற்கூறிய நிலைமை காணப்படலாம். உங்களுக்கு இந்த நிலைமையானது 6 மாதங்களுக்கு மேலாக நீடிப்பதால் வைத்தியர் ஒருவரை நாடி சில சோதனைகளும், அறிவுரைகளும் சிகிச்சை முறைகளும் பெற்றுக்கொள்வது நல்லது.



உளவியல் ஆலோசனை




# பகிர்வும் பதிலும்

**கேள்வி:**

எனது மகனுக்கு 32 வயதாகின்றது. அவனுக்கு மூன்று வருடங்களாக பெண் பார்த்து வருகின்றோம். பல இடங்களில் இருந்தும் ஜாதங்கள் பார்த்திருக்கின்றோம். பொருந்தியதும் மகன் ஆர்வமாக பெண் விபரங்கள் எல்லாம் கேட்டு அறிந்துகொள்வான். பெண்பார்க்க எம்மோடு ஆவலாக வருவான். அவனின் சம்மத்தை கேட்டபின் அவன் விருப்பங்களுக்கு அமையவே திருமண பேச்சுக்கள் நடைபெற்று நிச்சயம் செய்கின்றோம். திருமணநாள் எடுக்கும் நிலை வந்ததும். ஏதாவது காரணம் சொல்லி அதனை நிறுத்திவிடுகின்றான். இது வரையும் பதினைந்து வரையளவில் பார்த்துவிட்டோம். முதலில் ஆவலாகத்தான் இருக்கின்றான், ஆனால், திருமணம் முற்றாகிவரும்போது அந்த ஆவல் அவனிடம் இருப்பதில்லை. அதற்கு காரணம் என்ன என்பது எனக்குப் புரியவில்லை. இதனால் மனக்கவலையாக இருக்கின்றது. தங்களிடம் ஆலோசனையை எதிர்பார்கின்றேன்.

**பதில்:**

நாம் வளரும் காலங்களில் அந்தந்த பருவங்களுக்கான கனவுகளும் ஆசைகளும் நிச்சயம் எம்மை தொடர்ந்த வண்ணம் இருக்கும். அடிப்படையில் அவை ஒன்றானாலும் அதனை எடுத்துக்கொள்ளும் விதத்தில்தான் ஒவ்வொருவரின் மனநிலையும் மாறுபடுகின்றது. இளைஞர்களாக இருக்கும் போது, தங்களின் எதிர்காலம் பற்றிய ஒரு பயம் ஒவ்வொருவருக்குள்ளும் தானாகவே வந்துவிடுகின்றது. தாம் சந்தித்த மனிதர்கள், கடந்து வந்த பாதைகளின் அனுபவங்கள் எனப் பல விடயங்கள் எதிர்கால வாழ்க்கை பற்றிய தெளிவையும் சில சந்தர்ப்பங்களில் அவையே குழப்பங்களையும் கொடுத்துவிடுகின்றது. உங்கள் மகனுக்கும் திருமணம் செய்யவேண்டும் என்ற ஆவலும் ஆசைகளும் இருக்கின்றன. அத்தோடு மனதில் அச்சமும் இருக்கின்றது. முதலில் யாரையாவது காதலித்து அல்லது அதீத அன்பு வைத்திருந்து அது நிராகரிக்கபட்டிருந்தால், அல்லது அவர்கள் சார்ந்த யாராவது ஒருவருக்கு திருமண வாழ்வில் ஏற்பட்ட சிக்கல் இவை போன்று தன் வாழ்விலும் நடந்துவிடக்கூடும் என்ற பயம், பொருளாதார ரீதியில் எதிர்கால வாழ்க்கையை திறம்பட கொண்டுபோக முடியுமா என்ற ஒரு சந்தேகம். உடல் சம்பந்தப்பட்ட நோய்கள், குறைகள் அவற்றினால் இல்லற வாழ்வு பாதிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம் எனப்பல காரணங்கள் உள்ளன. யாரை காதலிக்கின்றோமோ அவர்களையே திருமணம் செய்ய வேண்டும் என்ற ஒரு கலாசார கட்டமைப்பில் வளர்க்கப்படுகின்றோம். அந்தக் காதல் நிறைவேறாமல் வேறு ஒருவரைத் திருமணம் செய்ய நேரிட்டால் நாம் அந்த நபருக்கு துரோகம் செய்கிறோம் என்ற குற்றமனப்பான்மையுடனும் அதனைத் தனது வாழக்கைத்துணை அறிந்துகொண்டால் தான் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டும் என்ற பயத்துடனேயே அதிகமான இளைஞர்கள் தமது இல்லற வாழ்க்கையை ஆரம்பிக்கின்றனர். உங்கள் மகன் தன் மனநிலையை முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும். மகனுடன் கதைத்து அவர் மனநிலையினை அறிய முற்படுங்கள். அவரும் இதில் ஏதாவது காரணங்களினால் பாதிக்கப்பட்டிருக்கலாம். உளநல ஆலோசனையைப் பெற்று தெளிவடைந்த பின்னர் உங்கள் மகனுக்கு திருமணத்தை முடிவு செய்வதே நல்லது.



# உளவியல் ஆலோசனை

**கேள்வி:**

எனக்கு திருமணமாகி நான்கு வருடங்களாகிவிட்டது, இரு குழந்தைகள் உள்ளனர். ஒரு வருடமாக எனது கணவர் பெண்களுடன் தொலைபேசியில் அதிமாக உரையாடுகின்றார். சமூகவலைத்தளத்தில் உள்ள பெண் நண்பர்களுடன் கதைப்பது என்று அதிகமான நேரங்கள் அதனுடையே முடிவடைகின்றது. சிலவேளைகளில் அதிக நெருக்கமாக உரையாடுவதையும் கேட்டிருக்கின்றேன். தான் சந்திக்கின்ற - உணர்கின்ற விடங்கள் எல்லாவற்றையும் அவர்களுடன் பகிர்ந்து கொள்கின்றார். நான் இவை எனக்குப்பிடிக் கவில்லை என பல தடவை கூறியிருக்கின்றேன். அதன் பின்னர் என் முன்னிலையில் கதைப்பதை குறைத்துக்கொள்வாரே தவிர மறைமுகமாக கதைக்கின்றார். குடும்பத்தில் அக்கறை பாசமாகத்தான் இருக்கின்றார். இவ்விடயம் என்னை மிகவும் பாதிக்கின்றது, என்னால் அவருடன் நெருங்கி பழகவோ பேசவோ எங்கும் போகவோ பிடிக்கவில்லை. ஏதோ வெறுமையாக இருப்பதுபோல் இருக்கின்றது. அதில் இருந்து மீள்வதற்கு தங்களது ஆலோசனை எதிர்பார்கின்றேன்.

**பதில்:**

தற்போது ஆண்,பெண் இருபாலாருக்கும் இருக்கும் மிகப் பெரிய பிரச்சினையாக இதுவே உள்ளது. திருமணமாகி சில மாதங்களின் பின்பு இருவருக்குமான உடன்பாடு-புரிந்துணர்வு இல்லை என்றால் வேறு ஒருவருடன் தம் உண்வுகளைப் பகிர்ந்துகொள்ள முனைகின்றனர். அப்படியான சந்தர்ப்பங்களில் எதிர்பாலாரிடம் காதலன் காதலி போல கணவன் - மனைவி உறவுபோல கதைத்துக் கொள்வார்கள். ஆனால், அவை உடல் ரீதியான உறவாக அல்லாமல் இருக்கும். முற்காலங்களிலும் இப்பிரச்சினை இருந்தாலும் தற்போது பெருகிவரும் தொடர்பாடல் வசதியால் அதிகரித்திருக்கின்றது. குடும்பம் என்னும் வண்டியில் புரிந்துணர்வு, விட்டுக்கொடுத்தல், அன்பு, காதல் என்று எல்லாம் சீராக இல்லாமல் இருந்தால் ஓட்டம் தடைப்படும். அப்பொழுது தான் யாருடனாவது அன்பாக பேசவேண்டும் என்ற ஏக்கம் வரும். அதிகமானவர்கள் நான் என் வாழ்க்கைத்துணையின் விருப்பம்போல் நடந்துகொள்கின்றேன் ஆனால், அவர் என்னில் அன்பாய் இல்லை என்று கூறுகின்றார்கள். அவர்களின் விரும்பம் போல நடந்துகொள்கின்றோம் என்பது சரி, அவரின் மனத்தேவைகளை புரிந்து கொள்கின்றோமோ என்பதுதான் சிக்கலே. விரும்பம் என்பது பொது வானது ஆனால் அன்பின் தேவைகள் என்பது ஆழமானது. திருமணமான புதிதில் காட்டும் அக்கறை, அன்பு, பரிவு காலங்கள் செல்லும் போது குறைந்துவிடுகின்றது.

குடும்பத்தில் அன்பாக இருப்பதாக நினைத்து குழந்தைகளுடனும் வீட்டில் உள்ளவர்களுடனும் அதிக நேரத்தை செலவு செய்யும் சில பெண்கள் கணவனின் தேவைகள் விருப்பங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை குறைத்துக் கொள்கின்றார்கள். சில ஆண்கள் குடும்பத் தேவைகளை நிறைவுசெய்வது, எதிர்காலத்திற்காக திட்ட மிடுவது என அதிலேயே மூழ்கிவிடுகின்றார்கள். வயது கடந்தாலும் மனங்களின் எதிர்பார்பில் அன்புத் தேவைகள் என்றும் குறைவதில்லை. அவ்வாறான பொழுதுகளில் எங்கு அன்பான ஆதரவான ஆறுதல் கிடைக்கின்றதோ அங்கு மனம் சென்று விடுகின்றது. வாழ்க்கைத்துணை ஒருவரை ஒருவர் கவனிக்காது விடும்போது அவை தவறான உறவுகளை உருவாக்க வித்திடுகின்றது. உங்கள் கணவரும் இவ்வாறான ஒருநிலையில் இருக்கின்றார். இப்படியான சந்தர்பங்களில் நீங்கள் கணவருடன் இருக்க வேண்டுமே தவிர விலகிக்கொள்ளக்கூடாது. உங்கள் நெருக்கம் குறைவாக இருப்பதனால்தான் அவர் அதை வேறு ஒருவரிடம் எதிர்பார்க்கின்றார். நீங்கள் அந்த நெருக்கத்தை உணர வைத்திருந்தால் அவர் வேறு ஒரு நெருக்கத்தை தேடியிருக்கமாட் டார். கோபப்பட்டோ அல்லது அதனை திரும்ப திரும்ப சொல்லிக் காட்டுவதாலோ எந்தப் பயனும் இல்லை. மாறாக இருவருக்கிடையிலும் இடைவெளி அதிகரித்துக் கொள்ளும். ஏதாவது ஒரு விடயத் தில் அதிக கவனம் செலுத்தி மற்றையதைப் புறக்கணித்து விட்டேன். இனி அதனைச் சரிசெய்ய வேண்டும் என நினைத்துக் கொள்ளுங்கள், கணவர் மீது அன்பாக இருங்கள், அவருக்குப் பிடித்த விடயங்களைச் செய்யுங்கள். உங்கள் இல்லறம் சிறக்கும்.

குறிப்பு: அன்பு வாசகர்களே, உங்கள் பிரச்சினைகளை எமக்கு எழுதி அனுப் பினால் உங்கள் விபரங்கள் வெளியிடப்படாது இரகசியம் பேணப்பட்டு உங்கள் கேள்விகளுக்கான ஆலோசனைகள் இப்பகுதியில் பிரசுரிக்கப்படும்.

திருமதி.தனுஷா சுதாகரன் (உளவியலாளர் - கண்டி)





# அபாயம் அவதானம்




அண்மையில் வெளிவந்த அதிர்ச்சிகரமான தகவல் இது. இன்றைய நவீன காலத்தில் சில்வர் பாத்திரங்களைக் காட்டிலும் பிளாஸ்டிக் பாத்திரங்களே அதிகம் பாவனையில் உள்ளன. பல வர்ணங்களில் கண்ணைக்கவரும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளதனாலும் மிகக்குறைவான விலையில் கிடைப்பதனாலும் இவை அதிகளவில் விற்பனையாகின்றன. ஆனால் அவற்றின் பாதிப்பு எத்தகையது என்பது யாருக்கும் தெரிவதில்லை. இலகுவானதாக பயன்படுத்தக்கூடியதாக உள்ளதனால் அனைத்து நிகழ்விலும் இந்த பிளாஸ்டிக் கப் முக்கிய இடம்வகிக்கின்றது. ஆனாலும் இது பற்றிய விழிப்புணர்வினை அரசாங்கமோ வேறு அமைப்புகளோ மக்களிடத்தில் ஏற்படுத்துவதில்லை.

பிளாஷ்டிக் பொருளை பயன்படுத்தினால் ஏற்படும் தீமை பற்றி எல்லோருக்கும் தெரியும் ஆனால் நம் மக்கள் விஷத்தை தான் வி5ம்பி உண்ண ஆசை படுகிறார்கள் இவர்களை காப்பாற்ற 3 வழிமுறைகள்: 1) கடைக்காரர்கள் பிளாஷ்டிக் கப்பை பயன்படுத்த கூடாது. 2) மக்களாகவே பிளாஷ்டிக்கை பயன்படுத்த கூடாது. 3) பிளாஷ்டிக்கை உருவாக்கும் ஆலைகள் அவர்களாகவே நிறுத்த வேண்டும். பிளாஷ்டிக்கை நிறுத்தினாலே போதும் நிலத்தடி நீரையும் சேமிக்கலாம் பின் உடல் ஆரோக்கியம் மற்றும் சுற்றுசூழலையும் பாதுகாக்கலாம்.

பண்டைய காலத்தில் பனை ஓலையினால் தயாரிக்கப்பட்ட தட்டுக்களை பயன்படுத்துவது வழமை. அக்காலத்தில் நோய் என்பது தெரியாத ஒன்றாக இருந்தது. ஆனால் இன்று நாகரீக மோகம் எம்மை பலவிதத்திலும் மாற்றியுள்ளது. இலகுவானதென நாம் பயன்படுத்தும் ஒவ்வொன்றும் எமது உடம்பில் பலவித கெடுதல்களை உண்டு பண்ணுகின்றன. இயற்கையை விடுத்து செயற்கையை நாடுவது நிச்சயம் அழிவையே தரும்.

குழந்தைகள் அதிகமாக இவ்வாறு பிளாஸ்டிக் கப்களை விரும்பி கேட்பது அனைவருக்கும் தெரியும். இவ்விடயத்தில் அனைவரும் மிகக் கவனமாக இருந்து உங்களினதும் குழந்தைகளினதும் ஆரோக்கியத்தை பேணுமாறு கழுகுப்பார்வையின் மூலம் வேண்டுகோள்விடுக்கிறாள் ஒளி அரசி.

ஜனரஞ்சகன், கொழும்பு





இன்றைய உலகில் பெண்கள் பல துறைகளிலும் முன்னிலைபெற்று வருகின்ற சம்பவங்கள் தற்போது ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் கிராமத்தில், ஒரு கல்விக்குடும்பத்தில் பிறந்து வளர்ந்து தான் பிறந்த மண்ணுக்கு மட்டுமல்லாது இளம் பெண்ணியத்திற்கு பெருமை சேர்த்துள்ள சிவலிங்கம் நேருஜா பற்றி இங்கே குறிப்பிடுவது சாலச் சிறந்தது. இன்றைய மாணவ சமுதாயத்துக்கு சிறந்த எடுத்து க்காட்டாக விளங்குகின்றார் நேருஜா.

# கிழக்கின் பட்டயச்செல்வி

இவர் மட்டக்களப்பின் இயற்கையின் தோற்றத்தால் படுவான்கரை என்று அழைக்கப்படும் பிரதேசத்தின் பழுகாமம் என்னும் ஊரில் கல்வியியல் குடும்பத்தில் பிறந்து சிறு பராயத்தில் ஆரம்பக்கல்வியினை திருப்பழுகாமம் விபுலானந்தா வித்தியாலயத்தில் கற்று பின்பு இடைநிலைக்கல்விக்காக மட்டு நகரை நோக்கி சென்று கல்லடி விவேகானந்தா மகளிர் மகா வித் தியாலயத்தில் கல்வி பயின்றார். சிறு வயதில் இருந்தே சாதிக்கவேண்டும் என்கின்ற உணர்வோடுதான் கல்வியினை முன்னெடுத்தார். க.பொ.த. சா.த பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றதுடன் உயர்தரத்திலும் வர்த்தகத்துறையைத் தேர்ந்தெடுத்து, அதிலும் வெற்றி கண்டார். 2014ம் ஆண்டு வர்த்தகப்பிரிவில் மாவட்டத்தில் முதல் நிலையினையும், அகில இலங்கை ரீதியில் 241 ஆவது இடத்தையும் பெற்றுக்கொண்டார்.

உயர்தரம் படிக்கும் போதே தன்னுடைய கணக்கீட்டு ஆசிரியர் பாலசுப்பிரமணியம் அவர்கள் தன்னை உற்சாகமூட்டி மேலும் பல அறிவுரைகளையும் வழங்கி உயர்தர வெற்றிக்கு உரமூட்டி தாகக்கூறிய இவர் தற்போது கிழக்கு பல்கலைக்கழத்தில் வர்த்தகத்துறையில் முதலாம் வருடத்தில் கல்விகற்றுக்கொண்டிருக்கின்றார்.

2016 September இல் நடைபெற்ற Chartered Accountancy Executive Level பரீட்சையில் Processesm, Assurance & Ethics பாடத்தில் அதிக புள்ளிகளை பெற்று சாதனை படைத்துள்ளார். HBC கல்லூரியில் யூட் டிலக்ஷன் ஆசிரியரின் நெறிப்படுத்தலில் கல்வியினை முன்னெடுத்திருந் தார். மட்டக்களப்பு மாணவர் ஒருவர் Chartered Accountancy பரீட்சையில் அகில இலங்கை ரீதியாக அதிக புள்ளிகளை பெற்றிருப்பது இதுவே முதல் முறையாகும்.

நேருஜா, சிவலிங்கம் - சாந்தினி தம்பதியினரின் புதல்வி. தந்தை ஓய்வுபெற்ற பொறியியலா ளராவார். தாயார் தற்போது மட்டு கல்லடி விவேகானந்தா மகளிர் மகாவித்தியாலயத் தில் ஆசிரியர். இவரது மூத்த சகோதரி கிழக்கு பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடத்தில் இறுதியாண்டில் கல்விகற்கின்றார்.

அனைத்து மாணவர்களும் முயற்சி உடையவர்களாக இருப்பார்களாயின் தங்களுக்கான தொழில்வாய்ப்புகளினை இலகுவாகப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் உயர்தரம் கற்று பல்கலைக்கழகம் சென்றாலும் தங்களால் இயன்ற மேலதிகமான உயர்படிப்புக்களை கற்கவேண்டும் எனவும், Chartered Accountancy முற்றுமுழுதாக முடிப்பது தன்னுடைய இலக்குகளில் ஒன்று எனவும் தெரிவித்தார்.

இவரை ஒளிஅரசியின் சார்பில் நாமும் வாழ்த்துகின்றோம்.



நன்றி : திலக்ஸ் ரெட்ணம், பழுகாமம் 0758023865



அழகி போட்டிகள் பன்னாட்டளவில் இன்றும் நடத்தப்பெறும் ஓர் மிகப்பழைமைவாய்ந்த போட்டி ஆகும். ஐக்கிய இராச்சியத்தில் எரிக் மோர்லேயால் 1951ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது .

பிரான்ஸ் நாட்டில் இரு வகையான அழகிப்போட்டிகள் நடைபெற்று வருகின்றன. Miss Elegante France miss france போன்றவையாகும். Miss France 2017 போட்டியில் 18 வயதுடைய Alicia ayalics தெரிவானார்.

Miss Elegante France அழகி போட்டியில் 30ற்கும் மேற்பட்ட நாட்டு அழகிகளுக்குள் Miss Elegante France ஆக சபறினா கணேசபவன் என்ற ஈழத்து இலங்கை தமிழ் பெண் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தப் போட்டியில் வெற்றிபெறும் பெண்ணிற்கு தங்க கிரீடம் பரிசாக வழங்கப்படுவதுடன் குறித்த போட்டியை நடாத்திய அமைப்பின் கீழ் அதே நாட்டில் குறிப்பிட்ட ஆண்டு வசிக்கவேண்டும்.

அக்காலத்தில் அவ் அமைப்பின் பிரதிநிதியாக உலக நாடுகளுக்கு சென்றுவரவேண்டும்.

# அழகின் மகத்துவம்



பிரான்ஸ் அழகியாக ஈழத்துப்பெண்

**சபறினா கணேசபவன்**

குறித்தபெண் விளம்பரம், நடிப்புத்துறை என்பவற்றின் மூலம் கோடீஸ்வரியாக தோற்றம் பெறமுடியும். லண்டன், பிரான்ஸ், மலேசியா ஆகிய நாடுகள் பழமையாக வெவ்வேறு பெயர்களில் நடாத்தி வருகின்றன. ஏனைய நாடுகளிலும் இடம்பெற்றாலும் இம்மூன்று நாடுகளிலும் அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது.

நம் நாட்டு இளம் சந்ததியினர் உலகநாடுகளில் சாதித்துவரும் இக் காலத்தில் சபறினா கணேசபவனின் சாதனை நம் நாட்டிற்கு குறிப்பாக அனைத்து தமிழருக்கும் உலக அரங்கில் அடையாளம் கொடுத்துள்ளது.

அந்த வகையில் உலக அழகுராணிப் போட்டி தொடர்பாக மேலும் சில தகவல்களை வாசகர்களாகிய உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றாள் ஒளிஅரசி.



தொகுப்பு : ஜே.ஜே



**போட்டிக்கான தகுதிகள்**

18 வயது தொடக்கம் 27 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்

போட்டியாளர் திருமணம் செய்யாதவராகவும் குழந்தை அற்றவராகவும் இருக்கவேண்டும்.

மாலைநேர மேலங்கி, நீச்சலுடை(கவர்ச்சி) திறமைகாண் போட்டி ஆகிய மூன்று பிரிவுகளில் புள்ளி இடப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

சாத்தியமான போட்டியாளர்கள் அந்த நாட்டின் தேசிய இயக்குனர்கள் மூலமே விண்ணப்பிக்க முடியும். எல்லாவற்றிற்கும் முதல் அவர்களது சொந்த மாகாண இயக்குனர்களை சந்திப்பதன் மூலமே அலங்கார அணிவகுப்பிற்கு தகுதியுடையவர்கள் ஆகிறார்கள்.

உங்கள் உயரம் குறைந்தது 5 அடி 4 அங்குலம் ஆக இருக்க வேண்டும்

உடற்பயிற்சி மற்றும் ஆரோக்கியம் சார்ந்த உணவினை உட்கொள்பவராக இருப்பதுடன் நடுவர்கள் முன் நீச்சல் உடையிலும் தோற்றமளிக்கவேண்டும்.

**1. தோல் பராமரிப்பு:**

முகப்பரு அற்ற ஈரப்பதமான சருமத்தை கொண்டவராக இருப்பதுடன் தேவையற்ற முடிகள், தழும்புகள், சிவப்பு புள்ளிகள் அற்ற மெழுகு போன்ற உடல்வாகை கொண்டவராக இருத்தல்வேண்டும். அலங்கார அணிவகுப்பில் உங்கள் தோற்றத்தை முழுமையாக காண்பிக்கும் வண்ணம் பார்வையாளர்களை எவ்வாறு உங்கள் திறமை மற்றும் நடத்தல் மூலம் ஈர்ப்பது என்பதை பயிற்சியாளர் ஒருவரிடம் கற்றுக்கொள்ள வேண்டும்

**2. நேர்காணலுக்கு தயாராகுதல்:**

உங்கள் கல்வி திறனுடன் நடப்பு பொதுஅறிவு சார்ந்த திறன்களுமே மேடையில் வெற்றியை தீர்மானிக்கும்.

அணிவகுப்பின் போது கவனிக்க வேண்டியவை

போட்டி நடைபெறும் வாரங்களில் எப்பொழுதும் புன்னகைத்தபடியே இருக்க வேண்டும்.

சகபோட்டியாளர்கள் மற்றும் குழுவுடன் கண்ணியமாக அன்பாக நடந்துகொள்ளவேண்டும்.

3. நடுவர்களின் முடிவு எப்படி இருந்தாலும் அது தோல்வியாக இருந்தாலும் அதனால் மனம் உடையாமல் அழுது ஆர்பாட்டம் செய்யாமல் புன்னகையுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறாயின் மட்டுமே மீண்டும் போட்டிக்கு முயற்சி செய்யலாம். ஒருவர் இரண்டு முறை மட்டுமே பங்குபற்றலாம்

**சரி வாசகர்களே,**

**உங்கள் வீட்டை அழகுபடுத்தவும் மங்கையரை மகிழ்விக்கவும் அன்பு, அழகு, அறிவு, திறன், போட்டி, நற்பழக்கவழக்கம் என அனைத்தையும் தாங்கி மாதாந்தம் உங்கள் வீட்டிற்கு வரும் அழகுராணி யார்? அவள் தான் அழகுராணிப் போட்டித் தகவல்களை உங்களுக்குத் தந்து மகிழ்ந்த ஒளிஅரசி.**

## Happy birthday to you



**அ.அஜய்**
**10.01.2017**



**ஞா.வைஷ்ணவி**
**30.12.2016**




**சு.திலக்ஷன்**
**01.01.2017**



**த. ஜெனோஸ்**
**11.01.2017**




**ஜெ அனுசாந்**
**23.12.2016**



அம்முவின் பதில்கள்

# இசை - இறை வேறுபாடு?



**1. கர்ப்பிணிப் பெண்கள் குங்குமப்பூ சாப்பிட்டால் குழந்தை அழகாகப் பிறக்குமா அம்மு? (கஜீ,முல்லைத்தீவு)**

இக்கருத்து பண்டைய மரபாக பின்பற்றப்பட்டுவருகிறது கஜீ, எமது சருமத்தில் உள்ள மெலனின் என்ற நிறமிகள் தான் சரும நிறத்தை தீர்மானிக்கின்றன. குங்குமப்பூ அல்ல.

**2. அம்மு, வாழ்கை பற்றி ஒருதத்துவம் கூறுங்கள்? (காநூரன், புதுக்குடியிருப்பு)**

வாழ்க்கை என்னும் தேர்வுசற்றுக் கடினமானதுதான், அதற்கான அனைத்து பதில்களையும் சேகரித்த பின்பு கடவுள் வினாத்தாளை மாற்றிவிடுகிறார்.

**3. கடவுளுடன் பேசியதுண்டா அம்மு? (ஆரணி,கொழும்பு 14)**

றை பண்ணினேன், எப்பபோன் பண்ணினாலும் நீங்கள் அழைத்தநபர் தொடர்புஎல்லைக்கு வெளியில் இருக்கிறார் என்றபதிலே கிடைக்கிறது. நீங்களும் ஒரு தடவை முயற்சியுங்கள் ஆரணி.

**4. அம்மு மூன்றாம் உலகப்போர் வந்தால் என்ன ஆகும்? (ஜனனி, ஹட்டன்)**

வரலாற்றில் நிறைய படிக்கவேண்டிவரும் ஜனனி

**5. ஆண்களுக்கு அழகு தருவது மீசை என்றால் பெண்களுக்கு அழகு எது அம்மு? (விக்னேஷ், நிலாவெளி)**

ஆணின் மீசையை ரசிக்கும் கண்கள்தான் பெண்களுக்கு அழகு.

**6. இறை-இசை இரண்டுக்குமான ஒற்றுமை என்ன அம்மு? (கௌசி,யாழ்ப்பாணம்)**

இரண்டுமே நினைத்த உடன் நினைவில் நினைத்தவாறு தோன்றுவது.

குறிப்பு - வாசகர்களே! உங்கள் கேள்விகளை தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள் அல்லது Oli Arazi என்ற முகநூலில் பதிவிடுங்கள்.



**கணவன் : "உங்க அப்பா பெரிய ஒலிம்பிக் ரசிகரா இருக்கலாம். அதுக்காக தங்க நகைக்கு பதிலா வெங்கல நகை செஞ்சு போட்டா என்ன அர்த்தம்?"**

**மனைவி : "நீங்க எனக்கு மூணாவதா வந்த புருஷன்னு அர்த்தம்."**

---

**மனைவி : ஏங்க, என் பிரசவ நேரத்தில் உங்களுக்கு உதவியா இருக்க எங்கம்மாவை வரவழைச்சிடட்டுமா?**

**கணவன் : வயதான காலத்தில் அவங்களை ஏன் சிரமப் படுத்துறே! பேசாம உன் தங்கையை வரவழைச்சிடு!**



# கூட்டெரு / கூட்டுப்பசளை (COMPOST)

கூட்டெரு என்பது ஒரு முழுமை பெற்ற சேதனவுறுப்புப் பசளையாகும். இதில் பயிருக்குத் தேவையான பிரதான மூலகங்களான நைதரசன், பொஸ்பரசு, பொட்டாசு போன்றவற்றுடன் சுவட்டு மூலகங்களான கல்சியம், இரும்பு, மக்னீசியம், மங்கனீசு, சிலிக்கன், போறன், நாகம், அயடீன் போன்றனவும் அதிகளவில் காணப்படுகின்றன. கூட்டெருவானது சாதாரணமாக அழிந்து பிரயோசனமற்றுப்போகும் சேதனப்பொருட்களையும், கழிவுப்பொருட்களையும் தன்னகத்தே நுண்ணுயிர் தாக்கத்திற்கு உள்ளாக்கி பெறப்பட்ட பொருளாகும். கூட்டெருவின் தரமானது சீரான நுண்ணுயிர் தாக்கத்தினாலே உயர்த்தப்படுகின்றது.

கழிவுகளை ஒழுங்கான முறையில் முகாமைத்துவம் செய்யும் வழிமுறையாக கூட்டெரு தயாரித்தல் உலகத்திலேயே மிகவும் பழைமை வாய்ந்ததாகப் பின்பற்றப்படுகின்றது. நகர்ப்புறங்களில் கழிவுகளின் முகாமைத்துவத்திற்கு இது பாரியளவில் உதவி செய்கின்றது. ஆதலால் கூட்டெரு உற்பத்தியானது விவசாயத்திற்கு மட்டுமல்லாது சூழலுக்கும், சமூகத்திற்கும் பல்வேறுபட்ட நன்மைகளை வழங்கக்கூடிய ஒரு செயற்பாடாகக் கருதப்படுகின்றது.

கூட்டெரு பயன்படுத்துவதால் வீட்டுத்தோட்டங்களிலும் ஏனைய பயிர்நிலங்களிலும் பல்வேறுபட்ட நன்மைகளை பெறக்கூடியதாக இருக்கின்றன. அவையாவன :-

★ மண் கட்டமைப்பினது தரம் அதிகரிக்கின்றது.

★ மண்ணின் போஷாக்குத்தன்மை விருத்தியடைவதுடன் நீரைப் பிடித்து வைக்கும் தன்மை அதிகரிக்கின்றது.

★ உவர் தன்மையை நடுநிலைப் படுத்துவதுடன் நன்மை தரும் நுண்ணுயிர்களின் நடமாட்டத்தையும் அதிகரிக்கின்றது.

★ பயிர்களின் உற்பத்தித்தரம் உயர்வாக இருப்பதுடன் நஞ்சற்ற உணவுப்பொருட்கள் கிடைக்கின்றன.

கூட்டெருவை தயாரிப்பதில் பின்வரும் பிரதான முறைகள் பின்பற்றப்படுகின்றன.

1. குவியல் முறை 2. குழி முறை 3. கூடு முறை 4. பீப்பாய் முறை

இவற்றில் எமக்குக் கிடைக்கக்கூடிய மூலப்பொருட்களின் அளவுகள், இடவசதி மற்றும் தேவையான உற்பத்தியின் அளவு என்பவற்றைப் பொறுத்து கூட்டெரு உற்பத்தி முறை தீர்மானிக்கப்படுகின்றது.

இன்று உலகளாவிய ரீதியில் வலுப்பெற்றுவரும் நஞ்சற்ற உணவு உற்பத்தியைப் பெருக்கும் அடிப்படை இயற்கை உரமாக கூட்டெரு உள்ளதனால் நாமும் எமது விவசாய நிலங்களிலும், வீட்டுத்தோட்டங்களிலும் இச்சுலபமான கூட்டெரு உற்பத்தியைச் செய்து பயன்படுத்தி ஆரோக்கியமான சந்ததியை பேணுவதற்கு துணை நிற்போமென உறுதிகொள்வோம்.

பசுமைத் தமிழன் ✍



குறுந்தொடர்

அத்தியாயம் - 3

# மனமே மயங்காதே!

நான் கேட்டுச் சொல்லுறன், உங்கள் வீட்டு போன் நம்பரை தா என்றாள் சாருமதி. சகோதரி தாயுடன் ஒரு கிழமையை ஊரில் கழித்துவிட்டு வேலைக்குத் திரும்பி இருந்தான் வஞ்சிதன். அலுவலகத்தில் பதவி தர உயர்விற்கான பரீட்சைகள் நெருங்கி இருப்பதால் அதற்கான வகுப்புகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. வஞ்சிதன் அங்கு விண்ணபித்த சக அலுவலர்களுடன் வெளியே வகுப்புகளுக்கு சென்று வந்துகொண்டிருந்தான்.

பாடசாலை விடுமுறைக்கு ஊருக்கு வரவிருந்த வந்தனாவை தோழி சாருமதி தனது மகன் மட்டக்களப்பு பார்க்க விரும்புவதாகவும் குடும்பத்துடன் அங்கு வருவதாகவும் தங்களுக்கு இடங்களை சுற்றிகாட்டும்படியும் தொலைபேசியில் கேட்டிருந்தாள். தான் வாடகைக்கு தங்கியிருந்த வீட்டின் மேற்பகுதியில் இருந்தவர்கள் வேறு இடம் சென்றிருந்ததால் குழந்தைகளுடன் வர இருக்கும் தோழிக்காக வீட்டு உரிமையாளரிடம் கதைத்து அங்கு ஒரு கிழமை தங்குவதற்கு ஏற்பாடு செய்திருந்தாள். குழந்தைகளுக்கு சில பொருட்கள் வாங்கிவிட்டு பேருந்திற்காக காத்திருந்த வந்தனாவிடம் ஹலோ, எப்படி இருக்கிறீங்கள் என்ற குரல் கேட்டு திரும்பினாள். ஓ-- நீங்களா நான் சட்டென பயந்து போனேன் என்றாள். உங்களைப் பார்த்து சொறி சொல்லோணும் என்று நினைச்சனான், சந்தர்ப்பம் கிடைக்கேல்ல, நல்ல வேளையா இப்ப பார்த்திட்டன்; இனிமேல் சந்தர்ப்பம் கிடைக்குமோ தெரியேல்லை என்றவனிடம், எனக்கா, எதுக்கு சொறி சொல்லோணும்? என்றாள். மாமி எங்க வீட்ட கேக்காமலே உங்களை வரச்சொல்லிட்டா, உங்களை சிரமப்படுத்தினதிற்குத்தான் என்றான். அவனை ஆச்சரியமாய் நிமிர்ந்து பார்த்த வந்தனா எனக்கு ஒன்றும் விளங்கேல்ல, எந்த மாமி, என்ன சிரமம், என்றாள். உடனே வஞ்சிதன் நீங்கள் வந்தனா ரீச்சர் தானே என்றான். அதற்கு அவளும் ஓ நான்தான் என்றாள். சுந்தரி மாமி என்று அனைத்து விடயங்களையும் கூறி முடித்தான்.



அப்படியா, எனக்கு இனி திருமணமே வேண்டாம் என்று வீட்டில் கூறி இருந்தேன், நான் அதை பெரிதாக நினைக்கவில்லை. எத்தனையோ தடவை பெண் பார்த்துவிட்டுப் போயிருக்கிறார்கள் அவை நடைபெறாமலும் இருந்திருக்கின்றது. அத்துடன் நீங்கள் என்னைப் பார்க்கவே இல்லை, இதை பெரிய விடயமாக நீங்கள் நினைத்து மன்னிப்பு கேட்காதீர்கள், நீங்கள் கூறியதால்தான் அது நீங்கள் என்று எனக்கு தெரியும், யாரோ ஒருவரின் ஜாதகம் பொருந்தியதாகவும் ஊருக்கு வரும்படியும் கூறிய அம்மாவின் வற்புறுத்தலுக்காக வந்திருந்தேன் - என்று கூறிக்கொண்டிருக்கும்போதே அவள் செல்ல இருந்த பேருந்தும் வந்துவிட விடைபெற்றுச் சென்றுவிட்டாள் வந்தனா. தோழியின் வருகை, சுற்றுலா, என்று பொழுது இனிமையாய் கழிந்தது வந்தனாவிற்கு, தோழி ஊருக்கு போகுமுன் பொருட்கள் சில வாங்கிச் செல்லவேண்டும் என்றதால் கடைவீதிக்கு தோழி குடும்பத்தினருடன் சென்றிருந்தாள் வந்தனா. சுட்டிக் குழந்தைகள் இருவரும் கடையை இரண்டுபடுத்திவிட்டன. அது வேண்டாம், இது வேணும் என சண்டையிட்ட குழந்தைகளை சமாதானப்படுத்தும் பொறுப்பை கணவனிடம் ஒப்படைத்துவிட்டு, நீ வா வந்தனா, நாங்கள் எங்கள் பக்கம் செல்வோம் என்று பெண்கள் பிரிவிற்கு அழைத்துச்சென்று, வந்தனா எவ்வளவோ தடுத்தும் கேட்காமல் தனக்கும் தோழிக்கும் என சில ஆடைகளைத் தெரிவுசெய்தாள் சாருமதி.

எல்லாவற்றிற்கும் விலையை செலுத்திவிட்டு கணவனைத் தேடியபோது. ஏய் சாரு நான் சொல்லுவேனே வஞ்சிதன் என்று, என்ர பிரண்ட், என்று கூறியபடியே நண்பனை தோளில் அணைத்தபடி வந்தான் அவளது கணவன். உடனே, வந்தனாவின் கைகளில் இரகசியமாய் உரசி நான் சொன்னனே, அண்டைக்கு கோயிலில, அது இவர்தான், என்றாள். உடனே சாருமதி சிரித்தபடி உங்களை, எங்கட கலியாணத்தில பார்த்தது, அதுக்குப்பிறகு காணவே இல்லை. அடிக்கடி இவர் உங்களைப்பற்றி சொல்லுறவர், இப்பதான் திரும்ப சந்திச்சிருக்கிறோம் என்றாள்.

நண்பனின் காதை திருகியபடி இவன் ஊரூராக உங்களையும் இழுத்திட்டு திரியிறான், பிறகு எப்பிடி சந்திக்க முடியும், என்றான் வஞ்சிதன். சரியா சொன்னீங்க, நான் மாட்டன் எண்டுதான் சொல்லுறன், ஊரோடு இருக்கிறன் என்று சொன்னால் கேட்டால்தானே உங்க பிரண்ட் என்றாள் சாருமதி. சரி சரி உன்ர கட்சிக்கு அவனையும் இழுக்காத - என்றான் சாருமதியின் கணவன் சிரித்தபடி, எல்லோரும் சேர்ந்து ஒரு ஹோட்டலுக்குச் சென்றார்கள். வீடு வந்து சேர இரவு ஏழு மணியாகியதால் சாருமதி குடும்பத்தினர் அவசர அவசரமாக பேருந்து தரிப்பிடத்திற்குப் புறப்பட்டவேண்டியிருந்தது

இரண்டு நாட்களின் பின் யாழ்ப்பணம் நோக்கி புறப்பட இருந்த பேருந்தில் ஏறி ஒவ்வொரு இருக்கையாக பார்த்தபடி வந்தபோது, யாரையோ தேடுறீங்கள் போல, என்ற குரல் கேட்டு திரும்பிய வந்தனா வஞ்சிதனைக் கண்டதும் நீங்கள் ஊருக்கு போறீங்களா நல்லவேளை என்றாள் ஏன் என்னாச்சு என்றவனிடம் கையெழுத்திற்காக தாயார் கடிதம் ஒன்றை அனுப்பி இருந்ததையும். சாருமதி ஊருக்கு போகும் அவசரத்தில் மறந்து விட்டுச்சென்றுவிட்டதாகவும் அதனை சாருமதியிடம் ஒப்படைக்கும் படியும் கூறி கடிதத்தை கொடுத்துவிட்டு விடைபெற்றாள்.

ஊருக்கு சென்ற வஞ்சிதன் முதல் வேலையாக அந்த கடிதத்தை சாருமதியிடம் ஒப்படைத்து இருந்தான். வீட்டிற்கு வந்த சுந்தரி மாமி என்னப்பா வஞ்சி, அந்தப்பக்கம் வந்தனி ஒருக்கா எங்கட வீட்டை வாறதுக்கென்ன என்றார்.

அவசரமா ஒரு கடிதம் குடுக்கிறதுக்கெண்டு வந்தனான் மாமி பிறகொருநாள் கட்டாயம் வாறன், என்றபடி வஞ்சிதன் வெளியில் சென்றுவிட்டான். எங்க வந்தவன், எனக்கொண்டும் சொல்லேல்ல, என்ற வஞ்சிதனின் அன்னையிடம், அது மச்சாள், எங்கட வந்தனா அவள் வீட்டை குடுக்கச் சொல்லி, ஏதோ கடிதம் குடுத்துவிட்டவளாம், அதுதான் பக்கத்து வீட்டு பிள்ளையிட்ட கொண்டு வந்து குடுத்தவளாம் என்று சாருமதி சொன்னது - என்றார் சுந்தரி.

மறுநாள் வேலைக்கு வந்ததும் வஞ்சிதனுக்கு அவனது தம்பியிடம் இருந்து ஒரு அவசர தொலைபேசி அழைப்பு வந்திருந்தது. அன்னை இரத்த அழுத்தம் அதிகமாகி மயங்கி விழுந்துவிட்டதாகவும் வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்திருப்பதாகவும் கூறினான். அதனைக் கேட்ட அடுத்த மணித்தியாலமே ஊருக்கு புறப்பட்டுவிட்டான் வஞ்சிதன்.

ஒரு வாரம், வைத்தியசாலையும் வீடுமாக எல்லோரும் அலைந்து அன்றுதான் அன்னையை வீட்டிற்கு அழைத்து வந்திருந்தனர். [தொடரும்]



அபர்ணா





# காதல் சிறப்பு

தமிழிலக்கியங்களில் காதல் என்பது எப்போதும் அதிகம் இளையோடியுள்ளது. இது சங்க காலம் தொடங்கி ஒரு பொருள் மரபாகவே இலக்கியங்களில் இளையோடியிருந்தது. இலக்கியம் என்பது மக்களின் வாழ்வாதார கொள்கையை கூறுவதே. அத்தகு வாழ்க்கை முறையில் காதல் எப்போதுமே ஒரு கவினுறு மரபாக மலர்ந்து வந்துள்ளது. ஒத்த பண்புடைய தலைவனும் தலைவியும் காதல் உள்ளத்தால் ஒன்றுபட்டு களவில் ஒழுகி கற்பியலில் புகுந்து இல்லறம் நடாத்தும் வாழ்க்கை என்பது எப்போதுமே ஒரு பேசு பொருளாக இலக்கியங்களில் அதிகம் பேசப்படுகின்றது.

பல்லவர் கால இலக்கியமான முத்தொள்ளாயிரம் காதல் உணர்வினையும், ஊடல், கூடல்,களவு,கற்பு என அனைத்து உணர்வுகளையும் எம் கண்முன்னே விரிக்கிறது.இதற்கு பின்வரும் பாடலை சான்றாக கூறலாம்.

காப்படங்கு அன்னை கடிமனையில் செறிந்து,
யாப்படங்க ஓடி அடைத்த பின்
மாக்கடுகோன் நன்னலம் காண
கதவம் துளைதொட்டார்க்கு என்ன கைமாறினி

இவ்வாறு தலைவனைக் காண ஏங்கும் தலைவியின் ஏக்கம் நிறைந்த மனநிலை அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது. தலைவன் வீதியுலா வருகின்றான், தலைவி அவனைக் காணவேண்டும் என, ஏங்குகிறாள். இங்கு தலைவியின் காதலுக்கு எதிர்ப்புக்களே அதிகமாக காணப்படுகிறது. தலைவன் வீதியுலா வரும் சமயம் தலைவியின் அன்னை அவளை அறை ஒன்றினுள் அடைத்து விடுகின்றாள். அறைக்குள் அடைபட்ட தலைவி மன்னவனைக் காணவேண்டும,; என தவிக்கிறாள். ஆனால் அன்னையோ பூட்டி விட்டு திறப்பை கூடவே எடுத்துச் சென்றுவிட்டாள். தலைவியை அடைத்து வைத்திருந்த அறை வீதிக்கு நேர் எதிரே அமைந்துள்ளது. தலைவன் வீதியுலா வருகின்றான்.

அவனது அழகை காண ஏங்கிய தலைவி, திறப்பு உள்துளைப்பதற்கு வசதியாக உள்ள துளையினூடாக தலைவனின் அழகை கண்டு கழிக்கிறாள். அப்போது அவளின் மனம் பேசுகின்றது. நான் என்னுடைய உயிர்த் தலைவனை காண வசதியாக திறப்பு போடுவதற்கு துளையிட்டு என் காதலுக்கு உதவி செய்த தச்சனுக்கு என்ன கைமாறு செய்யப்போகிறேனோ? என நன்றியுடன் கூறுகின்றாள்.

இவ்வாறு முத்தொள்ளாயிரத்தில் தலைவியின் காதல் உணர்வு மிக அழகாக வெளிப்படுத்தி பாண்டியனின் காதல் சிறப்பு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

சா.ஹரிகரன்





ஆண் உட்பட எல்லா உயிர்களையும் படைத்து விட்ட கடவுள், இறுதியாக பெண்ணைப் படைக்க ஆரம்பித்தார். ஒரு நாள், இரு நாள் அல்ல. தொடர்ந்து 6 நாட்களாக பெண்ணை படைத்துக் கொண்டிருந்தார் கடவுள். இதை பார்த்துக் கொண்டிருந்த தேவதை ஒன்று, ஏன் இந்த படைப்புக்கு மட்டும் இவ்வளவு நேரம்? என்றது.

அதற்கு கடவுள், இந்த படைப்புக்குள் நான் நிறைய விஷயங்களை ஸ்டோர் செய்ய வேண்டும். இந்த பெண் படைப்பு பிடித்தது, பிடிக்காதது என்று எதையும் பிரிக்காமல் கிடைப்பதை சாப்பிட்டாக வேண்டும். அடம் பிடிக்கும் குழந்தையை நொடியில் சமாளிக்க வேண்டும். சின்னக் காயத்திலிருந்து உடைந்து போன மனது வரைக்கும் எல்லாவற்றுக்கும் அவள் மருந்தாக இருக்க வேண்டும். அவளுக்கு உடம்பு சரியில்லாத போதும் அவளே அவளை குணப்படுத்திக் கொண்டு ஒரு நாளைக்கு 18 மணி நேரம் உழைக்க வேண்டும். இது அத்தனையும் செய்ய அவளுக்கு இரண்டே இரண்டு கைகள் மட்டும் தான் இருக்கும், என்று விளக்கமாகச் சொன்னார்.

இது அத்தனைக்கும் இரண்டே கை மட்டுமா, என்று ஆச்சரியப்பட்டதுதேவதை. ஆர்வத்துடன் லேசாக பெண்ணைத் தொட்டுப் பார்த்து விட்டு, ஆனால் இவளை ரொம்ப மென்மையாக படைத்திருக்கிறீர்களே? என்றது.

அதற்கு கடவுள், இவள் உடலளவில் மென்மையானவள். ஆனால் மனதளவில் ரொம்ப பலமானவள். அதனால் எல்லாப் பிரச்னைகளையும் சமாளித்து விடுவாள். அது மட்டுமல்ல, அவளால் எல்லா பாரத்தையும் தாங்க முடியும். கஷ்டம், அன்பு, கோபம் என்று எல்லா உணர்வுகளையும் அவளுக்குள்ளேயே அடக்கிக் கொள்ளத் தெரியும். கோபம் வந்தாலும் அதை சிரிப்பு மூலமாக உணர்த்துகிற தன்மை இந்தப் படைப்பிடம் உண்டு. தனக்கு நியாயமாகப்படுகிற விஷயத்துக்காக போராடி ஜெயிக்கவும் செய்வாள். மற்றவர்களிடம் எதையும் எதிர்பார்க்காமல் அன்பை மட்டும் கொட்டுவாள், என்றார்.

ஓ.. இந்தளவுக்கு பெண்ணால் யோசிக்க முடியுமா? தேவதை கேட்டது.

எல்லா விஷயங்களைப் பற்றி யோசிக்க மட்டுமல்ல. அவற்றுக்கு தீர்வையும் அவளால் சொல்ல முடியும், என்று விவரித்தார் கடவுள்.

அந்த தேவதை பெண்ணின் கன்னங்களை தொட்டுப் பார்த்து விட்டு, இவள் கன்னத்தில் ஏதோ வழிகிறதே? என்றது.

அது அவளுடைய கண்ணீர். அவளுடைய சந்தோஷம், துக்கம், கவலை, ஆச்சரியம் என்று எல்லா உணர்வுகளையும் வெளியே காட்டுகிற விஷயம் அது, என்று பதிலளித்தார் கடவுள்.

ஆச்சரியமான தேவதை, உங்க படைப்பிலேயே சிறந்தது இது தான். இந்த படைப்பில் எந்த குறையுமே கிடையாதா? என்றது தேவதை.

தன்னுடைய மதிப்பு என்னவென்று அவளுக்கு எப்போதுமே தெரியாது,கடவுள் சிம்பிளாக பதிலளித்தார்.



# பெண்மையின் உண்மை

# SRINIVASA TRANSPORT

SRINIVASA TRANSPORT

## வவுனியாவில்

கட்டட பொருட்களிற்கான மிகச் சிறந்த தீர்வு.

- மணல் மண் (குறைந்த விலையில்)
- சல்லி கற்கள் (¾, 1)
- கொங்றீட் கற்கள் (4" கற்கள்)
  (நகரப்பகுதியில் இருந்து 7KM ற்கு உற்பட்ட பகுதிகளிற்கு போக்கு வரத்து கூலி இலவசம்)
- அத்திவார கற்கள்
- அனைத்து வகையான சீமேந்து வகைகள் குறைந்த விலையில்
- சிப்ஸ் மற்றும் டஸ்ட் வகைகள்

தரமான அனைத்து கட்டடப் பொருட்களையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள எங்களை தொடர்பு கொள்ளுங்கள்

**0777 279 179**
**0759 779 179**

facebook.com/transportsrinivasa
www.transportsrinivasa.com
89/A, Soosaipillayarkulam Road, Vavuniya.



பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

ஒரு கண்ணோட்டம்




# சாரணிய நூற்றாண்டில் கால் பதித்த யாழ்ப்பாண கல்லூரி சாரணர் குழு

யாழ்ப்பாணக் கல்லூரி சாரணியர் குழுவினர் தமது நூற்றாண்டு விழாவை 2016 ஐப்பசி 13,14,15 ஆகிய மூன்று தினங்களில் வெகுவிமர்சையாக கொண்டாடியிருந்தனர். யாழ்ப்பாணக் கல்லூரியானது 1916ல் யாழ் மாவட்டத்தில் சாரண இயக்கத்தை ஆரம்பித்தது. முதன் முதலாக அதிக எண்ணிக்கையான மாணவர்களைக் கொண்டு சாரண இயக்கத்தை ஆரம்பித்த பாடசாலை என்ற பெருமைக்குரிய பாடசாலையாகத் திகழ்கின்றது. 1916ம் ஆண்டில் காலி றிச்மென்ட் கல்லூரி சாரணத் தலைவர் திரு J.V. மெண்டிஸ் என்பவர் சாரணர் அணியொன்றுடன் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்து யாழ்ப்பாண பாடசாலைகளான யாழ் மத்தியகல்லூரி,யாழ் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, பரியோவான் கல்லூரி,அர்ச்யோவான் கல்லூரி போன்ற ஐந்து பிரபல பாடசாலைகளிலிருந்து தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பயிற்சியளித்து யாழ் மாவட்ட சாரணி யத்தை ஆரம்பித்துவைத்தார்.

இப்பாடசாலை அதிபர்களினதும் சாரண தலைவர்களினதும் அர்ப்பணிப்புடனான சேவையால் யாழ் மாவட்டத்தில் சாரணியம் தழைத்தோங்கி இன்று பெருவிருட்சமாக விளங்குகிறது. இக்கல்லூரியின் முதலாவது சாரண ஆசிரியராக திரு .D.R சான்டர்ஸ் என்பவருடன் திரு .A.R. பிரையன்ட், திரு N.T ஜீவரட்ணம் என்பவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். நூற்றாண்டு கால சாரணியப் பயணத்தில் இக் கல்லூரி பல்லாயிரக் கணக்கான சாரணர்களை நற் பிரஜைகளாகவும், ஒழுக்கசீலர்களாகவும், பெருந்தலைவர்களாகவும், கல்விமான்களாகவும், உலகமே போற்றும் உத்தமர்களாகவும் உருவாக்கியுள்ளது. அரசசாரணர்கள், இராணிசாரணர்கள் தற்போது ஜனாதிபதி சாரணர்கள் என உயர் விருதுகளை காலகாலமாக இக்கல்லூரி சாரணர்கள் பெற்றுவருகின்றமை இவர்களின் திறன்களுக்கு வலுவாக சான்றுபகர்கின்றது. மேலும் இக் கல்லூரி சாரணர்கள் தேசிய மற்றும் சர்வதேச ஜம்போறிகளில் பங்குபற்றி பல வெற்றிகளை ஈட்டியுள்ளனர். இதற்குமேலாக இவர்களைப் பயிற்றுவிக்கும் சாரண தலைவர்கள் பலரும் சாரணிய அதியுயர் விருதான 'தரு' சின்னத்தை பெற்றுள்ளனர்.

1980ம் ஆண்டு அப்போதைய பிரதம சாரண ஆணையாளராக இருந்த திரு.கேமபாலரட்ணசூரிய அவர்கள் யாழ்ப்பாண சாரண மாவட்டத்தை யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, பருத்தித்துறை, கிளிநொச்சி எனப் பிரித்து சாரணர் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்தினார் எனினும் யாழ்ப்பாணக் கல்லூரி தொடர்ந்தும் யாழ் மாவட்டத்துடனேயே இயங்கிவந்தது. பின்னர் பிராந்திய ரீதியாக செயற்படத்தக்கவகையில் கல்விவலயத்தினதும் பாடசாலை அதிபரினதும் கூட்டுத் தீர்மானத்திற்கு அமைய 2008 ஆம் ஆண்டு இக் கல்லூரி காங்கேசன்துறை சாரணர் மாவட்டத்துடன் இணைந்துசெயற்படலாயிற்று. அதன் பின்னரும் இச் சாரணர் இயக்கமானது பலமடங்கு வளர்ச்சி கண்டு பல ஜனாதிபதி சாரணர்களையும் உருவாக்கியுள்ளது.

2016ம் ஆண்டில் யாழ்ப்பாணக் கல்லூரி சாரணர் பிரிவில் பெண்கள் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. உலகின் பல்வேறு நாடுகளிலும் காணப்படுவது போன்ற முழுநிலைப்பயிற்சிகள் ஆண் சாரணர்களைப் போலவே பெண்களுக்கும் வழங்கப்படுவது காலத்தின் கட்டாயம் எனக்கருதிய சாரணியதலைமையகம்



## சிறப்பு நிகழ்வு




பெண் பிள்ளைகளை சாரணியத்தில் இணைத்துக் கொள்ள முன்வந்தது. இதன் பேறாகசாரணியத் தில் பெண்கள்அமைப்பானது ஸ்தாபிக்கப்பட்டு வெகுவேகமாக வளர்ச்சியடைந்தும் வருகின்றது. நன்கு திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்ட இவ் அமைப்பானது இலங்கையின் நகரப்பகுதிகளுக்கு மாத்திரமன்றி கிராமப்புறங்களுக்கும் பரவவேண்டும் என சாரணிய தலைமையகம் விரும்பியது. அந்த வகையில் பெண் அசிரியர்கள் சாரணத்தலைவர் பயிற்சி பெற்றனர். மாணவிகளும் சாரணிய பயிற்சி பெற்று தேர்ச்சியடைந்தனர். எமது பாடசாலையின் ஸ்தாபக தினத்தில் இவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் யாழ்ப்பாணக்கல்லூரி சாரணர் குழுவில் சாரணியத்தில் பெண்கள் அமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வும் பகுதிபகுதியாக அமையப்பெற்றது. சாதி மத வர்க்க பேதமின்றி பல்திறனும் நேர்மையும் நடுநிலை உணர்வும் உழைப்பின் உயர்வும் கொண்டவர்களாக இச்சாரணியர்கள் தற்போது சேவையாற்றி வருகின்றனர்.

சாரணிய தினத்தின் ஆரம்ப நிகழ்வாக அயற்பாடசாலை சாரணர் குழுக்கள் வருகைதந்து தமக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் பாசறைகள் மற்றும் நிலையியல் காட்சிகள், கோபுரங்கள் என்பவற்றை சிறந்த முறையில் அமைத்தனர். ஆரம்ப நிகழ்வின் பிரதம விருந்தினராக இலங்கை சாரணியர் சங்க தலைமையக ஆணையாளர் திரு. என். சவுந்தரராஜன் பங்குபற்றி விழாவை சிறப்பித்திருந்தார். சிறப்புவிருந்தினராக காங்கேசன்துறை சாரணர் மாவட்ட ஆணையாளர் திரு.சி. சற்குணராஜாவும் கௌரவ விருந்தினர்களாக உதவி மாவட்ட ஆணையாளர்களும் இப்பாடசாலை முன்னாள் சாரணன் திரு.ஏ. சுபேசன் (பிரதி முகாமையாளர், சிறிலங்கா இன்சுரன்ஸ்)அவர்களும் கலந்து சிறப்பித்தனர். குழுச்சாரணத்தலைவர் திரு.எஸ். சுதர்சன் விழாவை தலைமையேற்று நடாத்தினார். பாடசாலை அதிபர் கலாநிதி. வண.பிதா டி.எஸ். சொலமன் அவர்களின் உரையில், இதுவரை காலமும் பாடசாலை சாரணியத்திற்காக தம்மை அர்ப்பணித்த அனைவரையும் நன்றியுடன் நினைவுகூர்ந்தார். யாழ்ப்பாண கல்லூரி சாரணர் குழுவினரால் நூற்றாண்டு மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது. இம்மலரானது இப்பாடசாலையின் சாரணர் வரலாற்றை தாங்கிய சிறப்பு பெட்டகமாக வெளிவந்தமை சிறப்பம்சமாகும். இரண்டாவது தினத்தின் பிரதம விருந்தினராக கல்விக்காருண்யன் திரு. எஸ். வீ. எம் நாகரத்தினம் ஜயா அவர்கள் கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினர்களாக இசை இயக்குனர் திரு. கே. சத்தியன், முன்னாள் பாரியார் திருமதி. அருந்ததிதேவி சாரணப்பொறுப்பாசிரியரின் ஆகியோர் கலந்துகொண்டனர். யாழ்ப்பாண கல்லூரி மாணவர்கள் தயாரித்து வழங்கிய தடைதகர் என்னும் குறுந்திரைப்படம் திரையிடப்பட்டது. எஸ். வீ. எம் நாகரத்தினம் அவர்கள் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

மூன்றாம் நாள் நிறைவு விழா குழுச்சாரணத் தலைவரின் தலைமையில் இடம்பெற்றது முன்னாள் ஜனாதிபதி சாரணன் திரு. எம். மதிதரன் (ஆசிரியர்- விக்டோறியா கல்லூரி) சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். விழாவின் முக்கிய அம்சமாக மாணவர்களின் திறன்களை பரீட்சிக்கும் முகமாக துணிவு, வீரம், நுட்பங்கள் என அனைத்தும் கொண்ட 20 செயற்பாடுகள் இடம்பெற்றன, சாரணர்களின் மயிர்கூச்செறியும் வீரதீர சாகசங்கள் இடம்பெற்றன. அழைக்கப்பட்ட ஏனைய பாடசாலை மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். கலைநிகழ்வுகள், விருது வழங்கல் என்பவற்றுடன் விழா இனிதே நிறைவுற்றது.






நன்றி : வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி சாரணர் குழாம்


PRO
DIGITAL PRINTING
All Your Printing Needs
high Quality printing service
Digital Offset Printing
Graphic Designing
Personalized Gifts
Plastic Identity Cards
Digital Banner
Large format Digital Printing
indoor & outdoor good quality banner printing for you
A 50/54, Jampettah Street, Colombo - 13.
T 0112 447 399
E prodigitalprinting3@gmail.com

# திறமையின் தேடல்...

சர்வதேச தரத்திலான ICVE சான்றிதலுடன்

## Diploma in Mass Media

- வானொலித்துறை
- 80% கலையகப் பயிற்சி
- New Trends of FM
- பத்திரிகை
- விளம்பரம்
- Media Ethics & Law
- செய்தி
- ஒலிப்பதிவு
- சந்தைப்படுத்தல்
- Social Media
- உளவியல்

போன்ற அனைத்துத் துறைகளையும்
உள்ளடக்கிய 3 மாத கால தீவிரபாடநெறி.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
பதிவுகளுக்கு முந்துங்கள்



இலங்கையிலும் சர்வதேசத்திலும் ......
துடிப்பு மிக்க அறிவிப்பாளராக ஊடகவியலாளராக மிளிர அரியதோர் சந்தர்ப்பம்



## Our Courses

- Introductory Mass Media Course for Kids
- Certificate in Mass Media
- Certificate in Journalism
- Certificate in Social media
- Certificate in Media Ethics and Code
- Certificate in Psychology .
- Diploma in Mass Media
- Diploma in Journalism (For School leavers)
- Diploma in Audio production
- Diploma in Video production
- Higher Diploma in Mass Media
- Higher Diploma in Video and Studio production

NBC ஊடக வலையமைப்பின், கலக்கல் வானொலியில் நீங்களும் அறிவிப்பாளராகலாம்

**நகைச்சுவை உணர்வுள்ள ஒருவரா?**
**நகைச்சுவையாக பேசி மற்றவர்களை சிரிக்க சிந்திக்க வைக்கும்**
**ஆற்றல் படைத்தவரா? நீங்கள்!**
**இணைந்து கொள்ளுங்கள்...! சத்தம் FM இல்**

NBC Radio Networks

**HOTLINE : 0777 47 57 83**

**Head Office**
North Mass Media College
28/3, Station Road,
Vairavapuliyankulam, Vavuniya
024 561 5610

**Branches**

#221, Kandy Road,
Jaffna.
021 300 4363

63A, Post Office Road,
Trincomalee.
026 222 6757